





# வருடாந்த அறிக்கை 2019

## தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பற்றி | 2 |
| எங்களின் தொலைநோக்கு | 3 |
| எங்களின் செயற்பணி | 3 |
| நாங்கள் யார் | 4 |
| எமது கூட்டிணைவுப் பெறுமதிகள் | 5 |
| நிதியியல் முனைப்புறுத்தல்கள் | 6 |
| இலக்குகளும் குறிக்கோள்களும் | 7 |
| தலைவரின் செய்தி | 8 |
| பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 9 |
| முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | 10 |
| சூழல் மீளாய்வு | 11 |
| நிதியியல் மீளாய்வு | 12 |
| பிரிவு மீளாய்வு | 13 |
| ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | 16 |
| நிறுவன ஆளுகை | 17 |
| பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் - 2019 | 20 |
| பணிப்பாளர் சபையின் விபரங்கள் | 21 |
| கூட்டிணைந்த மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2019 | 22 |
| நிறுவன இடர் முகாமைத்துவம் | 24 |
| நிலைபேறான அறிக்கையிடல் | 26 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 27 |
| நிதியியல் அறிக்கைகள் | 29 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 30 |
| நிதி நிலைமைக் கூற்று | 42 |
| துணைத் தகவல்கள் | 80 |
| தசாப்தம் ஒரே பார்வையில் | 81 |
| கூட்டுரிமைத் தகவல்கள் | 83 |



# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பற்றி

# எங்களின் தொலைநோக்கு மற்றும் எங்களின் செயற்பணி

## எங்களின் தொலைநோக்கு

அனைத்துத் தேவையுடைய துறைகளுக்கும் பாதுகாப்பான வலையமைப்பினையும் பாதுகாப்பினையும் அளித்தல்.

## எங்களின் செயற்பணி

கீழ்க்காணும் செயற்பாடுகளினூடாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குதல்.

சமூகத்திலுள்ள அனைத்துத் தேவையுடைய துறைகளுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய, வினைத்திறன் வாய்ந்த மற்றும் முன்னேற்றகரமான காப்புறுதிச் செயற்திட்டங்களை வழங்குதல்.

ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளினூடாக மாறிவரும் தேவைகளிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான இடர்களினை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டுச் சந்தைகளுக்கான தீர்வுகளினை வழங்குதல்.

உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக சக்தியினை வழங்கும் நோக்குடன் இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தையினை உருவாக்குதல்.

# நாங்கள் யார்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பு மீள்காப்புறுதி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி, அக்ரஹார மருத்துவக் காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதி, தேசிய இடர் காப்புறுதிக் காப்பீடுகள் உள்ளடங்கலாக ஏனைய வகைகளான பொதுக் காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின்படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி நிதியம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் ஆரம்பத்தில் நிர்வகிக்கப்பட்டதுடன், அது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்வாங்கப்பட்டது. அதேவேளையில், அதன்பின்னர் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அனைத்து காப்புறுதிப் பூட்கையாளர்களும் சேகரித்த தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பாக செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் 31 டிசம்பர் 2012ஆம் திகதி வெளியிடப்பட்ட 1791/4ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனைத்து முதல்நிலை காப்புறுதியாளர்களும் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி ஒப்பந்தத்தினால் எழும் மொத்த மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தில் 30% வீதத்தை இணங்கி ஒப்புவித்தல் வேண்டும். அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 12/2005இன் கீழ் அமுல்படுத்தப்பட்டதுடன், 1 ஜனவரி 2006இல் இருந்து அது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் வந்தது. இதனூடாக திருமணமான அங்கத்தவர், அவரது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளுக்கும் (அவர்கள் 21 வயது அல்லது அதற்கு குறைவான திருமணமாகாத மறறும் தொழில்புரியாதவர்களுக்கு) மற்றும் திருமணமாகாத அங்கத்தவர், அவருடைய பெற்றோர் (அவருடைய பெற்றோர் 70 வயதிற்குக் கீழ் இருந்தால் மாத்திரம்) என்பவர்களுக்குக் காப்புறுதி நன்மைகள் வழங்கப்படுகின்றது.

குறைந்த தவணைக் கட்டணத்தில் பல்வேறு நன்மைகளை வழங்குதல், பிரதான போட்டித்தன்மையாக அமைவதுடன், கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் செலுத்துதல் என்பவற்றை உரிய நேரத்தில் மேற்கொள்ளுவதில் நாட்டின் மிகச்சிறந்தவற்றில் ஒன்றாகத் திகழ்கின்றது. புதிய தொழில்நுட்பத்தை இணைத்துக்கொள்வதன் ஊடாக எங்கள் உள்ளக மற்றும் வெளிவாரி வினைத்திறனை மேம்படுத்திய அதேவேளை கீழ்மட்டம் வரை பங்களிப்பினை வழங்குகின்றது.

# எமது கூட்டிணைவுப் பெறுமதிகள்

நிலையான தாபனமென்ற வகையில் எமது ஆறு முக்கிய கூட்டிணைவுப் பெறுமதிகளும் எமது தொழில்முயற்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கான நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டியும்

**வாடிக்கையாளர் நலன் பேணல்**

**நல்லிணக்கம்**

**தரம்**

**கௌரவம்**

**புத்தாக்கம்**

**தொடர்ச்சியான மேம்படுத்தல்**

# நிதியியல் முனைப்புறுத்தல்கள்

**அட்டவணை: நிதியியல் முனைப்புறுத்தல்கள்**

| | 2019<br>இ.ரு | 2018<br>இ.ரு |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 12,693,194,645 | 9,683,874,748 |
| தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் | 16,448,026,766 | 13,653,431,467 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 3,008,486,066 | 3,288,839,528 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 3,114,086,727 | 3,183,238,866 |
| மொத்தச் சொத்துகள் | 20,706,947,980 | 15,595,192,598 |
| சொத்துகளின் மீதான வருமானம் (%) | 15.04% | 20.41% |

# இலக்குகளும் குறிக்கோள்களும்

1. வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் தக்கவைத்துக் கொள்வதற்காக புதிய கூட்டிணைந்த கட்டமைப்புடன் இரண்டு துணை நிறுவனங்களை (மீள்காப்புறுதிக்காகவொன்று மற்றையது பொதுக்காப்புறுதிக்காக) உருவாக்கல்

2. புதிதாக நிறுவப்பட்ட சிறந்தவகையில் மூலதனமிடப்பட்ட மீள்காப்புறுதிக் கம்பனியின் ஊடாகப் பிராந்தியத்தில் சிறந்த மீள்காப்புறுதி நிறுவனமாக உருவாதல்.

3. வருமானச் செலவுச் சமநிலைப் புள்ளியை அடைவதன் ஊடாக அனைத்து சமூகம் சார்ந்த காப்புறுதித் திட்டங்களையும் (அக்ரஹார, என்என்டிஐஎ) மற்றும் பயிர் காப்புறுதி) நிலைபேறாக உருவாக்கல்

4. பொதுக் காப்புறுதிக் கம்பனியின் இலாபத்திற்குக் குறிப்பிட்டளவில் பங்களிப்பு வழங்குனராக வணிக பொதுக் காப்புறுதி வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல்.

5. புதிய வளாகத்தில் புதிய வாடிக்கையாளர் நிலையம் மற்றும் அழைப்பு நிலையத்தை நிர்மாணிப்பதன் ஊடாக அரசாங்கத் துறையில் சிறந்த வாடிக்கையாளர் சேவை வழங்குனராகத் திகழ்தல்.

# தலைவரின் செய்தி

### 2019ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின் சமர்ப்பித்தல்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் 2019ஆம் ஆண்டுக்கான முனைப்புறுத்தல்களை மீள நினைவூட்டுவதுடன் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சவாலான பாரிய பொருளாதாரச் சூழலின் மத்தியிலும் கைத்தொழிற்துறையில் காணப்பட்ட போட்டித்தன்மைக்கிடையிலும் எங்கள் நலன்விரும்பிகளுக்கு குறிப்பிடத்தக்களவில் பெறுமதி சேர்ப்பினை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் சேர்த்துக்கொள்ள முடிந்தது. இது பலத்தில் இருந்து பலமாக எங்கள் வளச்சிக்கு உறுதுணையாகவுள்ளது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றுகையும் பங்களிப்பும்

காப்புறுதிச் சந்தையானது மந்தமடைந்துள்ள வேளையில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2018ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 9.7 பில்லியன் தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு ரூபா 12.7 பில்லியனைப் பெற்று நடுநிலையான வளர்சியைப் பதிவு செய்தது. இந்தச் சாதனையை மேலும் வலுப்படுத்தும் வகையில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2018ஆம் ஆண்டு பதிவுசெய்த வரிக்குப் பின்னரான இலாபமான ரூபா 3.114 பில்லியன் 2019ஆம் ஆண்டில் ரூபா 3.183 பில்லியனாக அதிகரித்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பிட்ச் தரப்படுத்தலில் (Fitch rating) AA-(lka) தரத்தைப் பெற்றுக்கொண்டு, 2019ஆம் ஆண்டுக்கான அதன் பலமான நிதி நிலையை உறுதிசெய்தது.

### பாராட்டு

நான் இந்த நிறுவனத்தை செயற்படுத்தும் கௌரவ நிதி அமைச்சர், செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கு அவர்கள் வழங்கிய ஆதரவுக்கும் வழிகாட்டலுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் மிக நெருக்கமாகச் செயற்படும் திறைசேரிச் செயலாளர் மற்றும் திறைசேரி அலுலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனது மனமார்ந்த நன்றிகளை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் அலுவலர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். இறுதியாக இந்த வருடம் முழுவதும் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் அதன் ஊழியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.



**மவாஹிப் மவ்ஜூட்**
**தலைவர்**
27.12.2020

# பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

சவாலான பாரிய பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் தொடரச்சியான கடுமையான கைத்தொழிற்துறைப் போட்டியின் மத்தியிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி, தேறிய இலாப வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர் சேவை எனக் குறிப்பிடத்தக்க செயலாற்றுகையினை 2019ஆம் ஆண்டில் வெளிப்படுத்தியது என்பதனைத் தெரிவிக்க விரும்புகின்றேன். கடந்த இரு வருடங்களில் காணப்பட்ட வெள்ளம் காரணமாக பாரியளவான கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்ட போதிலும், அதன் பின்னர் காணப்பட்ட நிதி நிலமை நிலைபேற்றினை பிரதிபலிக்கும் வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உறுதியை சான்றுபடுத்தும் வகையில் பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனத்திடமிருந்து AA- credit தரப்படுத்தலை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பெற்றுக்கொண்டமையை வலியுறுத்திக் கூறுவது மிக முக்கியமானதாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சவாலான சூழலில் பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனத்திடமிருந்து AA-credit தரப்படுத்தலை பெற்றுக்கொண்டமையானது அதன் நிதியியல் நிலைத்திருப்பை பிரதிபலிப்பதன் ஊடாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### 2019ஆம் ஆண்டின் முன்னேற்றம்

போட்டியான பாரிய பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் கைத்தொழிற்துறையின் சக துறையினரின் போட்டி என்பவற்றுக்கு மத்தியில் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி சிறந்த நிதியியல் நிலமை மற்றும் நிதியியல் செயலாற்றுகை என்பவற்றை வெளிப்படுத்தியதுடன், கைத்தொழிற்துறையில் நிலைத்திருந்தது. 2019ஆம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 12.693 பில்லியனைப் பதிவுசெய்ததுடன், இது 2018ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 9.683 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 31% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் மீள் காப்புறுதி, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம் மற்றும் தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டங்களில் இருந்தான மொத்தத் தவணைக் கட்டண அதிகரிப்பாகும். அதேபோல் 2019ஆம் ஆண்டில் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணமும் 2018ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 13.653 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 16.448 பில்லியனாக 20% வீதத்தினால் வளர்சியைப் பதிவு செய்தது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9.690 பில்லியன் பெறுமதியான தேறிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் கொடுப்பனவும் 2019ஆம் ஆண்டு ரூபா 9.690 பில்லியனாக 25% வீதமாக சற்று அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்குக் காரணம் 2018 இல் இருந்து 2019 வரை அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாகும். அத்துடன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியிருந்த போதிலும், தேறிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் கொடுப்பனவு 25% வீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக வரிக்குப் பின்னரான இலாபமானது 2018இல் 3.183 பில்லியனாக காணப்பட்டதுடன் இது 2019 இல் ரூபா 3.114 பில்லியனாக சற்றுக் குறைவடைந்துள்ளது.

தேறிய நம்பிக்கை நிதியத்தின் மொத்த சொத்துகள் 2018ஆம் ஆண்டில் ரூபா 15.595 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2019 ஆம் ஆண்டில் ரூபா 20.706 பில்லியனாக மிதமான வளர்சியைப் பெற்றதுடன், 2018ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்த உரிமைப்பங்கு ரூபா 6.956 பில்லியன் 2019ஆம் ஆண்டில் ரூபா 7.191 பில்லியனாக சற்று அதிகரித்துள்ளது. கடன்கள் மற்றும் பெறுவனவுகள் அதிகரித்தமை காரணமாக நிதியியல் சொத்துக்கள் 10.7 பில்லியனில் இருந்து 2019 இல் 15.4 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் இது 43.9% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2018ஆம் ஆண்டில் ரூபா 29.363 மில்லியனாக இருந்ததுடன் இது 2019 இல் 37.92% வீதத்தினால் அதிகரித்து ரூபா 40.497 மில்லியன் பெறுமதியை வெளிப்படுத்தியது.

### பாராட்டுகள்

நான் எனது நன்றியை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவத்திற்கு அதன் அர்ப்பணிப்புக்காகவும் 2019ஆம் ஆண்டின் வெற்றிக்குத் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை முன்னோக்கிக் கொண்டு சென்றமைக்காகவும் மற்றும் எங்கள் ஊழியர்கள் நிறுவனத்திற்கு வழங்கிய தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்காகவும் தெரிவிக்க விரும்புகின்றேன். அத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு அவர்களுடைய நிரந்தரமான மற்றும் உண்மையான ஒத்துழைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும், பணிப்பாளர் சபை தலைவர் மற்றும் அங்கத்தவர்கள், நிதி அமைச்சின் அலுவலர்கள் மற்றும் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் அலுவலர்கள் 2019ஆம் ஆண்டில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். சிறந்த எதிர்காலத்துடன் சமூகப் பாதுகாப்புக்குப் பங்களிப்பை வழங்கி மக்களைக் காப்பதற்கு முன்னோக்கிச் செல்ல விரும்புகின்றேன்.



**மஞ்சுல ஹெட்டியாராச்சி**
**பிரதான நிறைவேற்று அலுவலர் (பதில் கடமை)**
08.03.2021



# முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

# சூழல் மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வணிகத் தொழிற்பாடுகள் பாரிய பொருளாதார மாற்றங்களினால் பெருமளவில் தாக்கமடைகின்றது என்பதை அறிந்துள்ளது. இதற்குக் காரணம் இலங்கையில் உள்ள அனைத்து பொருளாதார அபிவிருத்திகளும் தோல்வியின் இடருடன் கொண்டு நடாத்தப்படுவதுடன் இது இலங்கையில் உள்ள காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து காப்புறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொள்வதன் ஊடாகத் தீர்க்கப்படுகின்றது. இதன் விளைவாக காப்புறுதிக் கம்பனிகள் அவற்றினுடைய இடர்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் 30% வீதத்தினையும் மிகுதியை வெளிநாட்டு மீள்காப்புறுதிக் கம்பனியிடமும் மீள் காப்புறுதி செய்வதன் ஊடாக மாற்றுகின்றன. அதனால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் உபாயமார்க்கத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பேரினப் பொருளாதார அபிவிருத்திகளையும் கருத்தில் கொள்கின்றது.

### இலங்கைப் பொருளாதாரம்

2019இல் இலங்கையின் திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி 84 பில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன் கொள்வனவுச் சக்தி சமநிலை மூலம் 296.959 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பிராந்தியத்தில் உள்ள சகநாடுகளுக்கு மேலாக நாடு 2003 இல் இருந்து 2021 வரை 6.4 சதவீத வருடாந்த வளரச்சியை அனுபவித்ததுடன், இப்போது சற்று மந்தமடைகின்றது. 2019இல் தலா வருமானம் 13,620 கொள்வனவுச் சக்தி சமநிலை டொலர்கள் அல்லது 3,852 (2019) பெயரளவு அமெரிக்க டொலர்கள் ஆவதுடன், இலங்கை உலக வங்கியினால் உயர் மத்திய வருமான நிலையில் இருந்து குறைந்த நடுநிலை வருமானம் பெறும் நாடாக மீள் வகைப்படுத்தப்பட்டது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வறுமையைப் பாதியாகக் குறைக்கும் மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள் இலக்கினை இலங்கை அடைந்துள்ளதுடன் ஏனைய மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்குரிய வழியில் உள்ளது. இலங்கையின் 2016இன் வறுமைத் தலை எண்ணிக்கை சுட்டெண் 4.1% ஆகும். மூன்று தசாப்த சிவில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், இலங்கை உயர் நடுநிலை வருமானம் பெறும் நாடாக இலங்கையை மாற்றுவதற்காக நீண்ட கால உபாயமார்க்க மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி சவால்கள் மீது கவனத்தைத் திருப்பியது. இலங்கை சமூகச் சேர்க்கை, ஆளுகை மற்றும் நிலைபேற்றில் சவால்களை எதிர்கொள்ளுகின்றது.

### இலங்கையின் காப்புறுதிக் கைத்தொழிற்துறை

இலங்கையின் காப்புறுதித்துறை 2019இன் இறுதியில் 27 காப்புறுதிக் கம்பனிகளையும் 67 காப்புறுதி தரகுக் கம்பனிகளையும் 16 நட்ட சீராக்கலாளர்களையும் கொண்டுள்ளது. இந்த 27 காப்புறுதியாளர்களில் 13 காப்புறுதியாளர்கள் ஆயுட் காப்புறுதி வியாபாரத்தையும் 12 காப்புறுதியாளர்கள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் இரு காப்புறுதியாளர்கள் கலவை காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளுகின்றனர்.

இந்த வருடம் சீமாசகித்த சனச ரக்ஷன சமாகம எனும் கலவைக் காப்புறுதியாளர் சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் மற்றும் சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் எனும் பெயர்களில் முறையே நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் இரு வேறு நிறுவனங்களாக மாற்றியமைத்தார்கள். கடந்த இரு வருடங்களில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் புதிய பதிவுகள் 60 இலிருந்து 67 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கை காப்புறுதிக் கைத்தொழிற்துறை 2019இல் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத் துறைகளில் 8.64% வீத வளர்ச்சியை அடைந்தது. இரு துறைகளையும் சேர்த்து மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் 2018இல் ரூபா 180,880 மில்லியனாவதுடன், 2019இல் இது ரூபா 15,633 மில்லியனால் அதிகரித்து மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் ரூபா 196,513 மில்லியன் ஆகும்.

நீண்ட கால காப்புறுதித் துறை 2018ஆம் ஆண்டில் உருவாக்கிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான ரூபா 80,294 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2019இல் 10.57% வீதத்தினால் அதிகரித்து ரூபா 88,781 மில்லியனை உருவாக்கியது. பொதுக் காப்புறுதித் துறை 2018ஆம் ஆண்டில் உருவாக்கிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான ரூபா 100,586 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2019இல் 7.10% வீதத்தினால் அதிகரித்து ரூபா 107,72 மில்லியனை உருவாக்கியது.

# நிதியியல் மீளாய்வு

**நிதிச் சிறப்பம்சங்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.**

| | 2019<br>LKR | 2018<br>LKR | 2017<br>LKR |
|---|---|---|---|
| மொத்தச் சொத்துகள் | 20,706,947,980 | 15,595,192,598 | 18,552,675,429 |
| திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு | 3,267,970,000 | 2,750,000,000 | 1,500,000,000 |
| மென் கடன்கள் | 3,754,982 | 5,725,010 | 14,069,897 |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 12,693,194,645 | 9,683,874,748 | 9,071,278,467 |
| தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் | 16,448,026,766 | 13,653,431,467 | 11,613,828982 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 3,008,486,066 | 3,288,839,528 | 1,077,185,612 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 3,114,086,727 | 3,183,238,866 | 976,233,935 |
| தேசிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் | 12,079,317,814 | 9,690,648,221 | 9,900,699,368 |
| நிதியியல் சொத்துகள் | 15,444,667,263 | 10,674,617,497 | 8,161,427,792 |
| பிட்ச் தரப்படுத்தல் | AA- | AA- | AA- |
| சொத்துகளின் மீதான வருமானம் (%) | 15.04% | 20.41% | 5.26% |

2019ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2018ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ரூபா 9.68 பில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு எதிராக ரூபா 12.693 பில்லியனைப் பெற்றுக்கொண்டது. இது 31% சதவீத வளர்ச்சியாகும். தேறிய உழைக்கப்பட்ட வருமானது 2018ஆம் ஆண்டில் ரூபா 13.653 பில்லியனாக இருந்ததுடன், இது 20.4% வீதத்தினால் அதிகரித்து 2019ஆம் ஆண்டில் ரூபா 16.448 பில்லியனாக உயர்ந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தேறிய எழுதப்பட்ட தவணைக்கட்டணம் 2018 இல் ரூபா 13.353 பில்லியனாக இருந்ததுடன், 2019ஆம் ஆண்டு 35.70% வீதத்தினால் மிதமாக அதிகரித்து ரூபா 18.120 பில்லியனைப் பதிவு செய்தது. இதற்குப் பிரதான காரணம் தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம், வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம் மற்றும் உள்முக மீள்காப்புறுதியாகும்.

தேறிய நன்மைகள் மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட கோரிக்கைகள் 2018ஆம் ஆண்டில் ரூபா 9.690 பில்லியனாக இருந்து 25% வீதத்தினால் அதிகரித்து 2019ஆம் ஆண்டில் ரூபா 12.079 பில்லியனாக உயர்ந்தது. இதற்குக் காரணம் 2018 இல் இருந்து 2019 வரை மேற்கொள்ளப்பட்ட அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான கோரிக்கைக் கொடுப்பனவு அதிகரித்தமையாகும். அத்துடன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதிலும் வரிக்குப் பின்னரான இலாபம் என்பன தேறிய கொடுப்பனவுகள் மற்றும் கோரிக்கைக் கொடுப்பனவுகள் 25% வீதத்தினால் அதிகரித்தமையினால் 2018 இல் ரூபா 3.183 பில்லியனில் இருந்து ரூபா 3.114 பில்லியனாக சற்று வீழ்ச்சியடைந்தது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் திரட்டிய நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட தொகை 2018இல் ரூபா 2.750 பில்லியனாக இருந்து 2019 இல் ரூபா 3.268 பில்லியனாக அதிகரித்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சொத்தக்கள் 2018இல் ரூபா 6.956 பில்லியனாக இருந்த மொத்த உரிமைப் பங்கு 2019இல் ரூபா 7.191 பில்லியனாக சற்று அதிகரித்தமையினால், 2018இல் ரூபா 15.595 பில்லியனில் இருந்து 2019இல் 20.706 பில்லியனாக அதிகரித்தது. சொத்துக்கள் மீதான வருமானம் 2018இல் 20.41% வீதமாக இருந்து 2019 இல் 15.04% வீதமாக வீழ்ச்சியடைந்தது.

மென் கடன்கள் 2018இல் ரூபா 5.725 மில்லியனில் இருந்து 2019இல் ரூபா 3.754 மில்லியனாக 34% வீதத்தினால் குறைவடைந்தது. கடன்கள் மற்றும் பெறுவனவுகள் அதிகரித்தமை காரணமாக நிதியியல் சொத்தக்கள் 10.7 பில்லியனில் இருந்து 2019 இல் 15.4 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் இது 43.9% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2018ஆம் ஆண்டில் ரூபா 29.363 மில்லியனாக இருந்ததுடன் இது 2019 இல் 37.92% வீதத்தினால் அதிகரித்து ரூபா 40.497 மில்லியன் பெறுமதியை வெளிப்படுத்தியது.

### வருமான மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருமானம் கீழே குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருமானத்திற்கான காப்புறுதி வகைகள் 2019 மற்றும் 2018**

| | 2019 | 2018 | வளர்ச்சி |
|---|---|---|---|
| உள்முக மீள்காப்புறுதி | 4,173,714,909 | 4,056,395,150 | 2.89% |
| SRCC & T தவணைக் கட்டணம் | 6,307,350,365 | 4,581,640,544 | 37.67% |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 390,150,125 | 422,117,039 | -7.57% |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | 301,979,249 | 103,722,015 | 191.14% |
| தேசிய இயற்கை இடர் தவணைக் கட்டணம் | 1,500,000,000 | 500,000,000 | 200% |
| பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான மருத்துவத் திட்டம் | 20,000,000 | 20,000,000 | 0.00% |
| அக்ரஹாரவிற்காகக் கிடைத்த பங்களிப்பு | 4,838,723,551 | 4,017,420,904 | 20.44% |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதித் தீர்வை | 1,780,338,987 | 2,138,167,676 | -16.73% |

# பிரிவு மீளாய்வு

### அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம்

அக்ரஹார என்பது 890,000 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கையின் மிகப் பெரிய காப்புறுதித் திட்டமாகும். இந்த திட்டத்தின் நன்மைகள் குடும்ப அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படுவதனால் 2.8 மில்லியன் இலங்கையர்களை இது அணவல் செய்கின்றது. இத்திட்டத்திற்கு அனைத்து ஓய்வூதியத்திற்குத் தகைமை பெற்றுள்ள அரசாங்க அலுவலர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து ஒரு பெயரளவான பங்களிப்பு கழிக்கப்படுகின்றது.

2019 நிதியாண்டில் திறைசேரியிடமிருந்து ரூபா 767.8 மில்லியன் பங்களிப்பாக கிடைக்கப்பெற்றதுடன், ரூபா 3.6 பில்லியன் அங்கத்தவர்களின் பங்களிப்பாகக் கிடைக்கப்பெற்றது. இந்த வருடத்தில் ரூபா 5.3 பில்லியன் மருத்துவக் காப்புறுதிக் கோரிக்கைகள் வழங்கப்பட்டது.

### அட்டவணை: வருமானத்தின் வகைப்படுத்தல்

| | 2019 LKR | 2018 LKR |
|---|---|---|
| அங்கத்தவர்களின் பங்களிப்பு | 3,617,114,527 | 2,979,518,379 |
| திறைசேரியின் பங்களிப்பு | 767,970,000 | 750,000,000 |
| அக்ரஹார ஓய்வூதியத் திட்டம் | 142,321,400 | 101,282,200 |
| அரை அரசாங்கத்திட்டம் | 311,317,625 | 206,620,325 |
| மொத்தப் பங்களிப்பு | 4,838,723,551 | 4,017,420,904 |

### அட்டவணை: கோரிக்கைகளின் விபரம்

| கோரிக்கைகளின் வகை | கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை - 2019 | கொடுப்பனவு செய்யப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை - 2019 | நிலுவைக் கோரிக்கைகள் - 2019 |
|---|---|---|---|
| மரணம் | 1,412 | 1,204 | 114 |
| விபத்து | 211 | 154 | 27 |
| குழந்தை பிறப்பு | 22,019 | 20,823 | 996 |
| மூளை சத்திர சிகிச்சை | 35 | 35 | - |
| புற்றுநோய் | 2,136 | 1,969 | 130 |
| இதயநோய்கள் | 1,110 | 1,091 | 15 |
| தனியார் வைத்தியசாலை | 32,834 | 27,240 | 3,201 |
| HIP பதிலீடு | 9 | 9 | 3 |
| சிறுநீரகம் | 94 | 94 | 2 |
| முழங்கால் மீள்பொருத்தல் | 22 | 22 | 1 |
| சேவிப்புலன் கருவி பொருத்தல்கள் | 12 | 12 | 1 |
| பக்கவாதம் | 4 | 4 | 2 |
| அரசாங்க வைத்தியசாலை | 85,456 | 77,790 | 4,201 |
| கண்ணாடி | 84,675 | 75,913 | 3,637 |
| **மொத்தம்** | **230,029** | **206,360** | **12,330** |

# பிரிவு மீளாய்வு

### அரசாங்கத் துறையினருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டம்

அரசாங்க துறையினருக்கு 2016இல், அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்களுக்கு தகைமை பெறுவதற்கு அவர்களின் பங்களிப்பை முறையே ரூபா 600 மற்றும் ரூபா 300 ஆக அதிகரிப்பதற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்திருத்தல் வேண்டும்.

### பகுதி அரசாங்கத்துறையினருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளி

அரை அரசாங்க துறையினருக்கு 2016இல், அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

### அக்ரஹார ஓய்வூதியத் திட்டம்

அக்ரஹார ஓய்வூதியத் திட்டம் 2016 மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இந்தக் காப்புறுதி வகைக்குக் கிடைத்த கேள்வி காரணமாக 2017ஆம் ஆண்டு மேலும் இது விரிவாக்கப்பட்டது. இந்த ஓய்வூதியத்திட்டமானது, 01 ஜனவரி 2016இற்குப் பின்னர் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த ஓய்வூதியத்திட்டம் பிரயோகிகப்படும்.

### அக்ரஹார E- Cards

2012 ஜனவரியில், அக்ரஹார பயன்பெறுபவர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக E-card கள் விநியோகிக்கப்பட்டது. 2017இல் அக்ரஹார வெள்ளி மற்றும் தங்க வகை அங்கத்தவர்களுக்கு வேறான தங்க மற்றும் வெள்ளி E-card களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் விநியோகித்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அக்ரஹார அங்கத்தவர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காக பல்வேறுபட்ட தனியார் வைத்தியசாலைகளுடன் ஒப்பந்தங்களுக்கு வந்துள்ளது.

### மீள்காப்புறுதி

இலங்கையில் உள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 20% வீதத்தினை மீள்காப்புறுதியாக ஏற்றுக்கொள்வதற்காக 19 டிசம்பர் 2007ஆம் திகதி வெளியிடப்பட்ட 1528/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக மீள்காப்புறுதித் திணைக்களம் 2008ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது 2012ஆம் ஆண்டு வரை தொடரப்பட்டது. 2013இல் இத்தொகை 30% வீதமாக அதிகரிக்கப்பட்டு இன்று வரை தொடரப்படுகின்றது.

2019இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஐந்தொகையைப் பாதுகாப்பதற்காக 15 செப்டெம்பர் 2019 வரையில் மீண்டும் மீண்டும் மீள்காப்புறுதியை நீடித்து அதற்குரிய அமைச்சுடன் உடன்பாட்டுக்கு வந்ததுடன் மீள்காப்புறுதி காப்பீட்டுத் தொகையையும் 7.5 பில்லியனாக வரையறுத்தது. மீள்காப்புறுதித் தளத்தில் தலைமைத்துவ மீள் காப்புறுதியாளர் ரினைன்சி ரி ஆகும்.

பின்னடைவு காப்பீட்டுக்கு மேலதிகமாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவர்களுடைய பொறுப்பினை 10 பில்லயன் வரை பாதுகாப்பதற்காக வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்திற்காக மீள்காப்புறுதிக் காப்பீட்டைப் பெற்றுக்கொண்டது.

| மீள்காப்புறுதி | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - உள்முகக் காப்புறுதி | 4,173,714,909 | 4,056,395,150 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (2,476,072,216) | (2,345,202,622) |

### வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம்

2008 மார்ச் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1542/11ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, இலங்கையில் பதிவு செய்துள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான இடர்களைப் பெற்றுக்கொண்ட காப்புறுதியாளர்களுக்குக் காப்பீட்டினை வழங்குவதற்கான பணி வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்திற்குச் சாட்டப்பட்டுள்ளது.

2019இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஐந்தொகையைப் பாதுகாப்பதற்காக வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்திற்கான காப்பீட்டை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நீடித்து அதற்குரிய அமைச்சுடன் உடன்பாட்டுக்கு வந்ததுடன் மீள்காப்புறுதிக் காப்பீட்டுத் தொகையையும் 7.5 பில்லியனாக வரையறுத்தது. மீள்காப்புறுதித் தளத்தில் தலைமைத்துவ மீள் காப்புறுதியாளர் சௌசர் சின்டிகேட் 1084 ஆகும்.

2019இல், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத் திணைக்களத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 6,307 மில்லயன் ஆவதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 418 மில்லியன் ஆகும். 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 38% வீதத்தினால் அதிகரித்ததுடன் கோரிக்கைகளுக்கான கொடுப்பனவு 734% வீதத்தினால் அதிகரித்திருந்தது

| வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம் | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - SRCCT நிதி | 6,307,350,365 | 4,581,640,544 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (417,783,502) | (50,085,704) |

### மோட்டார் காப்புறுதி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு மோட்டார் காப்புறுதித் திட்டம் 2008ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைவாக, அரசாங்க சுற்றுநிருப இலக்கம் பிஎப் 427 மற்றும் அதற்கு பின்னரான பிஎப் 437இற்கு அமைவாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்கள் மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாத காப்புறுதிகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடம் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான காப்புறுதிக் கம்பனியிடம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் சேவைகளை தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கும் நீடித்ததுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து தனியார் வாடிக்கையாளர்களின் தவணைக் கட்டணப் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2017ஆம் ஆண்டு அரச சார் அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் உள்ளடங்கலாக அரசாங்க அலுவலர்களுக்கு “அக்ரஹார மோட்டார்” எனும் புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன், மோட்டார் காப்புறுதிப் பிரிவில் பிரதான இலாபமீட்டும் பகுதியாகவும் அமைந்துள்ளது.

ஒரு முழுமையான அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தாங்கிக்கொள்ளக்கூடிய தவணைக் கட்டணத்தில் அரசாங்க நிறுவனத்திற்கு விரிவான மற்றும் மூன்றாந்தரப்பு காப்புறுதிக் காப்பீடுகளை வழங்குகின்றது. மேலதிகக் கட்டணங்களை செலுத்துவதன் ஊடாக மேலதிக காப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# பிரிவு மீளாய்வு

| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - மோட்டார் | 390,150,125 | 422,117,039 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (257,432,249) | (208,043,768) |

### மோட்டார் அல்லாதவை

2009.08.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1615/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் பொதுக் காப்புறுதி வியாபாரம் (மோட்டார் அல்லாதவை) ஆரம்பிக்கப்பட்டதுடன் வருடகாலங்களாக அது படிப்படியாக வளர்ந்தது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொதுக் காப்புறுதி வியாபாரம் தீ மற்றும் பொறியியல் காப்புறுதி, சத்திரசிகிச்சைக் காப்புறுதி, கடல் காப்புறுதி மற்றும் நானாவித காப்புறுதி எனும் உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - மோட்டார் அல்லாதவை | 301,979,246 | 103,722,015 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (307,223,184) | (469,755,602) |

பொதுக் காப்புறுதி மோட்டார் அல்லாத கோரிக்கைகள் திணைக்களம் 24 மணி நேரமும் வாடிக்கையாளர்களுக்காகச் செயற்படுகின்றது. பொதுக் காப்புறுதிக் கோரிக்கைகள் திணைக்களம் அனைத்து வகையான கோரிக்கைகளுக்கும் நடைமுறைகளை வைத்துள்ளதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை தயாரிக்கப்படுவதுடன், கோரிக்கைகள் தாமதமின்றி கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

### தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஊடாக 2016ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக தேசிய இயற்கை இடர் காப்புறுதித்திட்டம் உருவாக்கப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இந்தத்திட்டதிற்கான தவணைக் கட்டணமாக இ.ரூபா 1500 மில்லியனை 2019/2020ஆம் ஆண்டுக்காகப் பெற்றுக்கொண்டுள்ளது காரணம் கடந்த வருடத்தில் உயர்ந்தளவு கோரிக்கைகள் காணப்பட்டது. 2018/2019ஆம் ஆண்டுக்கான தவணைக் கட்டணம் 500 மில்லியனாவதுடன் 2019/2020ஆம் ஆண்டு சில நன்மைகளும் அதிகரித்துள்ளது. இந்தக் காப்புறுதித் திட்டம் வரட்சி தவிர்த்து சூறாவளி, கடும் புயல், உயர் வெப்பம், வெள்ளம், மண் சரிவு, சுழல் காற்று, நிலநடுக்கம், சுனாமி, கடும் காற்றின் காரணமாக மரங்கள் விழுதல், பாதுகாப்பு சுவர் உடைந்து விழுதல் மற்றும் அதுபோன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக உயிர்கள் மற்றும் காப்புறுதி செய்யப்படாத ஆதனங்கள், விசேடமாக அனைத்துக் குடியிருப்புகள் மற்றும் சிறிய வியாபார தொழில்முயற்சிகள் (வருடாந்தப் புரள்வு ரூபா 10 மில்லியனைத் தாண்டாத எந்தவொரு வியாபாரமும்) போன்றவற்றுக்கு வருடத்திற்கு ரூபா 10 பில்லியன் வரையான பொதுவான காப்பீட்டை வழங்குகின்றது. காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்துள்ள பாரிய வியாபாரங்களின் ஆதனச் சேதம் விலக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்துள்ள அனைத்து மீனவர்களுக்கும் அவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் விபத்தினால் மரணமடைந்தால், அவ்வேளையில் ரூபா 1 மில்லியன் காப்பீடு வழங்கப்படுகின்றது. இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைந்த ஏனையவர்களுக்கு விபத்தினால் மரணமடைந்தால் தனியாள் விபத்துக் காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் ரூபா 250,000 கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

| இயற்கை அனர்த்தம் | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - இயற்கை அனர்த்தம் | 1,500,000,000 | 500,000,000 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (610,466,501) | (843,784,556) |

### விவசாயக் கடன் பாதுகாப்பு காப்புறுதித் திட்டம்

அனைத்துக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக 1% வீத பயிர் தீர்வை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் சேகரிக்கப்படுகின்றதுடன் அவர்களுடைய தேவைப்பாட்டுக்கு அமைவாக அந்த நிதி விவசாய கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு மாற்றப்படுகின்றதுடன். வெள்ளம், வரட்சி, யானைத் தாக்குதல் காரணமாக ஏற்படும் நட்டங்களுக்கு பயிர் தீர்வை நிதியைப் பயன்படுத்தி ரூபா 10,000 வரையான கோரிக்கைகளுக்கு விவசாயிகளுக்கு விவசாயக் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.



# ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு

# நிறுவன ஆளுகை

### முன்னுரை

தொழில்முயற்சி ஆளுகை என்பது நிறுவனத்தின் கூட்டிணைந்த ஆளுகை மற்றும் வியாபார ஆளுகைச் சட்டகத்தை விளக்கும் வளர்ந்துவரும் பதமாகும். சிறந்த கூட்டிணைந்த ஆளுகை என்பது, அது அவர்களுடைய வியாபாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு செயலாற்றுகை முகாமைத்துவத்துடன் உபாயமாரக்கமாக இணைக்கப்பட்டுள்ளதென்பதாகும். இது சவால் மற்றும் சந்தர்ப்பத்தைக் கொண்டுள்ளது. ஆளுகைச் சட்டகத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான விடயம் என்னவெனில், கூட்டிணைந்த ஆளுகை இணக்கம் மற்றும் செயலாற்றுகை எனும் இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

இணக்கப் பரிமாணம் சபையின் கட்டமைப்பு மற்றும் வகிபாகம் என்பவற்றுடன் நிறைவேற்று அலுவலர்களின் ஊதியத்தை அணவல் செய்கின்றது. பொதுவாக இந்தப் பரிமாணத்தினால் நெறிமுறை மற்றும்/அல்லது நியமங்கள் என்பன உத்தரவாதம்/கணக்காய்வுக்கு உட்பட்ட இணக்கத்துடன் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

செயலாற்றுகை பரிமாணம் உபாயமார்க்கம் மற்றும் பெறுமதி சேர்ப்பினை மையப்படுத்தியுள்ளது. இது சபைக்கு உபாயமார்க்கத் தீர்மானங்களை உருவாக்குவதற்கு, இடர் நாட்டம் மற்றும் செயலாற்றுகைக்கான பிரதான செலுத்தியை விளங்கிக்கொள்வதற்கு உதவுதல் மீது கவனத்தைக் கொண்டுள்ளது. தொழில்முயற்சியின் ஆளுகைச் சட்டகத்தின் இதயமாக சிறந்த கூட்டிணைந்த ஆளுகை எனும் வாதம் உள்ள போதிலும், அது சிறந்த வியாபார செயலாற்றுகைக்கு உத்தரவாதமளிக்கமாட்டாது. நாங்கள் ஏற்கனவே பார்த்தவாறு, 2000 இன் முற்பகுதியில் கூட்டிணைந்த ஆளுகையின் மீளாய்வுக்கு கூட்டிணைந்த தோல்விகள் இட்டுச் சென்றுள்ளதை பார்த்துள்ளோம், ஆனாலும் அண்மைக்காலம் வரையில், செயலாற்றுகைப் பக்கத்தில் உபாயமார்க்கத் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் அமுல்படுத்தல் மீது அதிக கவனம் எடுக்கப்படவில்லை. தொழில்முயற்சி ஆளுகை சட்டகம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நீண்டகால வெற்றிக்கு இணக்கம் மற்றும் செயலாற்றுகை எனும் இரண்டினதும் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2006 இல். 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், அதன் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை நடைமுறை மற்றும் சிறந்த ஆளுகை மற்றும் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கான பொதுத் தொழில்முயற்சி வழிகாட்டலின் உரிய பரப்புகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு அதன் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் கொண்டு செல்லப்படுகின்றது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை

2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கு அமைவாக, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கீழ்வரும் ஏழு அங்கத்தவர்களை உள்ளடக்கிய சபையினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

(அ) நிதி விடயத்திற்குப் பொறுப்பாக சாட்டுதல் செய்யப்பட்ட அமைச்சரின் அமைச்சில் உள்ள ஒரு அலுவலர்

(ஆ) நிதி விடயத்திற்குப் பொறுப்பாக சாட்டுதல் செய்யப்பட்ட அமைச்சரின் அமைச்சில் உள்ள பிரதான கணக்காளர்

(இ) சுகாதார விடயத்திற்குப் பொறுப்பாக சாட்டுதல் செய்யப்பட்ட அமைச்சரின் அமைச்சில் உள்ள ஒரு அலுவலர்

(ஈ) பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பாக சாட்டுதல் செய்யப்பட்ட அமைச்சரின் அமைச்சில் உள்ள ஒரு அலுவலர் மற்றும்

(உ) நிதி, வங்கித்துறை, காப்புறுதி, முகாமைத்துவம் அல்லது சட்டத்துறையில் தகைமைகளைக் கொண்டுள்ள அல்லது அனுபவமுள்ள மூன்று அலுவலர்கள் அமைச்சரினால் பரிந்துரைக்கப்படுவர்.

சட்டத்திற்கு அமைவாக சபையின் தலைவராக நபரொருவரை நியமிப்பதற்கான அதிகாரம் அமைச்சரிடம் உள்ளது. சட்டத்திற்கு அமைவாக, அனைத்து அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து வருட காலத்திற்குப் பதவியை வகிப்பர். பணிப்பாளர் சபை அங்கத்தவர்களினதும் அவர்களினது விபரங்களும் சபைப் பணிப்பாளர்களது விபரங்கள் குறிப்பிடப்பட்ட பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபைக் கூட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட வருகை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

# நிறுவன ஆளுகை

| சபையின் அங்கத்தவர்கள் | 2019 இல் சபை அங்கத்தவர்களின் வருகை விபரம் | | | | | | | | | | | | | நியமனத் திகதி | இராஜினாமாத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜன | பெப் | மார் | ஏப் | மே | யூன் | 11 யூலை | 24 யூலை | ஆக | செப் | ஒக் | நவம் | டிசம் | | |
| திரு. மஞ்சுள த சில்வா | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 06/04/2015 | |
| திரு. ட்ரெவின் பிரனாந்துபிள்ளை | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 08/04/2015 | |
| திரு. அசேந்திர சிறிவர்தன | AB | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 02/04/2015 | |
| திரு. எச்.ஏ.சி. குமாரசிங்க | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 14/12/2015 | |
| திரு. பி.பி.எஸ். ரோகன த சில்வா | √ | √ | | √ | √ | | √ | AB | | √ | √ | | | 05/05/2016 | |
| திரு. என்.எம்.டி. நவரத்ன | √ | | | | | | | | | | | | | 31/07/2017 | 27/02/2019 |
| திரு. கே.ஏ. விமலேந்திரராஜா | AB | AB | | | | | | | | | | | | 29/08/2018 | 27/02/2019 |
| திரு. டி.பி.ஜீ. பிரதீப் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 10/05/2019 | |
| திரு. சி. ஜயசூரிய | | | | | | | AB | √ | | √ | AB | | | 11/07/2019 | |

### வழங்கல் தகவல்கள்

செயலாற்றுகை தொடர்பான மாதாந்த அறிக்கைகள் மற்றும் முன்னைய கூட்டத்தின் சபைக் குறிப்புகள் என்பன

### நிதிக் கூற்றுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுகள், இலங்கை கணக்கீட்டுத் தரங்களையும் ஏனைய சகல பிரயோகிக்கத்தக்க சட்ட ஒழுங்குவிதிகளையும் கைக்கொண்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் செயலாற்றுகையின் விபரமான மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பகுப்பாய்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### வருடாந்த அறிக்கை

அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை உருவாக்குவதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் 2019ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் விவகாரங்கள் தொடர்பான ஒட்டுமொத்தப் பார்வையையும் விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### பெறுகை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பெறுகைகள் தேசிய பெறுகை வழிகாட்டல் மற்றும் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. பெறுகைகள் கவனத்திற் கொள்ளப்படும் பெறுமதி அடிப்படையில் அமைச்சரவை நியமித்த பெறுகைக்குழு, அமைச்சின் பெறுகைக்குழு மற்றும் திணைக்களத்தின் பெறுகைக் குழு என்பவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### உள்ளகக் கட்டுப்பாடு

2019ஆம் ஆண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம் என்பன உள்ளடங்கலாக உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

### கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவின் 2019 ஆம் ஆண்டுக்கான பணிகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட “கணக்காய்வுக் குழுக்களுக்கான சிறந்த பழக்கக் கோவை” உடன் ஒத்துப்போகத்தக்க பணிகளையும் பொறுப்புகளையும் கொண்டு வகுத்தமைக்கப்பட்டது. கணக்காய்வின் நோக்கெல்லையும் கணக்காய்வுக் குழுவுடன் இணைக்கப்பட்ட பொறுப்புகளும் 2019 இல் பின்வருமாறு ஸ்தாபிக்கப்பட்டது.:

- வருடாந்த கணக்காய்வுத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு நிறுவப்பட்டது.
- கணக்காய்வு முறைமை மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.
- தனித்தனிப் பிரிவுகளின் நிறைவேற்றுகை செலவு வினைத்திறன் மற்றும் விரயச் செலவினக் குறைப்பு என்பவற்றின் நோக்கத்திற்காக கால இடைவெளியில் செயலாற்றுகை மீளாய்வு செய்யப்பட்டது.
- கணக்காய்வாளர் அதிபதியின் முகாமைக் கடிதங்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாளரினதும் கணக்காய்வாளர் அதிபதியினதும் தொடர்ச்சியான நடவடிக்கை
- நிலையியற் கட்டளைகள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகளுடன் இணங்கியிருத்தலைப் பரிசீலித்தல்
- உரிய கணக்கீட்டுத் தரங்களுடன் இணங்கியிருத்தலை உறுதி செய்யும் வகையில் நிதிக் கூற்றுகளைப் பரிசீலித்தல்
- வெளியக, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் முகாமைக் கடிதங்களை அவற்றின் தவறு மற்றும் தீர்வு நடவடிக்கை பொருட்டு மீளாய்வு செய்தல்
- குழுவின் கட்டளை, பரிந்துரைகளை அமுல்படுத்தல் தொடர்பில் மீளாய்வு செய்தல்.

# நிறுவன ஆளுகை

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாதாந்தம் தயாரிக்கப்பட்டு சகல பிரச்சினைகளையும் இனங்காணும் பொருட்டு தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கட்டுப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு, இனங்காணப்பட்ட ஊறுபாடுகளை மேம்படுத்தல் என்பவற்றிற்கான சாத்தியமான வழிமுறைகள், இனங்காணப்பட்ட இடர்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. மேலதிக நடவடிக்கையாக, உள்ளகக் கணக்காய்வுக் குழு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஒழுங்கு விதிகளுக்கு காப்புறுதிக் கம்பனிகள் இணக்கமடைந்துள்ளதைக் கண்காணிக்கும் பொருட்டு பல காப்புறுதிக் கம்பனிகளுக்கு விஜயம் செய்தது. 2019 இல் கணக்காய்வுக் குழு கீழ்வரும் நபர்களை உள்ளடக்கியிருந்தது.

| **கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள்** |
|---|
| திரு. கே.ஏ. விமலேந்திரராஜா (தலைவர்) |
| திரு. ட்ரெவின் பிரனாந்துபிள்ளை |
| திரு. அசேந்திர சிறிவர்தன |

### வெளியகக் கணக்காய்வு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் நியதிகளுக்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளியகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டதுடன் அரச கூட்டுத்தாபனங்கள், வர்த்தகங்கள் அல்லது ஏதேனும் எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் அரசிற்கு உரித்தளிக்கப்பட்ட ஏனைய பொறுப்புகள் என்பவற்றின் கணக்குகளினையும் கணக்காய்வு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளார். கணக்காய்வாளர் தலைமை அதிபதி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் நியதிகளுக்கிணங்க 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகளின் வருடாந்தக் கணக்காய்வை மேற் கொண்டார்.

### முதலீட்டுக் குழு

முதலீட்டுக் குழுவின் பொறுப்புகளாவன, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை, வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க உச்ச பட்ச விளைவைப் பெறும் பொருட்டு அது அமுலாக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் மற்றும் உறுதியான முதலீட்டுக் கொள்கை ஒன்றை விருத்தி செய்தல் ஆகிய இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். இவ்வருடத்தில் தே.கா.ந.நி. முதலீட்டுக்குப் பொறுப்பான முகாமையும் சொத்து ஒதுக்கீடு, சொத்துப் பொறுப்பு முகாமைத்துவம் என்பன நுண்ணாய்வு செய்யப்பட்டதுடன் முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகளும் ஆராயப்பட்டன.

# பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் - 2019



**திரு. மஞ்சுள த சில்வா**
**தலைவர்**



**திரு. அசேந்திர சிறிவர்தன**
**சபை அங்கத்தவர்**



**திரு. ரோகன த சில்வா**
**சபை அங்கத்தவர்**



**திரு. கே.ஏ. விமலேந்திரராஜா**
**சபை அங்கத்தவர்**



**திரு. சந்தன குமாரசிங்க**
**சபை அங்கத்தவர்**



**திரு. ட்ரவின் பிரானந்துபிள்ளை**
**சபை அங்கத்தவர்**

# பணிப்பாளர் சபையின் விபரங்கள்

### திர. மஞ்சுள த சில்வா (தலைவர்)

மஞ்சுள டி சில்வா 06.04.2015 ஆம் திகதி தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு தலைவராக நியமிப்பதற்கு முன்னர், அவர் எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். திரு. மஞ்சுள டி சில்வா பொருளியலில் கௌரவ கலைமானிப் (விசேட) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றிருப்பதுடன், ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள லண்டன் வியாபாரப் பாடசாலையில் வியாபார நிர்வாக முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் இவர் FCMA (UK) மற்றும் CGMAM ஆகிய தகைமைகளையும் கொண்டுள்ளார்.

இவர் அண்மையில் அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் 9 ஆண்டுகளாக எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் 2 வருடங்களுக்கு மேலாக பிரதம நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றினார். அத்துடன்

இவர் ஈகள் என்டிபி பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடட் நிறுவனத்தில் (தற்போது என்டிபி வெல்த் மனேஜ்மன்ட்) பொது முகாமையாளராகவும், ஈகள் இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிடட் (தற்போது ஏஐஏ இன்சூரன்ஸ்) நிறுவனத்தின் கூட்டிணைந்த வரிசைகள் மற்றும் மனித வளங்களுக்கான பொது முகாமையாளராகவும், அரச தொழில்முயற்சிகள் மீளமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றினார். அத்துடன் 2016ஆம் ஆண்டு இவர் முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனத்தின் (CIMA) இலங்கைச் சபையின் தலைவராகவும் அதைத் தொடர்ந்து அதன் MESANA பிராந்தியத்திற்கான பிராந்திய சபையிலும் பணியாற்றினார்.

திரு. மஞ்சுள த சில்வா 2019 நவம்பர் மாதம் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து திரு. சீ. ஜயசூரிய பதில் தலைவராக குறிப்பிடப்பட்டதொரு காலத்திற்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் 20.12.2019ஆம் திகதியில் இருந்து திரு. பி.கே.ஆர். பாலசூரிய (நிதி அமைச்சின் பிரதான நிதி அலுவலர்) பதில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

### திரு. சீ. ஜயசூரிய (சபை அங்கத்தவர்)

திரு. சீ. ஜயசூரிய சபை அங்கத்தவராக 11.07.2019ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன், அதிலிருந்து சபைக் கூட்டங்களுக்கு வருகை தந்தார். அந்த வருடம் அவர் நிதி அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்டார்.

### திரு. அசேந்திர சிறிவர்தன

திரு. அசேந்திர சிறிவர்தன 02.04.2015ஆம் திகதி சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 2018இல் சட்டத்தரணியாக செயலாற்றினார்.

### திரு. சந்தன குமாரசிங்க (சபை அங்கத்தவர்)

திரு சந்தன குமாரசிங்க சபை அங்கத்தவராக 14.12.2015ஆம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சிரேஸ்ட அலுவலராகப் பணிபுரிகின்றார்.

### திரு. ட்ரவின் பிரானாந்துபிள்ளை (சபை அங்கத்தவர்)

திரு. ட்ரவின் பிரானந்து பிள்ளை அவர்கள் 08.04.2015 ஆம் திகதி சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் எச்எஸ்பிசியில் இருந்து ஓய்வு பெறும் போது பிரதி பிரதம நிறைவேற்று அலுவலராவார்.

### திரு. என்.எம்.டி. நவரத்ன (சபை அங்கத்தவர்)

திரு. என்.எம்.டி. நவரத்ன 2017இல் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 2018இல் நிதி அமைச்சின் பிரதான கணக்காளராகப் பணியாற்றினார்.

### திரு. கே.ஏ. விமலேந்திரராஜா (சபை அங்கத்தவர்)

திரு. கே.ஏ. விமலேந்திரராஜா 29.08.2018ஆம் திகதி சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். திரு. கே.ஏ விமலேந்திரராஜா இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலராவதுடன், இவர் அரச துறையில் 24 வருட காலம் சேவையாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் இவர் அரச கொள்கைகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்டார். இவர் சட்டத்தரணியுமாவார்.

### திரு. டி.பி.ஜீ. பிரதீப் (சபை அங்கத்தவர்)

திரு. டி.பி.ஜி. 2019இல் திரு. என்.எம்.டி. நவரத்ன இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 2018இல் நிதி அமைச்சின் பிரதான கணக்காளராகப் பணியாற்றினார்.

# கூட்டிணைந்த மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2019

பிரதான நிறைவேற்ற அலுவலர் (16.11.2019 வரை), **திரு. சனத் சீ த சில்வா**.
பிரதான நிறைவேற்ற அலுவலர் (பதில்) (23.12.2019 - 31.12.2019), **திருமதி. கீதா விமலவீர**



**திரு. சனத் சீ த சில்வா**
**பிரதான நிறைவேற்று அலுவலர்**



**திரு. ஜே.ஏ.டி. சிறிவர்தன**
**உதவிப் பொது முகாமையாளர்**
**நிதி (16.11.2019 வரை)**



**திருமதி. நிமாலி பத்திரன**
**உதவிப் பொது முகாமையாளர்**
**காப்புறுதி**



**திரு. லசந்த யு. குமார**
**தலைவர்**
**மனிதவளம் மற்றும் நிர்வாகம்**



**திருமதி. நிர்மலி பெரேரா**
**தலைவி**
**கிளை மேற்பார்வை**



**திருமதி. தம்மிகா வீரகோன்**
**தலைவர்**
**நிதி**



**திரு. ஆர்.எஸ். குணசேகர**
**தலைவர்**
**ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு**



**திருமதி. உபெக்ஷா ஏக்கநாயக்க**
**தலைவர்**
**பொறுப்பேற்றல்**



**திரு. கவிந்ர ஜயசிங்க**
**தலைவர்**
**தகவல் தொழில்நுட்பம்**



**திரு. அனுர சமரகோன்**
**தலைவர்**
**கோரிக்கைகள்**



**திருமதி. தேஷானி நாணயக்கார**
**தலைவர்**
**மீள்காப்புறுதி மற்றும்**
**எஸ்ஆர்சிசிடிஎப் நிதியம்**



**திருமதி. ரந்திம மனகே**
**தலைவி**
**பொதுக் கோரிக்கைகள்**



**திருமதி. நிமேஷா சகபந்து**
தலைவர் என்என்டிஎஸ்
மற்றும் பயிர் காப்புறுதி



**திரு.டி.ஜீ. லக்ஷ்மன்**
தலைவர்
மோட்டார் கோரிக்கைகள்



**திரு. அசங்க ஜயலத்**
தலைவர் நிர்வாகம்



**திருமதி. காயத்ரி சொய்சா**
தலைவர்
உள்ளக கணக்காய்வு



**திரு. நாமல் காஞ்சன**
தலைவர்
செலவுகள் மற்றும் வருமானம்



**திருமதி. உதாரி பியபாஷானி**
தலைவி
சட்டம்



**திருமதி. கயானி சியம்பலாகொட**
தலைவரின் செயலாளர்



**திரு. எம்.என்.கே.பண்டிகம**
தலைவர்
மாத்தறைக் கிளை



**திரு. சிசித் சந்திரகுமார**
தலைவர் நிதியறிக்கையிடல்



**திரு. ரஞ்சித் கயான்**
தலைவர்
முதலீடு



**திரு. இந்திர விக்ரமாராச்சி**
தலைவர்
அனுராதபுரக் கிளை

# நிறுவன இடர் முகாமைத்துவம்

எந்தவொரு நிறுவனத்தினதும் உபாயமார்க்கத்தின் மையமாக இடரை எவ்வாறு கையாளுதல் என்பது அமைந்துள்ளது. இது அவர்களுடைய செயற்பாட்டுடன் இணைந்துள்ள இடர்களை நிறுவனங்களை முறையாகக் கையாளும் முறையாகும். இது நிறுவனங்கள் தங்கள் செயற்பாடுகளுடன் தொடர்புடைய இடர்களை முறையாக எதிர்கொள்ளும் செயல்முறையாகும், ஒரு வெற்றிகரமான இடர் முகாமைத்துவ முயற்சியானது நிறுவனத்தின் உள்ள இடர் நிலைக்கு ஏற்ப மற்ற நிறுவன நடவடிக்கைகளுடன் இணைந்து, அதன் நோக்கத்தில் விரிவான, வழக்கமான செயற்பாடுகளில் உட்பொதிக்கப்பட்டு, மாறும் சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பதன் மூலம் ஆற்றல்மிக்கதாக இருத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவத்தின் கவனம் குறிப்பிடத்தக்க அபாயங்களின் மதிப்பீடு மற்றும் பொருத்தமான பதில்களை செயற்படுத்துவதாகும். அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் அதிகபட்ச நிலையான மதிப்பை அடைவதே குறிக்கோளாகும். இடர் முகாமைத்துவம் ஒரு நிறுவனத்தைப் பாதிக்கும் காரணிகளின் உத்தேச மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய காரணிகளின் புரிதலை அதிகரிக்கின்றது. இது வெற்றியின் நிகழ்தகவை அதிகரிக்கின்றதுடன் தோல்வியின் நிகழ்தகவையும் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதுடன் தொடர்புடைய நிச்சயமற்ற மட்டத்தையும் குறைக்கின்றது.

இடரினை பகுப்பாய்வு செய்வதின் முக்கிய பகுதியாக இடரின் தாக்கத்தின் இயல்பு, மூலம் அல்லது வகையை தீர்மானித்தல் வேண்டும். இடர் வகைப்படுத்தல் முறைமையினைப் பயன்படுத்துவதன் ஊடாக இடர்களை மதிப்பீடு செய்தல் மேம்படுத்தப்பட முடியும். இடர் வகைப்படுத்தல் முறைமைகள் முக்கியமானது, ஏனெனில் அதையொத்த இடர்களை சேர்த்து அடையாளம் காண்பதற்கு நிறுவனத்தினால் இயலுமாகும். இடர் வகைப்படுத்தல் முறைமை நிறுவனத்தின் எந்த உபாயமார்க்கம், தந்திரோபாயம் மற்றும் தொழிற்பாடுகள் பாதிப்படையக்கூடியவை என்பதை நிறுவனம் அடையாளம் காண உதவும். இடர் வகைப்படுத்தல் நிதியியற் கட்டுப்பாடு, தொழிற்பாட்டு வினைத்திறன் மதிப்பு வெளிப்பாடு மற்றும் வணிக நடவடிக்கைகள் தொடர்பான இடர்களின் பகுதியை அடிப்படையாக் கொண்டு இடர் வகைப்படுத்தல் முறைமைகள் வழமையாகக் காணப்படும். எனினும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொண்ட அனைத்து வகையான நிறுவனங்களினாலும் பயன்படுத்தக்கூடிய இடர் வகைப்படுத்தல் முறைமையொன்றில்லை.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உபாயமார்க்க முகாமைத்துவத்தின் மத்திய பகுதியாக இடர் முகாமைத்துவம் அமைந்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இடர் முகாமைத்துவ செயன்முறை படிமுறையாக நிலையான நன்மைகளை அடையும் இலக்குடன் இணைந்த ஒவ்வொரு செயற்பாட்டுடனும் அதனுடன் இணைந்த அனைத்து செயற்பாடுகளுடனும் தொடர்புடைய இடர்களைக் கையாளுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இந்த இடர்களை அடையாளம் காண்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் சிறந்த இடர் முகாமைத்துவத்தில் கவனத்தை செலுத்த வேண்டும் என்பதை அடையாளம் கண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின். இலக்கு, நிறுவனத்தை தாக்கக்கூடிய அனைத்துக் காரணிகளின் உத்தேச மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய புரிந்துகொள்ளல் ஊடாக நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கு உச்சளவான நிலைத்திருப்புப் பெறுமதியை சேர்ப்பதாலாகும். நிறுவன இடர் முகாமைத்துவ உபாயமார்க்கங்களை இணைத்துக்கொள்ளும் போது, தாக்கம் / விளைவின் அளவு மற்றும் நிகழ்வின் சாத்தியம்/ நம்பகத்தன்மை ஆகியவற்றை மதிப்பிடுவதில் கீழ்வரும் முக்கிய இடர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### RO1 – உபாயமார்க்க இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உபாயமார்க்க இலக்குகள் நோக்கங்கள் மற்றும் வியாபாரத் திட்டத்தை உள்ளக மற்றும் வெளியக சூழ்நிலை காரணிகளினால் எதிர்பார்த்தவாறு அடைவதற்கு இயலாமல் போவதற்கான இடரானது உபாயமார்க்க இடராகும். அதனால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உபாயமார்க்கத்திற்கு தாக்கத்தை விளைவிக்கக்கூடிய பொதுச் சூழலில் உள்ள அரசியல், தொழில்நுட்ப, சமூக கலாச்சார, பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் இலங்கையின் காப்புறுதி துறைசார்ந்த போட்டியாளர்கள் மற்றும் மாறும் வாடிக்கையாளர் இலக்குச் சூழலை கவனமாக அவதானிக்கின்றது.

### RO2 – காப்பீட்டு இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சமநிலைப்படுத்தப்பட்ட, ஏற்றுக்கொள்ளக் கூடிய இடர் மட்டத்தைப் பேணுகிறது என்பதை உறுதி செய்கிறது. இது அங்கீகாரச் செயன்முறைகள், வெளிப்படுத்துகை எல்லைகள், உள்ளடக்க மட்டுப்படுத்தல் என்பவற்றின் பிரயோக முறையில் இதனைச் செய்கிறது. இதற்கு மேலதிகமாக, இழப்பு மற்றும் பிடிமானத்தை உணரும் வகையில் தொடர்ச்சியான கண்காணிப்பும் மதிப்பாய்வும் மேற்கொள்ளப்படுகிறது. தே.கா.ந.நி. முறைசார் காப்பீட்டுச் செயன்முறையைக் கொண்டுள்ள அதே வேளை சகல வழிகாட்டல்களும் பின்பற்றப்படுகிறது என்பதை உள்ளகக் கணக்காய்வுகள் உறுதி செய்கிறது. அலுவலர்கள்

காப்பீட்டையும் சரியான இடர் மட்டத்தையும் குறித்தொதுக்குவதற்கான போதிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதலை உறுதி செய்யும் வகையில் உள்ளக ரீதியான பயிற்சியும் வழங்கப்படுகிறது.

### RO3 – மீள்காப்புறுதி இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2019இல், உயர் நிதித்தரம் மற்றும் உயர் சர்வதேசத் தரம் என்பவற்றைக் கொண்ட மீள் காப்புறுதியாளர்களுடன் அதன் மீள் காப்புறுதி விடயத்தை உள்ளடக்குவதற்கான நியாயமான செலவைக் கொண்ட மீள்காப்புறுதித்திட்டத்தைப் பெற்றுக்கொண்டது. 2019இல் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம், பின்னடைவு நிகழ்ச்சித்திட்டம், தேசிய கமத்தொழில் காப்புறுதித் திட்டம் மற்றும் தேசிய இடர் காப்புறுதித் திட்டம் என்பனவற்றுக்கும் மீள்காப்புறுதிக் காப்பீடுகள் பெறப்பட்டது.

### RO4 – கீர்த்திக்கான இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, அதன் வாடிக்கையாளர், பங்குதாரர் மற்றும் பொதுசன அபிப்பிராயங்களை முக்கியமாகக் கவனத்திற் கொண்டு அதன் சந்தைநிலைக் கீர்த்தியைத் தக்கவைப்பதன் தேவையை ஏற்றுக்கொள்கிறது. கொள்கைகளும் செயன்முறைகளும் உரிய முறையில் தொடரப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு உறுதியான கட்டுப்பாடு, இணக்கப்பாடு என்பவற்றை முன்னிறுத்தி, வலிமையான கூட்டுப் பெறுமானங்களுடன் நேர்முறை வேலைக் கலாச்சாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் பின்பற்றுதலை நோக்கிய விதத்தில் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன

### RO5 – மோசடி இடர்பாடுகள்

தே.கா.ந.நி. வினைத்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையையும் கணக்கீட்டு முறையையும் தாபித்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, மோசடிச் செயற்பாட்டு இடர் குறைக்கப்படுதலை உறுதி செய்யும் வகையில் நிறுவகத்தினுள் சகல உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்கின்ற வினைத்திறன் மிக்கதொரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைக் கொண்டுள்ளது. முற்கூட்டிய எச்சரிக்கைச் சமிக்ஞைகளை உறுதிப்படுத்தும் தெளிவான தொடர்பாடல் அலைவரிசையுடன் கூடிய நன்கு கட்டமைக்கப்பட்ட இயங்கு செயன்முறைகளும் செயற்பாடுகளும் மிகத்தெளிவாக விளக்கப்படுகின்றன.

# நிறுவன இடர் முகாமைத்துவம்

### R06 – கடன் இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தொடர்ச்சியாக நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் நிதி நிலையாண்மையையும் கடன்தகு நிலையையும் கண்காணித்து வருகிறது. கடன் அங்கீகாரச் செயன்முறை, வியாபாரத்தின் வகையினதும் அளவினதும் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள அதே வேளை, சகல அலுவலர்களினதும் வழிகாட்டல் பொருட்டு கடன் கொள்கை ஒன்றும் பேணப்படுகிறது. தே.கா.ந.நி. ஆனது,

சகல கொள்கை தொடர்பான தவணைக் கட்டணம் தொடர்பிலும் கடுமையான கொள்கை ஒன்றைப் பேணுவதுடன் வருமதிகள் செலுத்தப்படாதவிடத்து கடும் நடவடிக்கையையும் எடுக்கின்றது.

### R07 – திரவநிலை இடர்பாடுகள்

கோரிக்கைக் கொடுப்பனவுகள், மீள் காப்புறுதிக் கொடுப்பனவுகள், திறைசேரிக்கான நிதி மாற்றுகைகள் போன்ற ஒப்பந்தப் பிணைப்புகளை ஈடு செய்ய இயலாமை அல்லது திரவநிலை இடர்பாடுகள் என்பன மீள்வாங்கல் போன்ற வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய முதலீடுகள், வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய திறைசேரி உண்டியல்கள், வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய திறைசேரி முறிகள், கடன் பத்திரங்கள் என்பவற்றின் பன்முகப்படுத்தல்களின் ஊடாகக் குறைக்கப்பட்டுள்ளன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அரச பிணைப்பொறுப்புகளில் அதன் சகல நிதியங்களையும் முதலீடு செய்வதுடன் அவற்றின் போதுமான பகுதியொன்று குறுகிய கால முதிரல் முதலீட்டிலும் மீள் கொள்வனவு உடன்படிக்கையிலும் வைத்திருக்கப்படுகின்றன.

### R08 – ஒருமுகப்படுத்தல் இடர்பாடுகள்

அதிகரித்த இழப்புக்கான இடர் வெளிப்படுத்துகை, சொத்துகளின் போதுமானதற்ற பல்வகைமையுடன் தொடர்புபட்டதாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினைப் பொறுத்தவரையில் அரச பிணைப்பொறுப்புகளில் முதலிடுவதில் கவனம் செலுத்தப்படுகிறது. எனினும் அவை இடர்பாடற்ற உயர்தர முதலீடாக இருக்கும் எனக் கருதப்படுவதற்கு இல்லை.

### R09 – உரிமைக் கோரிக்கைத் தீர்வு இடர்பாடுகள்

மோசடி, சட்ட, தொழில்நுட்பக் காரணிகளால் எழும் பிணக்கு, உரிமைக் கோரிக்கைச் செயன்முறையை பிரிப்பதிலும் உரிமைக் கோரிக்கையை அங்கீகரிப்பதிலும் ஒழுங்கு விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

### R10 – சந்தை இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிவான முதலீட்டு அறிவுறுத்தல்களைக் கொண்டுள்ளது. இவ்வறிவுறுத்தற் கைநூல்கள் அதன் முதலீடுகளை எவ்வாறு வினைத்திறன் மிக்க முறையில் முகாமை செய்வதென குறித்துரைக்கின்றது. முகாமைத்துவ அறிக்கைகளும் சந்தை இடர் நிலையானளவில் குறைக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

### R11 – வெளிநாட்டு நாணயமாற்று இடர்பாடுகள்

வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல் இடரை ஒழிக்கும் பொருட்டு, மீள் காப்புறுதி உடன்படிக்கைகள் மீள்காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்கான உள்நாட்டு நாணயப் பெறுமதியில் ஒப்பந்தமிடப்பட்டுள்ளன.

### R12 – முதலீட்டுக் கடன் இடர்பாடுகள்

முதலீட்டுக் கடன் இடரை இழி நிலையில் பேணும் பொருட்டு திறைசேரி உண்டியல்கள், மீள் வாங்கல்கள், திறைசேரி முறிகள் என்பவற்றில் இடர்பாடற்ற முதலீட்டினை அரச வங்கிகளின் ஊடாக மாத்திரம் செய்யப்பட்டுள்ளன.

### R13 – செயற்பாட்டு இடர்பாடுகள்

செயற்பாட்டு இடரானது, செயற்பாட்டினை கணனிப்படுத்தலின் ஊடாகக் குறைக்கப்படுகிறது. தே.கா.ந.நி. இன் பகிஷ்கரிப்பு, வன்முறை, பயங்கரவாதம், சிவில் கலக நிதிப் பிரிவுகளாவன, சந்தா சேகரிப்பு, உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவு எனப்வற்றில் ஏற்படும் வழுக்கள், முரண்பாடுகளைத் தணிக்கும் நோக்கில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. மேலும் சகல அலுவலக நடவடிக்கைகளும் வழுவற்ற கொடுக்கல் வாங்கலின் பொருட்டுக் கணனிப்படுத்தப்பட்டுள்ளன.

### R14 – போதிய ஒதுக்கீட்டு இடர்பாடுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் நிதி ஒதுக்கீட்டு நிலைமை, நிலுவையிலுள்ள சந்தர்ப்பத்திலும் பொறுப்புகளை ஈடு செய்யக்கூடியதாக உள்ளதென்பதைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து உறுதி செய்கிறது.

# நிலைபேறான அறிக்கையிடல்

நிலைபேறானது கூட்டிணைந்த நிகழ்ச்சி நிரலில் தங்கியுள்ளதுடன் பல வியாபார சவால்களைப் போலவே நடவடிக்கைகளை எடுப்பதென்பது கடினமாகவே உள்ளது. சிலர் பீட்டர் டர்க்கரைப் போல், நிறுவனத்தின் நோக்கம் சமூகத்திற்கு சேவையளிப்பதற்கு என நம்புகின்றனர். ஆனால் பொதுவாகப் பார்த்தால், இது வியாபாரம் மற்றும் சமூகத்திற்கு அந்த நிலைபேறானது பெறுமதியைச் சேர்ப்பதில் கவனத்தை செலுத்துகின்றது. அதன் இலாபம், பூமி மற்றும் மக்களின் நிலைபேற்றின் “மூன்று கீழ்நிலைகளுக்கான” பங்களிப்பானது இன்றைய நிறுவனங்களின் உபாயமார்க்கம் மற்றும் தொழிற்பாடுகளின் மீது நடைமுறை மற்றும் ஆழமான தாக்கத்தை விளைவிக்கின்றது. இது நெறிமுறையாக பொறுப்பாக இருப்பது மட்டுமல்ல் இது ஒரு திறமையான வியாபாரம். விரயம் மற்றும் வினைத்திறனின்மையை விலக்குவதென்பது எளிமையான பொருளாதார உணர்வு மற்றும் இது கீழ் மட்ட நிலையின் உண்மையான தாக்கத்தை உருவாக்கும். நிலைபேற்றின் முன்னெடுப்புகள் எப்போதும் தொட்டுணரக்கூடிய, புதிய வருமான மூலத்தை உருவாக்கக்கூடிய நீண்ட கால நன்மைகளைத் தரும் குறுகியகால ஈட்டுகைகள் மற்றும் பிரதிவிம்பம் மற்றும் மதிப்பு போன்ற கட்புலனாகச் சொத்துகளின் மேம்பாட்டின் கலவையாக இருக்கும்.

காப்புறுதி கைத்தொழிற்துறை வியாபாரத்தின் கூட்டிணைந்த நிலைபேறு பற்றிய பாரிய கவலைகளுடன் 2019 இற்குள் நுழைந்தது. அதற்கமைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொருளாதார செழிப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தரம் ஆகியவற்றின் கீழ் மட்டத்தின் புதிய செயலாற்றுகை பரிமாணத்தை அடைவதன் ஊடாக அதன் வியாபார செயலாற்றுகையை முயற்சிக்கின்றது மற்றும் “மிகவும் பொறுப்புடைய கூட்டிணைந்த குடிமகனாக” இருக்க முயற்சிக்கின்றது.

### வெளிவாரிப் பயிற்சிகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஜுலை மாதம் 19.20 மற்றும் 21 திகதிகளில் சிலாபம் அனந்தய ரிசோட் அன்ட் ஸ்பாவில் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள் குழுவாக பணிபுரிதல் மற்றும் குழுவாக பணிபுரியும் திறன்களையும் ஏனைய திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்காக 361 டிகிரிஸ் (தனியார்) லிமிடட் நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய லீக் போட்டிகள் 2019

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நலன்புரி சங்கம் ஊழியர்களின் குழுவாகச் செயற்படுவதை மேம்படுத்துவதற்காக 24 ஒக்டோபர் 2019 இல் இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில் கிரிக்கட் போட்டியொன்றை ஒழுங்கு செய்தது.

### திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்புகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பானது படிப்படியாக அதிகரித்துவருகின்றதுடன், 2019 இல் ரூபா 3,267 மில்லியனைப் பங்களிப்பு செய்ததுடன், இதன் கடந்த கால பங்களிப்பு விபரங்கள் கீழே அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்புகள்**

| வருடம் | தொகை<br>ரூ. |
|---|---|
| 2019 | 3,267,970,000 |
| 2018 | 2,750,000,000 |
| 2017 | 1,500,000,000 |
| 2016 | 3,200,000,000 |
| 2015 | 3,000,000,000 |
| 2014 | 4,000,000,000 |
| 2013 | 3,200,000,000 |

### வாடிக்கையாளர் சேவை

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அக்ரஹார சுகாதாரக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் தரமான சுகாதார சேவையை வழங்குவதை மேம்படுத்துவதற்காக பல பிரபல்யமான வைத்தியசாலைகளுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டது. திரவத்தன்மை மற்றும் கடன் இடரைக் குறைப்பதன் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காகவும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிரதிவிம்பத்தை மேம்படுத்தி, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தொடர்ச்சியாக பிட்ச் தரப்படுத்தலில் ஏஏ யாக இற்றைப்படுத்தப்படுகின்றது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் 7 உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது.

1) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சிலுள்ள அலுவலர் ஒருவர்

2) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் பிரதம கணக்காளர்

3) சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

4) அரச நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

5) நிதி வங்கியியல், காப்புறுதி முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தகைமையுடைய அல்லது

நிபுணத்துவமுடையவர்களிலிருந்து அமைச்சரால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் மூவர்,

அமைச்சர் இவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்கும் தகைமையுடையவராவார். இச்சட்ட நியதிகளின் கீழ், சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும். 2015 காலப்பகுதியில் 8 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் கூட்டத்திற்கு சிறந்த வரவுப் பதிவுகள் பேணப்பட்டிருந்தன. சபைக் கூட்டங்களில் சபை உறுப்பினர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| சபையின் அங்கத்தவர்கள் | 2019 இல் சபை அங்கத்தவர்களின் வருகை விபரம் | | | | | | | | | | | | | நியமனத் திகதி | இராஜினாமாத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜன | பெப் | மார் | ஏப் | மே | யூன் | 11 யூலை | 24 யூலை | ஆக | செப் | ஒக் | நவம் | டிசம் | | |
| திரு. மஞ்சுள த சில்வா | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 06/04/2015 | |
| திரு. ட்ரெவின் பிரனாந்துபிள்ளை | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 08/04/2015 | |
| திரு. அசேந்திர சிறிவர்தன | AB | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 02/04/2015 | |
| திரு. எச்.ஏ.சி. குமாரசிங்க | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 14/12/2015 | |
| திரு. பி.பி.எஸ். ரோகன த சில்வா | √ | √ | | √ | √ | | √ | AB | | √ | √ | | | 05/05/2016 | |
| திரு. என்.எம்.டி. நவரத்ன | √ | | | | | | | | | | | | | 31/07/2017 | 27/02/2019 |
| திரு. கே.ஏ. விமலேந்திரராஜா | AB | AB | | | | | | | | | | | | 29/08/2018 | 27/02/2019 |
| திரு. டி.பி.ஜி. பிரதீப் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | | | 10/05/2019 | |
| திரு. சி. ஜயசூரிய | | | | | | | AB | √ | | √ | AB | | | 11/07/2019 | |

அங்கீரிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் அடிப்படையிலும் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிதி, பௌதீக இலக்குகளின் அடிப்படையிலும் சரியான முறையில் வியாபாரம் நடத்தப்படுகிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு நிறுவனத்தின் பங்குதாரர்களிற்கு சபை பொறுப்புக் கூறத்தக்கதாக உள்ளது.

### முதன்மை நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வுகளும்

2019 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முதன்மைச் செயற்பாடுகளாவன, அரச அலுவலர்களிற்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார), கட்டாய மீள் காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம் (அரசுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு), பொதுக் காப்புறுதித் திட்டங்கள், விவசாயக் கடன் காப்புறுதித் திட்டம், பகிஸ்கரிப்பு, சிவில் கலகம், வன்முறை மற்றும் பயங்கரவாத நிதிய முகாமை என்பவற்றை அமுல்படுத்துதலாகும்.

### நிதிப் பெறுபேறுகள்

2019 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முழுமொத்த எழுத்து மூலமான தவணைப்பணமாக ரூபா 12,693 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 9,684 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக எல்லை அதிகரித்துக் காணப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இ.ரூபா 3,114 மில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக உழைத்துக்கொண்டது..

### பணியாளர்கள்

31.12.2019ஆம் திகதியில் இருந்த பணியாளரின் மொத்த எண்ணிக்கை 306 ஆகும்.

# பணிப்பாளர்களின் அறிக்கை

**கணக்காய்வாளர்கள்**

சபையின் 2018 இற்கான நிதிக் கூற்றானது, 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்ட நியதிகளில் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

**கணக்காய்வுக் குழு**

2019 இல் கணக்காய்வுக் குழுவானது, திரு. கே.ஏ. விமலானந்தராஜா (தலைவர்) (பணிப்பாளர் நாயகம் - தேசிய அரசிறைக் கொள்கைத் திணைக்களம் - 2019), திரு. ரி.ஆர். பெர்னாண்டோபுள்ளே, திரு. அசேந்திர சிறிவர்தன ஆகிய மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்திலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரும் குழுவின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராகக் கூட்டத்திற் கலந்து கொண்டார். குழுக் கூட்ட விபரங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அவை பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிக்கையிடப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. 2015 இல் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்கள் மற்றும் வன்முறை, பயங்கரவாதம், கலகம் தொடர்பான நிதியத்தின் கணக்காய்வு என்பன அடங்கலான உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன.

**கூட்டிணைந்த ஆளுகை**

கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள், நல்லாட்சி மற்றும் கூட்டிணைந்த ஆளுகை நெறிமுறை அரச தொழில் முயற்சி வழிகாட்டல்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்படும் சிறந்த நடைமுறைகள் என்பவற்றின் உரிய பகுதிகளைக் கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மவஹப் மவ்ஜுட்**
தலைவர்

**காயத்திரி சொய்சா**
சபைக்கான செயலாளர் (பதில்)

04 ஒக்தோபர் 2021
கொழும்பு



# நிதியியல் அறிக்கைகள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடா்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடா்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடா்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடா்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடா்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடா்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 – நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் நியமத்தின் 32 ஆவது பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் நியமத்தின் மூலம் வேண்டப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமான மற்றும் செலவினங்களில் ஈடுசெய்ய முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும், மீள்காப்புறுதி பிரிவில் தனியார் காப்புறுதி கம்பனிக்குரியதாக கிடைக்க வேண்டிய தவணை வருமானத்தில் 90 நாட்களை விஞ்சிய ரூபா 9,479,460 தொகையான செலவு மீதியொன்று மீள்காப்புறுதி பிரிவில் கிடைக்க வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய தவணை வருமானம் ரூபா 9,479,460 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மோட்டார் அல்லாத பிரிவிற்கு கிடைக்க வேண்டிய தவணை வருமானக் கணக்கில் ரூபா 412,293 தொகையான செலவு மீதியில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக மோட்டார் வாகனம் அல்லாத கிடைக்க வேண்டிய தவணை வருமானம் ரூபா 412,293 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும் |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) பணிப்பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டங்கள், சிவில் பிரச்சினைகள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளின் காப்புறுதி மேஏவுகைக்குரிய (SRCC) 2011 ஆம் ஆண்டிற்காக விலைப் பட்டியல் விறியோகிக்கும் போது மோட்டார் வாகனம் அல்லாத தவணை வருமானத்தினை செலுத்த வேண்டிய தரகு குறைக்கப்பட்டு மாதாந்த தேறிய வருமானம் பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது மொத்த தவணை வருமானம் மற்றும் தரகிற்கான செலவினங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வருமானக் கூற்றில் தவணை வருமானத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தேசிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பொறுப்பிற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் ரூபா 35,967,319 தொகையான மேலதிக மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், இந்த செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி பொறுப்பிற்காக நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டிற்காக பட்டியல் பத்திரத்தை விறியோகிக்கும் அதில் முன்னர் காணப்பட்ட பந்தியின் பிரகாரம் மோட்டார் அல்லாத தவணை வருமானத்தில் செலுத்த வேண்டிய தரகு பணம் குறைக்கப்பட்டு மாதாந்த தேறிய வருமானம் பட்டியலிடும் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும கணக்குகளை சமர்ப்பிக்கும் போது மொத்த தவணை வருமானம் மற்றும் தரகிற்கான செலவினங்கள் தனியாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வருமானக் கூற்றின் தவணை வருமானத்தின் அடிப்படையில் பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கணிப்பிடப்பட வேண்டிய எங்கள் நிறுவனத்தில் இருந்து செலுத்தப்பட்ட வரி அளவுகளில் குறைவொன்று காணப்பட்டது. அதற்காக மேலதிக மதிப்பீடொன்று செய்யப்பட்டது. எனினும், SRCC தவணை வருமானத்தின் அடிப்படையில் உள்நாட்டு பொதுவான காப்புறுதி நிறுவனமும் நுகர்வோர்களிடம் இருந்து அறவிடப்படுகின்ற தவணையின் அடிப்படையில் தேசத்தைக் | வரி செலுத்துதல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| | கட்டியெழுப்பம் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அதனால் அது ஒரு வருமானத்தின் அடிப்படையில் வரி இரட்டைக் கணிப்பீடு செய்யப்படுகின்றமையினால் இந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் மேலதிக வரிகளில் இருந்து விடுவிக்குமாறு முறையீடு செய்யப்பட்ட போதிலும், தொடர்ந்தும் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ii) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த காலாண்டிற்குரிய பயிர்ச் செய்கை காப்புறுதி வரி வருமானம் ஆன ரூபா 430,506,164 தொகை, 2020 சனவரி மாதத்தில் கிடைத்த போதும் அந்த தொகை 2019 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டியதாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிற்குரிய 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 394,646,100 தொகை நடப்பாண்டின் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டிற்குரிய பயிர் செய்கை வரி வருமானம் ரூபா 35,860,064 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 394,646,100 தொகை கிடைக்க வேண்டிய பயிர் செய்கை காப்புறுதி வரி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நிதியத்திற்காக பணத்தை சேகரித்தல் அந்த மற்றும் அது தொடர்பான நிறுவனங்களின் இலாபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. அதனால் ஏனைய நிறுவனங்களுக்கு கிடைக்கின்ற இலாபம் தொடர்பாக எங்களது நிறுவனத்திற்கு எதிர்வுகூற முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. கிடைக்க வேண்டிய பயிர் செய்கை வரி தொடர்பாக கணக்கீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் ஆண்டிற்கான 04 காலாண்டின் வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய அக்ரஹார காப்புறுதி தவணை பணம் கணக்கீடு செய்யப்படாமையினால் அக்ரஹார காப்புறுதி வருமானம் மற்றும் உரிய கிடைக்க வேண்டிய கணக்குகள் ரூபா 355,310,770 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அக்ரஹார தவணை வருமானம் கணக்கீடு செய்யும் போது உரிய மாதத்திற்காக கிடைக்கின்ற வருமானம் மாதாந்த வருமானமாக கருதப்படுகின்றது. எனினும் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் 2018 ஆம் ஆண்டிற்குரிய 2019 ஆம் ஆண்டில் ரூபா 245,693,637 தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் SRCC & TR பிரிவில் வெளிநாட்டு நிதி 03 வெளிநாட்டு நிதிக் கணக்குகள், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி, அத்திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதாசாரத்தில் மாற்றீடு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 875,650 தொகை கணக்குகளில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியத்தில் USD மற்றும் Euro மீதி மற்றும் SRCC பிரிவின் மீதியில் ரூபாய்க்கு மாற்றுதல் வழுக்களுடன் சரிசெய்யப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | மீளாய்வாண்டிற்குரிய சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (v) கணக்கு இலக்கம் 8605 என்ற Slip Return Control – Agrahara கணக்கில் ஐந்து வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,235,690 தொகையான செலுத்த வேண்டிய அக்ரஹார உரித்து பெறுமதியாக இருந்ததுடன், இது வரையும் இந்த பணம் உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கோ அல்லது மேலும் அது தொடர்பாக பொறுப்பொன்று காணப்படாதிருக்குமாயின் அதற்காக நடவடிக்கை எடுத்தல் அல்லது சரியான கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான படி முறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட மீதி தொடர்பாக முன்னர் காணப்பட்ட பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் அபிப்பராயம் கணக்காய்வு சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு இருந்தது. கணக்காய்வு சபையின் அங்கீகாரத்தில் மீண்டும் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படுகின்றது. அதனால் இந்த மீதி தொடர்பான தீர்மானம் புதிய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும் போது அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அக்ரஹார நலனாளிகளின் அங்கத்தவர்களுக்கு கூடிய விரைவில் செலுத்தி தீர்க்கப்பட வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| (vi) 2007 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,843,488 தொகையான மீள செலுத்த வேண்டிய தவணைப் பண மீதியொன்று ஆக இருந்ததுடன், அந்த செலுத்த வேண்டிய தவணைப் பணத்தை தீர்த்து வைப்பதற்கோ அல்லது அந்த பெறுமதியை தீர்த்து வைப்பதற்குள்ள கடப்பாடுகள் தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்று அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது வரை இந்த மீதி தொடர்பாக இழப்பீட்டு சீராக்கமும் (Impairment) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கிடைக்கின்ற ஆலோசனையின் அடிப்படையில் எதிர் கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அக்ரஹார நலனாளிகளின் அங்கத்தவர்களுக்கு கூடிய விரைவில் செலுத்தி தீர்க்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) மீள்காப்புறுதி நிறுவனத்தினால் கிடைக்க வேண்டிய பணம் | 1,068,471,618 | நேரடியான மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட போதும் பதில் இது வரை கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் கணக்காய்விற்காக சமா்ப்பிக்கப்படும். இந்த மீதி 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய மீதியாகும். அது தொடர்பாக கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடியான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) பெற வேண்டிய பணம் - மீள் காப்புறுதி | 9,053,364 | விரிவான பட்டோலைகள் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) தீர்த்து வைக்கப்பட வேண்டிய உரித்து இழப்பீடுகள் | 4,077,033 | விரிவான பட்டோலைகள் | இந்த மீதி உறுதிப்படுத்தல் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கிடைக்கின்ற பரிந்துரையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) பணிப்பகிஷ்கரிப்பு, ஊர்வலங்கள் மற்றும் பயங்கரவாதத்தின் போது நிதிய பிரிவிற்கு செலுத்த வேண்டிய பணம் | 644,068 | விரிவான பட்டோலைகள் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். |
| (v) ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் - கிடைக்க வேண்டிய பெறுமதி | 3,462,111 | விரிவான பட்டோலைகள் | இதன் போது குறிப்பிடப்பட்ட மீதி தொடர்பாக முன்னா் காணப்பட்ட பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அவர்களின் அபிப்பிராயத்தில் கணக்காய்வு சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வு சபையின் அங்கீகாரத்தின் படி மீண்டும் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படுவதாகும். அதனால் இந்த மீதி தொடர்பான தீர்மானம் புதிய பணிப்பாளர் சபைக்கு எதிர்காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | கணக்கு இலக்கம் 8630 இன் கீழ் செலுத்த வேண்டியதாக இருந்த போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 51,365,408 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளுக்கு இடையே அனேகமானவை பொதுவான இடர் காப்புறுதிகளுக்கு உரியதாகும். இது தொடர்பாக மாவட்ட செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அனேகமானவை இன்னும் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இதில் ஏதாவது காசோலையொன்றின் எண்ணிக்கை காசோலை பெறுவபர்களினால் சமர்ப்பிக்கப் படாமையின் அடிப்படையில் மாவட்ட செயலகங்களில் இருந்து மீள அனுப்பப்பட்டுள்ளது. அந்த பெறுமதி ரூபா 5,205,873 தொகை இந்த கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி காசோலைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய அதாவது 2018 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,811,225 பெறுமதியான காசோலைகள் காணப்பட்டதுடன், அந்த காசோலை செலுத்த வேண்டியதாக இருந்த போதும், சமர்ப்பிக்கப்படாத காசோலையாக இனங்கண்டு நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த காசோலை தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிதி விளைவுகள் ரூபா 3,114,086,727 தேறிய இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 3,183,238,866 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 69,152,140 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. தேறிய உழைத்தல்கள் மற்றும் உரித்துகளை செலுத்துதல் ரூபா 2,388,669,593 இனாலும், நிதி மற்றும் ஏனைய செலவினங்களின் மொத்த வேறுபாடுகள் ரூபா 21,062,606 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மீளாய்வாண்டு மற்றும் 03 முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகள் தொடர்பாக பகுப்பாய்வு பின்வருமாறு

| | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|
| தேறிய தவணை வருமானம் | 8,850,506,451 | 11,613,833,982 | 13,653,431,467 | 16,448,026,766 |
| ஏனைய வருமானம் | 988,689,180 | 1,163,719,071 | 1,349,867,329 | 1,269,216,686 |
| செலவினம் | | | | |
| தேறிய உழைத்தல் மற்றும் உரித்து செலுத்துதல் | (5,543,154,699) | (9,900,699,368) | (9,690,648,221) | (12,079,317,814) |
| மீள்காப்புறுதி மற்றும் கைப்பற்றல்கள் செலவினம் | (1,068,320,881) | (1,440,826,507) | (1,609,566,546) | (2,055,691,850) |
| ஏனைய செயற்பாடுகள் மற்றும் நிர்வாக செலவினம் | (387,968,196) | (344,678,298) | (414,244,501) | (552,685,117) |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | - | - | - | (21,062,606) |
| மொத்த உழைத்தல், செலுத்துதல்கள் மற்றும் ஏனைய செலவினம். | (6,999,443,776) | (11,686,204,174) | (11,714,459,268) | (14,708,757,386) |
| வரிக்கு முந்திய இலாபம் | 2,839,751,855 | 812,818,162 | 3,288,839,528 | 3,008,486,066 |
| வரிச் செலவினம் | - | (100,951,677) | (105,600,662) | (105,600,662) |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 2,839,751,855 | 976,233,935 | 3,183,238,866 | 3,114,086,727 |

2016 ஆம் ஆண்டில் ரூபா 2,839,751,855 தொகையான மிகை 2017 ஆம் ஆண்டில் ரூபா 976,233,935 வரை குறைவடைந்திருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் போது அது ரூபா 3,183,238,866 வரை உயர்வடைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அது ரூபா 3,114,086,727 வரை அதாவது ரூபா 69,152,139 இனால் மீண்டும் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| SRCC & TR பிரிவின் கணக்கு இலக்கம் 38 என்ற மீண்டும் கிடைக்க வேண்டிய வைப்பு – களஞ்சிய கணக்கின் கீழ் புகையிர திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட களஞ்சியத்திற்காக ரூபா 1,286,505 தொகையான வைப்பொன்று வைக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அதற்குரிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | இதற்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி மேவுகை உத்தேச திட்டத்தில் மீள்காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய பெறுகைகள்.** | | |
| (i) 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி நடைபெற்ற SCAPC கூட்டத்தின் பிரகாரம் இந்த மீள் காப்புறுதி மேவுகைக்குரிய பத்திரிகை அறிவித்தல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணைய தளத்தில் பிரசுரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் சமா்ப்பிக்கப்படவில்லை. எனினும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணைய தளத்தில் பிரசுரிப்பதற்குரிய அந்த அமைச்சின் இலத்திரனியல் தபாலுக்கு அனுப்பப்பட்ட இலத்திரனியல் கடிதத்தின் பிரதியொன்று மாத்திரம் சமா்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளா் நாயகத்தினால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்றை நியமித்தல் தொடர்பாக 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய கடிதம், எங்கள் நிறுவனத்திற்கு 2020 பெப்ரவரி 05 ஆம் திகதி பக்ஸ் மூலம் கிடைக்கப் பெற்றதுடன், அது மீள் காப்புறுதி திணைக்களத்திற்கு 2019 பெப்ரவரி 08 ஆம் திகதி கிடைத்திருந்தது. | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.12 இன் பிரகாரம் பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினதும் அங்கத்தவர்களினால் வெளிப்படுத்துகையொன்று (Declaration) பெறப்பட வேண்டியிருந்த போதிலும், இரண்டு உத்தியோகத்தா்களினால் அவர்களின் கையொப்பத்துடன் அந்த வெளிப்படுத்துகை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) TEC கூட்டத்திற்காக ஒரு அங்கத்தவர் சமூகமளிக்காதிருந்ததுடன் சமூகமளிக்காமைக்குரிய குறிப்பேனும் இடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கேள்வி பதிவேட்டிற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்காக SCAPC கூட்டமொன்று நடாத்தப்பட்ட போதிலும், அதில் ஒரு அங்கத்தவரின் வருகை மாத்திரம் குறிப்பிடப்பட்ட போதிலும், தீா்மானம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணம் இடப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிப்பதற்காக தேவையான கோவைகளை மீண்டும் வழங்கப்படா திருந்தமையினால் பதிலளிக்க முடியா திருந்தது | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) கேள்வி மதிப்பீட்டிற்காக நடைபெற்ற வுநுஊ கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் மூன்று சமா்ப்பித்திருந்ததுடன் ஆகக் கூடிய விலை சமா்ப்பித்த நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு தீா்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும், ஆகக் குறைந்த விலையான பில்லியன் ஒன்று வரை குறைக்க வேண்டியிருந்தமை அங்கத்தவா்கள் இருவரினால் குறிப்பிடப்பட்டதன் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| (v) ஆகக் குறைந்த விலை ரூபா 01 மில்லியன் வரை குறைக்க வேண்டியிருந்ததாக இரண்டு அங்கத்தவர்களினால் குறிப்பிடப்பட்டமையினால் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி முன்மொழிவு திட்டம் தொடர்பாக உடன்படிக்கை 2018 ஆம் ஆண்டிற்குரிய வழங்குனர் நிறுவனத்திற்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2019 யூலை 22 ஆம் திகதி நடைபெற்ற SCAPC கூட்டத்தின் பிரகாரம் அந்த கம்பனி 2016 இன் வெள்ள அனர்த்தங்களுக்காக ரூபா 17,220,680 தொகை நிதியத்திற்கு மீளளிப்பு செய்ய வேண்டியிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் அந்த தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய கடித்தின் மூலம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மீள் காப்புறுதியை நீடித்து தருமாறு நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் உரிய கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ) நிதியத்தின் பணிப்பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மக்கள் பிரச்சினைகள் மற்றும் பயங்கரவாதத்தின் போது நிதியத்தின் மீள்காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய பெறுகைகள்.** | | |
| நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 1987 நவம்பர் 18 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மக்கள் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாத சந்தர்ப்பங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீள்காப்புறுதி செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய பெறுகைக் கோவைகள் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| SRCC & TR பிரிவில் 2019 ஆம் ஆண்டில் மீள் காப்புறுதி பெறுகைக்குரிய அமைச்சரவை பெறுகைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் மூலம் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (i) கேள்விதாரர்களுக்கு மூலப் பிரதி அனுப்பப்படாதிருந்தமையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு சமர்ப்பிக்கப்பட்டு கேள்வி செல்லுபடியற்றதாக பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் கேள்வியை மீண்டும் கோருவதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (ii) கட்டாய கேள்வி கோரப்படுகின்ற காலமான 42 நாட்கள் அளவு காணப்படாமையினால் மேலதிகமாக 02 வாரங்களை வழங்குவதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (iii) காணப்படுகின்ற மீள்காப்புறுதி 2019 யூலை 01 ஆம் திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (iv) அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் நீடிப்பதற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| அதன் பிரகாரம் 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை பத்திர இலக்கம் 108232/2952/19 ஆன தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதி மேவுகை கால எல்லையை நீடிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஒக்டோபர் 11 ஆம் திகதிய குறிப்பின் குறிப்பிடப்பட்ட பிரகாரம் 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 2018 ஆம் ஆண்டில் வழங்குனர் கம்பனியிடம் இருந்து மீள் காப்புறுதி மேவுகையை பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை 2018 ஆம் ஆண்டில் வழங்குனர் கம்பனியிலிருந்து மீள் காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கு 2019 ஒக்டோபர் 11 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பொன்றில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(இ) விவசாய காப்புறுதி மேவுகைகளை மீள் காப்புறுதிக்குரிய பெறுகைகள**<br>-------------------------------------- | | |
| விவசாய காப்புறுதிகளில் மீள் காப்புறுதிக்குரியதாக நியமிக்கப்பட்ட 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய அமைச்சரவை பெறுகைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | விவசாய காப்புறுதி மேவுகை மீள் காப்புறுதிகளுக்குரியதாக நியமிக்கப்பட்ட 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அமைச்சரவை பெறுகைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் கேள்வி இரத்துச் செய்யப்பட்டுள்ளது | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஈ) மீள் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 30 சதவீதமான கட்டாய மீள்காப்புறுதி மேவுகையை கையேற்பதற்குரிய பெறுகைகள்.**<br>-------------------------------------- | | |
| 2019/2020 ஆம் ஆண்டிற்காக மீள் காப்புறுதி மேவுகையை கையளிப்பதற்கான பெறுகைகளுக்காக பொருத்தமான மீள்காப்புறுதியாளர் தெரிவு செய்வதற்காக நிதியத்தினால் 2019 பெப்ரவரி 12 ஆம் திகதிய Daily News பத்திரிகையிலும் நிதியத்தின் இணையதளத்தின் மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்ததுடன் பெறுகைச் செயற்பாடுகள் மார்ச் 25 ஆம் திகதி முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (i) மீள்காப்புறுதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் உரிய தேவைகளின் பிரகாரம் ஒரு காப்புறுதி நிறுவனத்தின் மூலம் அனுபவங்கள் தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ஆகக் குறைந்த நிதி இயலுமையை மேவுகை செய்யாமையின் அடிப்படையில் (Financial Strength) மற்றும் மீள் காப்புறுதி இழப்பீட்டை அறவிடல் தொடர்பாக திருப்திகரமான அனுபவ அறிக்கையிடப்பட்டமையினால் மீண்டும் கூறு விலை கோருவதற்கும் மற்றும் புதிய பெறுகைத் திட்டத்தின் மூலம் சகலவற்றிலும் பொருத்தமானதாக அது நிதி அமைச்சின் காணப்படுகின்ற அமைச்சரவை நிலையான பெறுகை குழுவொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகக் குறைந்த விலையை தெரிவு செய்வதற்கு நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) எவ்வாறாயினும் சர்வதேச போட்டியாளர் கேள்வி கோரல் நடைமுறைகளுக்காக கால எல்லை 91 நாட்கள் எடுக்கின்றமையினால் காணப்படுகின்ற மீள் காப்புறுதி மேவுகைகள் 2019 யூன் 25 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு 2019 மே 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை பெறுகைக் குழுவின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| (iii) புதிய பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் கேள்விகளை சமா்ப்பிக்கும் காலம் 2019 ஒக்டோபா் 21 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. அதனால் உரிய கேள்வி நடைமுறைகளில் தாமதம் ஏற்பட்டமையின் காரணமாக காணப்படுகின்ற மீள் காப்புறுதி மேவுகை 2019 மாா்ச் 15 ஆம் திகதி முதல் 2020 மாா்ச் 15 ஆம் திகதி வரை உடன்படிக்கையை நீடிப்பதற்குரிய குழு கூட்டத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் HF/113/CM/2019/296 முன் மொழிவின் பிரகாரம் 2019 ஒக்டோபா் 11 ஆம் திகதி நிதி அமைச்சா் முறையான அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமா்ப்பிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதி கால எல்லையை நீடிக்கும் குறிப்பிற்காக 19/2952/108/232-1 என்ற அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| I. புதிய கட்டிடத்தின் தரை மாடியை பயன்படுத்தும் நோக்கில் பௌதீக சூழலொன்றை நிர்மாணித்தல் மற்றும் அந்த நிலையத்தில் நுகர்வோரை மையப்படுத்தி சேவை வழங்கல் முறையொன்றை திட்டமிடுவதன் மூலம் அரச நிறுவனங்களின் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட போதிலும் அதற்குரிய தகவல்கள் எதுவும் செயல்முன்னேற்ற அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | புதிய கட்டிடத்தின் தரை மாடியில் பயன்பாட்டு சேவைகளுக்கான நிலையத்தை தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஏதாவது தாமதம் ஏற்படுமாயின் தற்போது அந்த நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் காணப்படுவதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| II. அக்ரஹார காப்புறுதி நுகர்வோர் தரவு அடிப்படையுடன் தொடர்புடைய ஒன்றிணைந்த உரித்து முகாமைத்துவ முறையொன்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் போது முதலாவது காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டு வரையிலும் அது பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதனை அடைந்து கொள்தல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | தற்போதைய முகாமைத்துவம் ICTA நிறுவனத்தின் ஆலோசனை சேவையினை பெற்று அந்த ஆலோசனை சேவையின் அடிப்படையில் உரிய உரித்துக்களை செலுத்துதல் மற்றும் அக்ரஹார வருமான முறைமையொன்றை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| III. சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் கால்நடை வள பண்ணையாளர்களை மேவுகை செய்யும் வகையிலும் கமநல மற்றும் விவசாய காப்புறுதி சபை (AAIB) உடன் மேலதிக பணிப் பொறுப்புக்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்ற கட்டமைப்புக்களை கட்டியெழுப்பும் செயலாற்றல் குறிகாட்டிகளுடன் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி மேவுகை (NNDIS) இற்காக நிதி அமைச்சு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சுடன் இணக்கப்பாட்டுடன் நலன் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல் மற்றும் எல்லைகளை மேவுகை செய்தல் என்ற நோக்கங்கள் நிதியத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020.03.31 ஆம் திகதியின் பின்னர் 2020/2021 ஆம் ஆண்டிற்காக காப்புறுதி கொள்கை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் விநியோகிக்கப்படாதிருந்தமை நிதியத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் கால்நடை வள பண்ணையாளர்களை மேவுகை செய்யும் வகையிலும் கமநல மற்றும் விவசாய காப்புறுதி சபை (AAIB) உடன் மேலதிக பணிப் பொறுப்புக்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்ற கட்டமைப்புக்களை கட்டியெழுப்பும் செயலாற்றல் குறிகாட்டிகளுடன் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி மேவுகை (NNDIS) இற்காக நிதி அமைச்சு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சுடன் இணக்கப்பாட்டுடன் நலன் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல் மற்றும் எல்லைகளை மேவுகை செய்தல் என்ற நோக்கங்கள் நிதியத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020.03.31 ஆம் திகதியின் பின்னர் 2020/2021 ஆம் ஆண்டிற்காக காப்புறுதி கொள்கை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் விநியோகிக்கப்படாதிருந்தமை நிதியத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| IV பொதுவான காப்புறுதியில் நலனாளிகளுக்கு கவனத்தில் கூடிய பங்களிப்பொன்றை வழங்குவதற்காக வணிக படிவத்தில் பொதுவான காப்புறுதி முயற்சியொன்றை அபிவிருத்தி செய்வதன் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் ஒட்டு மொத்த தவணை வருமானத்தில் சராசரியான காப்புறுதியில் 06 சதவீதம் காலாண்டு ரீதியான பங்களிப்பொன்று அதாவது 24 சதவீதம் வருடாந்த பங்களிப்பொன்றை வழங்குதல் மற்றும் பொதுவான காப்புறுதியின் மூலம் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 17.5 மில்லியன் பெறுமதியொன்றை காலாண்டு ரீதியாக அதாவது வருடாந்தம் ரூபா 70 மில்லியன் இலாப பங்களிப்பொன்று பொதுவான காப்புறுதி பிரிவின் நிதியத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>அதன் செயல்முன்னேற்றமும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 2019 இன் வருடாந்த நிதிக் கூற்றில் பொது காப்புறுதிகளின் மூலம் வருடாந்தம் உழைக்கப்பட்ட ரூபா 13,889,693 நட்டமாக இருந்தமை அவதானிக்கப்பட்டமையின் காரணமாக அந்த இலக்கு அடையப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |

# நிதி நிலைமைக் கூற்று
# விரிவான வருமானக் கூற்று

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 1 | **12,693,194,645** | 9,683,874,748 |
| அக்ரஹாரவிற்காக கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 1 | **4,838,723,551** | 4,017,420,904 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதிக் கட்டணம் | | **1,780,383,987** | 2,138,167,676 |
| ஒப்பளிக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் | | **(1,191,875,662)** | (2,460,537,699) |
| SRCC & Tr நிதியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டவை | | **-** | (25,439,340) |
| **தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணம்** | | **18,120,426,521** | 13,353,486,289 |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டின் தேறிய மாற்றம் | | **(997,664,716)** | (374,789,862) |
| UPR இல் மீள்காப்புறுதி பங்கு மாற்றம் | | **(674,735,040)** | 674,735,040 |
| **தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம்** | | **16,448,026,766** | 13,653,431,467 |
| | | | |
| **ஏனைய தொழிற்பாடுகளில் இருந்தான வருமானம்** | | | |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 2 | **4,438,361** | 6,467,415 |
| முதலீடுகளும் ஏனைய வருமானமும் | 3 | **1,264,778,325** | 1,343,399,914 |
| **ஏனைய வருமானம்** | | **1,269,216,686** | 1,349,867,329 |
| | | | |
| செலுத்தப்பட்ட மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும் | 4 | **(9,934,309,446)** | (9,763,499,280) |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் | 4 | **498,500,000** | |
| ஒப்பந்தப் பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | **(2,522,543,002)** | 1,554,911,720 |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒப்பந்தப் பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | **(43,234,155)** | (1,016,766,143) |
| IBNR இல் மொத்த மாற்றம் | 4 | **(77,731,211)** | (465,294,517) |
| **தேறிய நன்மைகளும் உரிமைக்கோரிக்கைகளும்** | | **(12,079,317,814)** | (9,690,648,221) |
| | | | |
| எழுத்துறுதி மற்றும் கொள்ளல் கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்கலாக) | 5 | **(2,055,691,850)** | (1,609,566,546) |
| | | | |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | 6.1 | **(552,685,117)** | (414,244,501) |
| நிதி ஆகுசெலவு மற்றும் ஏனைய தொடர்புடைய ஆகுசெலவு | 6.2 | **(21,062,606)** | - |
| | | | |
| **மொத்த நன்மைகள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவினங்கள்** | | **(14,708,757,386)** | (11,714,459,268) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | **3,008,486,066** | 3,288,839,528 |
| **வருமான வரியின் புறமாற்றல்** | | **105,600,661** | (105,600,662) |
| **ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)** | | **3,114,086,727** | 3,183,238,866 |
| | | | |
| **ஏனைய முழு மொத்த வருமானம்** | | | |
| | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | **517,879,752** | 131,176,710 |
| ஓய்வூதிய நன்மைகளுக்கான தேவைப்பாடு மீது உண்மையான ஈட்டுகை / (நட்டம்) | | **(574,033)** | (9,075,505) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை | | **-** | (2,102,126) |
| | | | |
| **அந்த வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி** | | | |
| | | | |
| **மொத்த விரிவான வருமானம்** | | **3,631,392,446** | 3,303,237,946 |

# நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் 2019 அன்று முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 7 | **8,147,706** | 2,806,809 |
| ஆதனங்களும், பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் | 8 | **40,497,303** | 29,362,528 |
| குத்தகைச் சொத்துக்களின் பயன்படுத்துவதற்கான உரிமை | 9 | **130,651,150** | - |
| நிதிச் சொத்துக்கள் | 10 | **15,444,667,263** | 10,674,617,497 |
| கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி | 11 | **1,599,620,442** | 1,468,768,756 |
| கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் | 12 | **2,010,815,480** | 1,548,824,733 |
| மென் கடன்கள் | 13 | **3,754,982** | 5,725,010 |
| ஏனைய நிதியல்லாச் சொத்துகள் | 14 | **109,855,613** | 98,479,866 |
| பிற்போடப்பட்ட ஆணைக்குழு | 15 | **758,831,301** | 620,751,687 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 16 | **600,106,740** | 1,145,855,712 |
| **மொத்தச் சொத்துகள்** | | **20,706,947,980** | 15,595,192,598 |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புகள்** | | | |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகள் | | **7,143,097,715** | 7,424,644,966 |
| ஏனைய உரிமைப்பங்குக் கூறு | | **50,850,926** | (466,454,792) |
| ஒதுக்கு மீள்மதிப்பீடு | | **(2,102,126)** | (2,102,126) |
| **மொத்த உரிமைப்பங்கு** | | **7,191,846,515** | 6,956,088,047 |
| **பொறுப்புகள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | 19 | **11,803,879,609** | 7,531,205,639 |
| ஓய்வூதிய நன்மைகள் தேவைப்பாடு | 20 | **34,192,463** | 28,510,041 |
| குத்தகை கடன்கொடுனர் | 21 | **141,801,845** | - |
| ஏனைய பொறுப்புகள் | 17 | **1,535,227,547** | 1,075,776,134 |
| வங்கி மேலதிகப் பற்று | 16 | **-** | 3,612,734 |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **13,515,101,463** | 8,639,104,548 |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | **20,706,947,980** | 15,595,192,598 |

இந்த நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றது என்பதை சான்றுபடுத்துகின்றேன்.

**தம்மிகா வீரகோன்**
**பிரதான நிதி அலுவலர் (பதில் கடமை)**
**உதவிப் பொது முகாமையாளர் - நிதி**

**கே.ஜீ.கே. விமலவீர**
**பிரதான நிதி அலுவலர்**

பக்கம் 46 தொடக்கம் 79 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன. நிதிக் கூற்றுகளைத் தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளன.

**மவாஹிப் மவ்ஜூட்**
**தலைவர்**

**பிரதான நிறைவேற்று அலுவலர்**

28 பெப்ரவரி 20
கொழும்பு

# உரிமைப்பங்கு மாற்றக்கூற்று

31 டிசம்பர் 2019இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பிடித்துவைத்த உழைப்புகள் | நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடியவை | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2015 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | 8,744,382,870 | (88,871,109) | - | 8,655,511,761 |
| ஆண்டுக்கான இலாபம் | - | 2,839,751,855 | - | 2,839,751,855 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | (182,717,265) | - | (182,717,265) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய ஈட்டுகை | - | 4,740,893 | - | 4,740,893 |
| மீள்காப்புறுதி இன்வொயிஸ்களின் இரத்தாக்கம் | (34,714,833) | - | - | (34,714,833) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,200,000,000) | - | - | (3,200,000,000) |
| செலுத்த வேண்டிய வருமான வரி - 2012/2013 | (578,674,926) | - | - | (578,674,926) |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 47,663,316 | - | - | 47,663,316 |
| தேய்மானச் சீராக்கம் | 2,614,431 | - | - | 2,614,431 |
| தவணைக் கட்டண மீள்கொடுப்பனவு சீராக்கங்கள் | 7,306,615 | - | - | 7,306,615 |
| SLIPS திருப்பம் மோட்டார் அல்லாதவை | 22,500 | - | - | 22,500 |
| மோட்டார் தவணைக் கட்டணம் | (75,000) | - | - | (75,000) |
| கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பின் பதிவழிப்பு | (392,000) | - | - | (392,000) |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண சீராக்கங்கள் | 3,869,230 | - | - | 3,869,230 |
| வாடகைச் செலவு | (48,450) | - | - | (48,450) |
| **31 டிசம்பர் 2016இல் மீதி** | 7,831,705,609 | (266,847,481) | - | 7,564,858,128 |
| ஆண்டுக்கான இலாபம் | 976,233,935 | - | - | 976,233,935 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 208,755,171 | - | 208,755,171 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (1,500,000,000) | - | - | (1,500,000,000) |
| வருட முடிவில் முடிவுறுத்துகை வேறுபாடு | (44,253,311) | - | - | (44,253,311) |
| செலுத்த வேண்டிய வருமான வரி - 2016/2017 | (97,669,225) | - | - | (97,669,225) |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 26,235,147 | - | - | 26,235,147 |
| பயிர் AAIB மீள்கொடுப்பனவு | 42,871,673 | - | - | 42,871,673 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு 2016 | (3,140,650) | - | - | (3,140,650) |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் பொது | (2,921,713) | - | - | (2,921,713) |
| ஆரம்பித்தல் - AR Control RI | (38,856,406) | - | - | (38,856,406) |
| ஆரம்பித்தல்- AR Control Non Motor | 83,109,718 | - | - | 83,109,718 |
| காசோலைத் திருப்பம் | (324,575) | - | - | (324,575) |
| ஊ.ந.நிதியம 3% | 305,147 | - | - | 305,147 |
| மோட்டார் சைக்கிள் முற்பணம் மற்றும் மோட்டார் கிடைப்பனவுகள் | (57,582,588) | - | - | (57,582,588) |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | (2,068,743) | - | - | (2,068,743) |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (493,887) | - | - | (493,887) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | - | (8,699,331) | - | (8,699,331) |
| | **7,213,150,131** | **(66,791,641)** | **-** | **7,146,358,490** |
| ஆண்டுக்கான இலாபம் | 3,183,238,866 | - | - | 3,183,238,866 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | (390,587,646) | - | (390,587,646) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (2,750,000,000) | - | - | (2,750,000,000) |
| சொத்துக்களின் மீள்மதிப்பீடு | - | (2,102,126) | - | (2,102,126) |
| அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீது மீள்மதிப்பீடு | 6,276,415 | - | - | 6,276,415 |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 25,070,657 | - | - | 25,070,657 |
| NNDIS மீள்நிறுவல் மற்றும் சீராக்கல் கட்டணம் | (291,472,452) | - | - | (291,472,452) |
| கிடைக்க வேண்டிய RETRO மீள்காப்புறுதி நாணயப்பரிமாற்ற நட்டம் | (3,888,779) | - | - | (3,888,779) |
| தீர்க்கப்பட்ட இன்வொயிஸ் மற்றும் CN இரத்தாக்கம் | 41,810,528 | - | - | 41,810,528 |
| மீள்காப்புறுதி ஆரம்ப மீதியின் காணமல் போன இன்வொயிஸ் | 10,980,047 | - | - | 10,980,047 |
| NNDIS இரத்துசெய்யப்பட்ட காசோலை | 12,682,341 | - | - | 12,682,341 |
| காசோலை இரத்தாக்கம் | 2,080,928 | - | - | 2,080,928 |
| பிணைக் கூப்பன் வட்டி | (8,856,250) | - | - | (8,856,250) |
| சம்பளத் திருத்தம் | (1,037,300) | - | - | (1,037,300) |
| விடுமுறை காசாக்கல் | (2,764,983) | - | - | (2,764,983) |
| நகல் CN மீள்காப்புறுதி இரத்தாக்கம் | (7,458,551) | - | - | (7,458,551) |
| யூரோ அமெரிக்க டொலர் நாணயப்பரிமாற்ற ஈட்டுகை ஒதுக்கம் | (5,082,679) | - | - | (5,082,679) |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (83,955) | - | - | (83,955) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | - | (9,075,505) | - | (9,075,505) |
| **31 டிசம்பர் 2018இல் மீதி** | **7,424,644,965** | **(466,454,792)** | **(2,102,126)** | **6,956,088,048** |
| ஆண்டுக்கான இலாபம் | 3,114,086,727 | - | - | 3,114,086,727 |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (139,165,533) | - | - | (139,165,533) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,267,970,000) | - | - | (3,267,970,000) |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 11,501,557 | - | - | 11,501,557 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 517,879,752 | - | 517,879,752 |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | - | (574,033) | - | (574,033) |
| **31 டிசம்பர் 2019இல் மீதி** | **7,143,097,716** | **50,850,927** | **(2,102,126)** | **7,191,846,517** |

பக்கம் 46 தொடக்கம் 79 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன.

அடைப்புக் குறிக்குள் உள்ள உருக்கள் கழித்தலைக் குறிக்கின்றது

# காசுப்பாய்ச்சல் மாற்றக்கூற்று

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **3,008,486,066** | 3,288,839,528 |
| **சீராக்கங்கள் :** | | | |
| வட்டி வருமானம் | | **(1,215,544,996)** | (1,168,986,729) |
| தேய்மானம் | | **14,354,664** | 12,452,639 |
| கடன் கரைப்பு | | **1,092,955** | 273,100 |
| தேறிய முகப்பெறுமதி மாற்றங்கள் | | **517,305,719** | (399,663,151) |
| முன்னைய வருட சீராக்கங்கள் | | **(139,165,533)** | (228,020,447) |
| நிலையான சொத்துக்களின் அகற்றலின் மீதான இலாபம்/நட்டம் | | **756,279** | (2,352,313) |
| | | **2,187,285,153** | 1,502,542,627 |
| தொழிற்பாட்டுச் சொத்துக்களின் மாற்றம் | A | **(872,948,944)** | 5,465,861,509 |
| தொழிற்பாட்டுப் பொறுப்புகளின் மாற்றம் | B | **4,985,210,310** | (2,876,425,787) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | **6,299,546,518** | 4,091,978,349 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | | **6,299,546,518** | 4,091,978,349 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| நிதி முதலீட்டின் தேறிய அகற்றல்/கைக்கொள்ளல் | | **(4,770,049,767)** | (2,513,189,705) |
| பெற்றுக்கொண்ட வட்டி | | **1,215,544,996** | 1,168,986,729 |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | | **11,501,557** | |
| மென் கடன்களின் மீள்பெறுகை | | **1,970,028** | 8,344,887 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அகற்றல் | | **1,222,888** | 9,018,980 |
| கட்புலனாகச் சொத்துக்களின் கைக்கொள்ளல் | | **(6,433,851)** | (1,702,201) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கைக்கொள்ளல் | | **(27,468,606)** | (4,836,560) |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | **(3,573,712,754)** | (1,333,377,870) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான பாய்ச்சல்** | | | |
| திரட்டுநிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | | **(3,267,970,000)** | (2,750,000,000) |
| நிதிச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | **(3,267,970,000)** | (2,750,000,000) |
| **காசும் காசுக்குச் சமனானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/குறைவு** | C | **(542,136,238)** | 8,600,480 |
| ஆண்டு இறுதியில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | | **1,142,242,978** | 1,133,642,497 |
| ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | | **600,106,740** | 1,142,242,978 |
| **காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புகள்** | | | |
| **அ. தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | | |
| பிற்போடப்பட்டதரகில் (அதிகரிப்பு)/குறைவு | | **(138,079,613)** | (23,668,078) |
| கிடைக்கவேண்டிய மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்தில் (அதிகரிப்பு)/குறைவு | | **(130,851,686)** | 3,105,332,165 |
| கிடைக்கவேண்டிய தவணைக்கட்டணத்தில் (அதிகரிப்பு)/குறைவு | | **(461,990,747)** | 560,340,237 |
| ஏனைய நிதி சாராச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைவு | | **(11,375,748)** | 1,823,857,184 |
| குத்தைகையைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் (அதிகரிப்பு)/குறைவு | | **(130,651,150)** | - |
| | | **(872,948,944)** | 5,465,861,509 |
| **ஆ தொழிற்பாட்டுப் பொறுப்புகளில் மாற்றம்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளில் (அதிகரிப்பு)/குறைவு | | **4,272,673,969** | (1,348,651,101) |
| ஓய்வூதிய நன்மைத் தேவைப்பாடுகளின் (அதிகரிப்பு)/குறைவு | | **5,682,422** | (1,150,323) |
| ஏனைய பொறுப்புகளின் (அதிகரிப்பு)/குறைவு | | **565,052,074** | (1,526,624,363) |
| குத்தகைக் கடன் பெறுனர்களின் (அதிகரிப்பு))/குறைவு | | **141,801,845** | |
| | | **4,985,210,310** | (2,876,425,787) |
| **இ காசும் காசுக்குச் சமனானவற்றினதும் அதிகரிப்பு /(குறைவு)** | | | |
| ஆண்டு இறுதியில் தேறிய காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | **600,106,740** | 1,142,242,978 |
| கழிப்பனவு: ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | | **1,142,242,978** | 1,133,642,497 |
| காசும் காசுக்குச் சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(542,136,238)** | 8,600,481 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 11. கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

2007ஆம் ஆண்டு 28ஆம் இலக்க திருத்தச் சட்டத்துடன் இணைந்த "2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்" மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையானது ("இச் சபை") உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல.95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம்முகவரியிலேயே அமைந்துள்ளது.

### 1.2 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்

சபையின் தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

### 1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இச்சபையின் பிரதான செயற்பாடுகளானவை ஆயுள் அல்லாத (பொது) காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதித் தொழில் என்பவற்றை நடாத்திச் செல்லல் ஆகும்.

மேலும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 1% பயிர் தீர்வை சபையினால் சேகரிக்கப்பட்டு விவசாயக் காப்புறுதித் திட்டத்திற்கு பயிர் தீர்வையிலிருந்து செலுத்தப்படுகின்றது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சபையின் பிரதான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு

பணிப்பாளர் சபையானது இந் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து முன்னளிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியிலுள்ளவாறு இச்சபையின் ஊழியர் வலு 306 (2018 - 238) ஆக இருந்தது.

### 1.6 பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுகளுக்கான அங்கீகாரம்

பணிப்பாளர் சபையினால் 31 டிசம்பர் 2019ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான அனுமதி மற்றும் விநியோகிப்பதற்கான அங்கீகாரம் 27 பெப்பரவரி 2020ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்கும் வகையில் 27 பெப்பரவாரி 2020ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது.

## 2. தயாரிப்பதற்கான அடிப்படை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 இணக்கக்கூற்று

வேறுவகையில் குறிப்பிடப்பட்டால் அன்றி இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA - இலங்கை) பிரகடனம் செய்யப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு அமைவாகவும், 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்கமைப்புச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும், நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதிக்கூற்றில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.**

- காலாண்டு இறுதியில் சபையின் நிலை மீதான தகவல்களை நிதி நிலைமைக்கூற்று (பக்கம் 43) வழங்குகின்றது.
- மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் சபையின் நிதியியல் செயலாற்றுகை தொடர்பான தகவல்களை விரிவான வருமானக்கூற்று வழங்குகின்றது. (பக்கம் 42)
- பங்குதாரர்களின் உரிமைப்பங்குகளில் ஏற்பட்ட அனைத்து மாற்றங்களையும் உரிமைப் பங்குகளின் மாற்றக்கூற்று வெளிப்படுத்துகின்றது. (பக்கம் 44)
- சபையின் காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றை உருவாக்கும் திறன் மற்றும் அந்த காசுப் பாய்ச்சல் பயன்படுத்தல் தொடர்பான விபரங்களை பயன்படுத்துனர்களுக்கு காசுப் பாய்ச்சல் கூற்று வழங்குகின்றது (பக்கம் 45) மற்றும் நிதி மற்றும் நிதியல்லா தகவல்களைக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் உள்ளடக்கியுள்ளன. (பக்கம் 46 இருந்து 79).

### 2.2 அளவீடுகளின் அடிப்படை

நிதியியல் கூற்றுகளில் உள்ள கீழ்வரும் பொருண்மை அயிட்டங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுகளில் ஏனைய அனைத்தும் வரலாற்றுக் கிரயம் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

| அயிட்டம் | அளவீடுகளின் அடிப்படை | குறிப்பு இல. |
|---|---|---|
| கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய நிதியியல் சொத்துக்கள் | உண்மைப் பெறுமதியில் | 10.1 |
| விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் | உண்மைப் பெறுமதியில் | 10.2 |
| வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள். | வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி உண்மையில் பெறுமதி மதிப்பிடப்பட்டதுடன் அடையாளம் காணப்பட்டது. | 20 |
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் பொறுப்புகள் | கணிப்பீடு தீர்மானப் பெறுமதி IRCSL இனால் விநியோகிக்கப்பட்ட கணிப்பீட்டு வழிகாட்டலின் அடிப்படையில் அமைந்துள்ளது. | 19.1 |
| உற்றறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத/ உற்றறப்பட்ட ஆனால் போதியளவில் அறிக்கையிடப்படாத | கணிப்பீட்டு தீர்மானப் பெறுமதி கணிப்பீட்டுப் பொறிமுறைகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | 19.3 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 2.3 நிதியியல் கூற்றுகளின் சமர்ப்பிப்பு

அதனுடைய தொடர்புடைய திரவத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் நிதி நிலைமைக் கூற்றினை சபை சமர்ப்பிக்கின்றது. நிதியியல் கூற்றுகளைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு எவ்வித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றன மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொகையை சபையானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினைப் பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை முன்னளிக்கப்படும்.

## 2.4 தொழிற்பாட்டு மற்றும் முன்னளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை ரூபாவில் (LKR) முன்னளிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் முன்னளிக்கப்படும் சகல நிதித் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மிகக் கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

## 2.5 பொருண்மியமும் ஒருங்கிணைவும்

ஒவ்வொரு ஒரேமாதிரியான பொருண்மையுடைய அயிட்டங்கள் வெவ்வேறாக வெளியிடப்பட்டுள்ளது. அவை பொருண்மையுடையனவாக இல்லாதிருந்தாலொழிய அயிட்டத்தின் தன்மை அல்லது செயற்பாடு தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.6 அறிக்கையிடும் காலப்பகுதி

அறிக்கையிடும் காலப்பகுதி 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையாகும். பொருத்தமானவிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்துவரும் குறிப்புகளில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன

## 2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிட்ட அளவுகளையும் பாதிக்கின்ற தீர்வுகள்.

மதிப்பீடுகளும் அடிப்படையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படும் காலப்பகுதியிலும் ஏதேனும் பாதிக்கப்படும் எதிர்காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளின் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான தர்க்க ரீதியான தீர்வுகளைப் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.7.1 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சபையின் முகாமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றல் மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தினைத் தொடர்வதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதிலும் திருப்தி கண்டுள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றலின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை விளைவிக்கக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

### 2.7.1 நிதியியல் கருவிகளின் உண்மைப் பெறுமதி

கணித நுட்பங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்திக் கவனிக்கத்தக்க சந்தைவிலை நிர்ணயிக்கப்படாதவைக்கு நிதியியல் சொத்துகளினதும் நிதியியல் பொறுப்புகளினதும் உண்மைப் பெறுமதிகளின் தீர்மானமானது நிதியியல் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரிக்கான உள்ளீடுகள் அவதானிக்கக்கூடிய சாத்தியமான சந்தைத் தரவுகளில் இருந்து தருவிக்கப்பட முடியும், ஆனால் அது கிடைக்கப்பெறாவிடில், உண்மைப் பெறுமதியை நிறுவுவதற்கு தீர்ப்பு அவசியமாகும்.

### 2.7.2 குறைவு மதிப்பீடு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து ஒன்றிற்கு அல்லது காசு பிறப்பாக்கல் அலகு ஒன்றுக்கு ஏதேனும் குறைவு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய தனிப்பட்ட சொத்தின் அல்லது காசு பிறப்பாக்கல் அலகிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கும் மற்றும் உரிய காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பிடும் பொருட்டு ஒரு பொருத்தமான கழிவு வீதத்தினை தெரிவு செய்து கொள்வதற்கும் முகாமையினை தேவைப்படுத்தப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவு வீதங்களைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இம் மதிப்பீடானது சபையினை தேவைப்படுத்தப்படுகின்றது ஆதலினால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

### 2.7.3 பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கான ஏற்பாடு

சபையானது சாதாரண வியாபார நடவடிக்கையில் இதற்கு எதிரான சட்ட ரீதியான உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வெற்றியீட்டும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் சாத்தியப்பாடு தொடர்பில் தீர்வுகளை முகாமையானது மேற்கொண்டுள்ளது. சாத்தியமான பொருளாதார நன்மை வெளிப் பாய்ச்சல் தொகை காணப்படுவதனால் சட்ட உரிமைக் கோரிக்கையை முடிவுறுத்தும் காலமானது நிச்சயமற்றது. கால அளவும் கிரயமும் இறுதியாக உரிய சட்ட நியாயாதிக்கங்களிலுள்ள உரிய செய்முறையில் தங்கியுள்ளன.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் வழக்கு ஏற்பாட்டுக்காக மொத்த சட்டக் கோரிக்கைகளில் 15% வீதத்தை வழங்குவதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 2.7 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.7.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

சபையின் நிதியில் கூற்றுகள், சபை பயன்படுத்தும் நாணயமான இலங்கையின் ரூபா நாணயத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்நியச் செலவாணிகளிலான மாற்றங்களானவை கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணி வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

அந்தியச் செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணிப் பரிமாற்ற வீதத்தில் மீள்மாற்றப்படுகின்றன. அனைத்து வேறுபாடுகளும் இலாப அல்லது நட்டக்கூற்றுக்கு எடுக்கப்படுகின்றது.

### 2.7.2 நிதிசாராச் சொத்துக்கள் குறைவடைதல்

சொத்தொன்று குறைவடையலாம் என்னும் குறிகாட்டியொன்று உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான வருடாந்த குறைவடைதல் பரிசோதிப்பு தேவைப்படுத்தப்படும் போது சபையானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்தொன்றின் மீளப்பெறக்கூடிய தொகையானது விற்பதற்கான கிரயங்கள் மற்றும் அதன் பாவனைப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகளின் உண்மைப் பெறுமதியிலும் அதிகமாகும் தனிப்பட்ட சொத்தொன்றுக்கான மீளப்பெறக்கூடிய தொகையானது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் கூட்டங்களிலிருந்தானவற்றிலிருந்து பெருமளவு சுயாதீனமான காசு உட்பாய்ச்சல்களை அச் சொத்து பிறப்பிக்காதிருந்தாலொழிய வரையறுக்கப்படும். சொத்தொன்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகள் அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் அதிகமாகவிருக்குமிடத்து அச் சொத்தானது குறைவடைகின்றது எனக் கருதப்பட்டு அதன் மீளப் பெறக்கூடிய தொகைக்கு குறைத்து விடப்படும், பாவனைப் பெறுமதி மதிப்பீட்டில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களானவை குறித்தான ஆபத்துகளையும் பிரதிபலிக்கும் முன்-வரி கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்குக் கழிவிடப்படுகின்றன. விற்பதற்கான கிரயங்களைக் கழித்த உண்மைப் பெறுமதியினை வரையறுப்பதில் அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும்.

அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இனங்காணப்பட முடியாதிருப்பின் பொருத்தமான விலைமதிப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும். குறைவடைந்த சொத்தின் தொழிற்பாட்டுடன் ஒத்திசையும் அச்செலவின் வகுதிகளில் வருமானக்கூற்றில் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் குறைவடைதல் நட்டங்கள் இனங்காணப்படும்.

### 2.7.3 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

சபையானது நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் குறைவடைகின்றதா என மதிப்பீடு செய்கின்றது. ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இச் சபையானது மதிப்பிடுகின்றது.

சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்டுள்ள ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் (நேரிட்ட "இழப்பு நிகழ்வு" ஒன்று) விளைவாக குறைவின் யதார்த்தமான சான்று இருப்பின் அத்துடன் நம்பகரமான மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கூட்டத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு தாக்கத்தினை அந்த இழப்பு நிகழ்வு கொண்டிருந்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக் கூட்டம் ஒன்று குறைவடைந்திருப்பதாகக் கருதப்படும்.

- **கடன்கரைப்புக் கிரயத்தில் நிதியியல் சொத்துக்களின் குறைப்பு**

கடன் கரைப்புக் கிரயத்தில் சொத்துக்கள் மீது குறைப்பு நட்டம் சான்றாக அவதானிக்கப்பட்டால், குறைப்பு இழப்பின் அளவு சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணத்தின் தற்போதைய மதிப்புக்கும் (எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளைத் தவிர) அளவிடப்படுகின்து, நிதிச் சொத்தின் அசல் பயனுள்ள வட்டி விகிதத்தில் தள்ளுபடி செய்யப்படுகின்றது. சொத்தின் கொண்டு செல்லும் தொகை குறைக்கப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் நட்டமாக பதிவுசெய்யப்படுகின்றது.

சபையானது முதலில் குறைபாடுகளுக்கான புறநிலைச் சான்றுகள் தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துக்களுக்கு தனித்தனியாக இருக்கின்றதா, தனித்தனியாக அல்லது கூட்டாக தனித்தனியாக கையொப்பமிட முடியாத சொத்துக்கள் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. தனித்தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களுக்குக் குறைபாடுகளுக்கான புறநிலை சான்றுகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டால், குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொத்து ஒத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றது மற்றும் அந்த நிதிச் சொத்துக்களின் கூட்டம் பலவீனத்திற்காகக் கூட்டாக மதிப்பிடப்படுகின்றது. குறைபாட்டிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படும் மற்றும் குறைபாட்டு இழப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் குறைபாடுகளின் கூட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் குறைபாடு மதிப்பீடு செய்யப்படுகின்றது.

அடுத்தடுத்த காலகட்டத்தில், குறைபாடு இழப்பின் அளவு குறைந்த, குறைபாடு அங்கீகரிக்கப்பட்ட பிறகு நிகழும் ஒரு நிகழ்வுக்கு புறநிலை ரீதியாக தொடர்புடையதாக இருந்தால், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாடு இழப்பு மாற்றப்படும். அந்தச் சொத்தின் எடுத்துச் செல்லும் மதிப்பு திருப்பப்பட்ட திகதியில் அதன் கடன்கரைப்புத் தொகையைத் தாண்டாத அளவுக்கு ஒரு குறைபாடு இழப்பின் எந்த மாற்றமும் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

- **விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் கருவிகள் குறைவடைதல்.**

விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சொத்து குறைப்புடையதாக இருந்தால், அதன் செலவுகள் (ஏதேனும் முதன்மை திருப்பிச் செலுத்துதல் மற்றும் ஈடுசெய்யும் நிகர) மற்றும் அதன் தற்போதைய நியாயமான மதிப்பு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு அடங்கிய தொகை, மற்ற வருமான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாடு இழப்பு குறைவாக இருந்து விரிவான வருமான அறிக்கையின் சமநிலை விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தியுள்ள சமபங்கு கருவிகள் தொடர்பான மீள் திருப்பம் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படவில்லை.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

விரிவான வருமானக் கூற்றின் ஊடாக விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் என வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகள் மீதான குறைப்பு நட்டங்களின் திருப்பங்களானது திருப்பப்பட்டது, கருவிகளின் உண்மைப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டால், விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்ட குறைப்புநட்டங்களின் பின்னர் எழுகின்ற நிகழ்வுக்கு புறன்நிலையாக இருக்கும்.

- **கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களின் குறைவடைதல்**

நியாயமான மதிப்பில் எடுத்துச் செல்லப்படாத மேற்கோள் காட்டப்படாத உரிமைப்பங்கு கருவியில் குறைபாடு இழப்பு ஏற்பட்டதற்கான புறநிலை சான்றுகள் இருந்தால், அதன் நியாயமான மதிப்பை நம்பத்தகுந்த அளவீடு செய்ய முடியாது, அல்லது ஒரு வழித்தோன்றல் சொத்தின் மீது இணைக்கப்பட்ட மற்றும் அதை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுதல் வேண்டும் மேற்கோள் காட்டப்படாத உரிமைப்பங்கு கருவி, குறைப்பாட்டு இழப்பின் அளவில் நிதியியல் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் எதிர்கால மதிப்பீடு செய்யப்பட்ட தற்போதைய பண மதிப்புக்கும் இடையிலான வித்தியாசம் அளவிடப்படுகின்றது.

### 2.7.5 ஏற்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக தற்காலக் கடப்பாடு ஒன்றினை (சட்ட அல்லது உட்கிடையான)

சபையானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அத்துடன், பொருளாதார நலன்கள் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், ஒரு நம்பகரமான மதிப்பீடானது கடப்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட முடியும். சபையானது ஏற்பாடொன்றின் சிலவற்றை அல்லது சகலதையும் மீளளிக்கப்பட எதிர்பார்க்குமிடத்து மீளளிப்பானது மென்நிகராக நிச்சயமாக இருக்கும் போது மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளிப்பு இனங்காணப்படும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவினமானது ஏதேனும் தேறிய மீளளிப்பு வருமானக் கூற்றில் முன்னளிக்கப்படும். பணத்தின் நேரப் பெறுமதியின் விளைவானது அடிப்படையானதாகவிருப்பின் பொருத்தமானவிடத்து, பொறுப்புக் குறித்தான ஆபத்துக்களைப் பிரதிபலிக்கும் நிகழ்கால முன் வரி வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவிடப்படுகினறன. கழிவிடல் பயன்படுத்தப்படுமிடத்து காலம் முன்நோக்கிச் செல்வதன் காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது நிதிக் கிரயம் ஒன்றாக இனங்காணப்படுகின்றது. வளங்களின் வெளிப்பாய்ச்சலானது குறைவாகவே நிகழும் சந்தர்ப்பம் இருந்தாலொழிய சகல எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுகளில் ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்படும்.

சபையின் கருத்துப்படி, தற்போது நிறுவனத்திற்கு எதிராக இருக்கும் வழக்குகள், சாதாரண வணிகப் போக்கில் அறிக்கையிடப்பட்ட நிதி முடிவுகள் அல்லது சபையின் எதிர்கால செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது.

### 2.7.6 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கியல் நியமம் (SLFRS) 7 - காசுப் பாய்ச்சல் கூற்றுகளுடன் இணங்கும் வகையில் “மறைமுக முறையினை” பாவித்து காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது. கிடைக்கப்பெறும் வட்டிகள் முதலீட்டு காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது, காசு மற்றும் காசுக்கு சமனானவை குறுகிய கால, உயர் திரவ முதலீட்டுகளை உள்ளடக்கியுள்ளது, இவை உடனடியாக காசாக மாற்றப்படக் கூடியவை என அறியப்படுவதுடன் மதிப்பில் ஏற்படும் மாற்றத்திற்கு உட்படுபவையாகும். காசு மற்றும் காசுக்குச் சமனானவை கையிலுள்ள காசு மற்றும் வங்கியில் உள்ள மீதியை உள்ளடக்கியுள்ளது. காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்காக, வங்கியின் தேறிய மிகைப்பற்று காசு மற்றும் காசுக்கு சமனானவையாக வெளிப்படுத்தப்படுகின்றது,

### 2.7.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத புதிய நியமங்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விறியோகிக்கப்பட்ட கீழ்வரும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் இன்னமும் செயல்வலுவுக்கு வராததுடன், சபையின் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நியமங்கள் சபையினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் மற்றும் இது எதிர்கால நிதியியல் கூற்றுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

- இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் (SLFRS) 15 - வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் இருந்து வரும் வருமானம் SLFRS 15 வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் இருந்து எழும் வருமானத்திற்கான கணக்குக்கு ஐந்து படி மாதிரி நிறுவப்பட்டுள்ளது. (SLFRS) 15இன் கீழ் இ ஒரு வாடிக்கையாளருக்கு பண்டங்கள் அல்லது சேவைகளைப் பரிமாற்றம் செய்வதற்கான பரிமாற்றத்தில் உரிமைகொள்வதற்கு நிறுவனம் எதிர்பார்க்கும் பரிசீலினையைப் பிரதிபலிக்கும் தொகை வருமானம் அடையாளம் காணப்படுகின்றது. இது LKAS 18 - வருமானம், LKAS. 11 - ஒப்பந்த நிர்மாணிப்புகள் மற்றும் IFRIC 13 வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள வருமான அடையாளம் காணல் வழிகாட்டலை பதிலீடு செய்கின்றது.

- 01 ஜனவரி 2018இற்கு முழுமையான பின்னோக்குப் பிரயோகம் அல்லது மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கு விண்ணப்பம் அவசியமாகும். ஒப்பந்தங்கள் SLFRS 4 இன் பரப்பெல்லைக்குள் உள்ளது - காப்புறுதி ஒப்பந்தங்கள் பரப்பெல்லைக்கு வெளியில், SLFRS 15 இன் (பந்தி 5 (ஆ)) பரப்பெல்லைக்கு அமைவாக. சபையானது ஏனைய வருமான ஒப்பந்தங்களின் தாக்கத்தினைத் தற்போது மதிப்பீடு செய்கின்றது.

- SLFRS 9 - நிதி ஆவணங்கள் SLFRS 9. SLFRS 9 ஆனது LKAS 39 இன் பதிலீடாகும் கட்டத்தினைப் பிரதிபலிப்பதுடன் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது. இந் நியமமானது 2018 ஜனவரி 01ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்தக் காலப்பகுதிக்கு பயனுறுதிபெறும். சபை SLFRS 9 இனை அமுல்படுத்துவதற்கு குழுவொன்றை சபையினுள் நிறுவியுள்ளது.

  SLFRS 9 மீது சபை இல் கண்டறியும் கட்டம் (பூர்வாங்க தாக்க மதிப்பீட்டுப் பயிற்சி) மற்றும் செயற்படுத்தல் கட்டம் (தீர்வு மேம்பாடு) ஆகியவற்றைச் செயற்படுத்தியது. சபையினால் எவ்வாறு SLFRS 9 ஐ அமுல்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடத்தக்க பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டு நோக்கத்துடன் வகைப்படுத்தல் அளவீடு, புதிய தரநிலைக்குச் சொத்து மற்றும் கருவியின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளை நிர்வகிப்பதற்கான நிறுவனத்தின் வணிக மாதிரியின் கலவையின் அடிப்படையில் சமபங்குக் கருவிகள் மற்றும் வழித்தோன்றல்கள் தவிர அனைத்து நிதிச் சொத்துக்களும் தேவைப்படும்.

வியாபார மாதிரி மதிப்பீடு, அதனுடைய நோக்கங்களை அடைவதற்கு எவ்வாறு நிதியியல் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு அதனைப் பிரதிபலிக்கும் மட்ட வியாபார மாதிரியினை சபை தீர்மானித்தது. சபையின் வியாபார மாதிரி கருவியின் அடிப்படையிலான கருவியின் மீது மதிப்பீடு செய்யப்படவில்லை, ஆனால் உயர் மட்டத்திலான ஒருங்கிணைந்த வெட்டுமுகங்களுடன் இது கீழ்வருவன போன்ற அவதானிக்கக்கூடிய காரணிகளின் அடிப்படையில் அமைந்திருந்தது:

- வியாபார மாதிரியின் செயலாற்றுகைகள் எவ்வாறு மற்றும் வியாபார மாதிரியினுள் நிதியியல் சொத்துகள் வைக்கப்பட்டுள்ளது தொடர்பாக மாதிரி மதிப்பீடு செய்யப்பட்டதுடன் நிறுவனத்தின் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கு அறிக்கையிடப்பட்டது.
- வியாபார மாதிரியின் (மற்றும் அந்த வியாபார மாதிரியில் வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றுகையைப் பாதிக்கக்கூடிய அந்த இடர்கள் மற்றும் குறிப்பாக, அந்த இடர்களை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்பட்டது
- எதிர்பார்க்கப்படும் மீடிறன், பெறுமதி மற்றும் விற்பனையின் நேரம் என்பனவும் சபையின் மதிப்பீட்டில் முக்கிய அம்சங்களாகும்.

கணக்கில் "மோசமான நிகழ்வு" அல்லது "அழுத்தமான நிகழ்வு" சந்தர்ப்பங்களை எடுக்காது நியாயமான சந்தர்ப்பங்களின் மீது வியாபார மாதிரியின் மதிப்பீடு தங்கியிருந்தது. ஆரம்ப அடையாளம் காணல்கள் தேறிப் பெற்றதன் பின்னரான காசுப் பாய்ச்சல் சபையின் மூல எதிர்பார்ப்புடன் வேறுபடும் வகை, வியாபார மாதிரியில் வைத்திருக்கும் தகுதி நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல்களை சபை மாற்றவில்லை, ஆனால் புதிதாக மூலமாக்கப்பட்ட அல்லது புதிதாக கொள்வனவு செய்த சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது அந்தத் தகவல்களை கூட்டிணைத்தது.

வகைப்படுத்தல் நடைமுறையின் இரண்டாவது பரிசோதனையாக கட்டமைக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் பண்புகள் பரிசோதிக்கப்பட்டது, சபை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு அளவீட்டை தனியாகச் சந்தித்ததா என அடையாளம் காண்பதற்கு நிதியியல் சொத்தக்களின் கட்டமைக்கப்பட்ட நியதிகளை மதிப்பீடு செய்தது.

இந்த பரிசோதனைக்கான நோக்கத்திற்கான கொள்கையானது நிதிச் சொத்தக்களின் நியாயப் பெறுமதியை ஆரம்ப அடையாளம் என வரையறுக்கப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்தின் ஆயுட்காலம் மாற்றமடையும் என்பதனால் (உதாரணமாக, முதலைக் கொடுப்பனவு செய்தால் அல்லது தவணைக் கட்டண/ கழிப்பனவின் கடன்கரைத்தல்) கடன் வழங்கும் ஒழுங்குபடுத்தலில் உள்ள மிக முக்கியமான வட்டிக் கூறுகள் பொதுவாக பணத்தின் நேர் மதிப்பு மற்றும் கடன் இடரைக் கருத்தில்கொள்வதாகும். SPPI மதிப்பீட்டை மேற்கொள்ள, வட்டி வீதம் நியமிக்கப்பட்ட காலத்திற்கு மற்றும் மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் போன்ற நாணயங்களின் உரிய காரணிகளைக் கவனத்தில் கொண்டு தீர்மானங்களை சபை பிரயோகித்தது.

ஒப்பந்த வெளிப்பாடுகளுக்கு மாறாக, அடிப்படை கடன் ஏற்பாட்டுடன் தொடர்பில்லாத ஒப்பந்தப் பணத்தில் இடர் அல்லது ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தும் அரக்கத்த வெளிப்படுத்தலை விட அதிகமானவற்றை அறிமுகப்படுத்துகின்றது, நிலுவையில் உள்ள தொகையின் மீதான கொள்கை மற்றும் வட்டி செலுத்துதலுக்கான ஒப்பந்தக் காசுக்கு வழிவகுக்காதீர்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்து FVPLஇல் அளவிடப்படுதல் வேண்டும்.

## 3 தொழிற்பாட்டுப் பிரிவுகள்

தொழிற்பாட்டுப் பிரிவானது நிறுவனத்தின் ஒரு அங்கமாகும்.

(அ) இது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது, அதில் இருந்து வருமானங்களை உழைக்கலாம் மற்றும் செலவுகள் ஏற்படலாம் (அதே நிறுவனத்தின் ஏனைய அங்கங்களுடனான கொடுக்கல் வாங்கல் தொடர்பான வருமானங்கள் மற்றும் செலவுகள் உள்ளடங்கலாக)

(ஆ) அந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட வளங்கள் தொடர்பாகத் தீர்மானங்களை எடுப்பதற்கும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காகவும் அவர்களின் தொழிற்பாட்டு பெறுபேறுகள் ஒழுங்குமுறையில் நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டுத் தீர்மானம் எடுப்பவரினால் மீளாய்வு செய்யப்படுகின்றது மற்றும்

(இ) எந்த தனித்துவமான நிதியியல் தகவல்களை கிடைக்கப் பெறுவதற்கு

முகாமைத்துவ நோக்கத்திற்காக, சபை பண்டங்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் பிரதான வியாபாரத்தை நான்கு வியாபார பகுதிகளாக பிரதான வியாபாரத்தை ஒழுங்கு செய்துள்ளதுடன் நான்கு அறிக்கையிடக்கூடிய பிரிவுகளும் உள்ளன.

கீழே அறிக்கையிடப்பட்ட பிரிவுகளின் தகவல்கள் வளங்களின் ஒதுக்கீடு மற்றும் செயலாற்றுகையின் மதிப்பீட்டிற்காக பிரதான தொழிற்பாட்டு தீர்மானம் எடுப்பவரினால் பயன்படுத்தப்படுகின்றது.

- பொது - மோட்டார் காப்புறுதி
- பொது - மோட்டார் அல்லாத காப்புறுதி
- அக்ரஹார
- என்என்டிஎஸ்
- மீள்காப்புறுதி
- எஸ்ஆர்சிசி அன்ட் டீ
- பயிர்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2019 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் | மோட்டார் அல்லாதவை | தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம் | மீள்காப்புறுதி | வே.க.சி.ப | சுகாதார திட்டம் அக்ரஹார /பா.உ | பயிர் காப்புறுதித் திட்டம் | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| **தவணைக் கட்டணம்** | | | | | | | | |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் | 390,150,125 | 301,979,246 | 1,500,000,000 | 4,173,714,909 | 6,307,350,365 | 20,000,000 | - | 12,693,194,645 |
| அக்ரஹாரவில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | - | - | - | - | - | 4,838,723,551 | - | 4,838,723,551 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதித் தீர்வை | - | - | - | - | - | - | 1,780,383,987 | 1,780,383,987 |
| ஒப்பளிக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் | - | (1,815,766) | (401,153,425) | (449,426,588) | (81,656,250) | - | (257,823,633) | (1,191,875,662) |
| SRCC & Tr நிதியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டது | (10,328,946) | (15,763,537) | - | - | 26,092,483 | - | - | - |
| **தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்** | **379,821,180** | **284,399,943** | **1,098,846,575** | **3,724,288,321** | **6,251,786,597** | **4,858,723,551** | **1,522,560,354** | **18,120,426,521** |
| UPRஇல் மொத்த மாற்றம் | 3,664,281 | (30,644,454) | (246,575,343) | (41,061,916) | (683,047,284) | - | (997,664,716) | - |
| UPR இல் மீள்காப்புறுதி பங்கு மாற்றம் | - | - | (555,846,575) | (94,558,680) | - | - | (24,329,784) | (674,735,040) |
| உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கத்தின் தேறிய மாற்றம் | 3,664,281 | (30,644,454) | (802,421,918) | (135,620,596) | (683,047,284) | - | (24,329,784) | (1,672,399,756) |
| **உழைக்கப்பட்ட தேறிய தவணைக்கட்டணங்கள் (அ)** | **383,485,460** | **253,755,489** | **296,424,657** | **3,588,667,725** | **5,568,739,313** | **4,858,723,552** | **1,498,230,570** | **16,448,026,766** |
| கட்டண வருமானம் (ஆ) | 3,768,548 | 669,813 | - | - | - | - | - | 4,438,361 |
| **மொத்த பொறுப்பேற்றல் வருமானம் (அ + ஆ)** | 387,254,008 | 254,425,302 | 296,424,657 | 3,588,667,725 | 5,568,739,313 | 4,858,723,552 | 1,498,230,570 | 16,452,465,127 |
| கைக்கொள்ளல் கிரயம் | (57,467) | (7,108,852) | - | (787,370,107) | (1,018,025,777) | - | - | (1,812,562,203) |
| பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்தில் மாற்றம் | - | 1,452,674 | - | (4,473,312) | (240,109,009) | - | - | (243,129,646) |
| **தேறிய கைக்கொள்ளல் கிரயம் (இ)** | (57,467) | (5,656,178) | - | (791,843,419) | (1,258,134,786) | - | - | (2,055,691,850) |
| மொத்த உறற்றப்பட்ட கோரிக்கைகள் | (295,142,859) | (278,709,294) | (917,568,977) | (3,921,508,172) | (707,713,434) | (5,351,351,714) | (984,857,998) | (12,456,852,448) |
| மீள்காப்புறுதி அறவீடுகள் | - | - | - | 498,500,000 | - | - | - | 498,500,000 |
| IBNR இல் மாற்றம் | (15,537,220) | 36,466,717 | 25,018,135 | (93,472,428) | 14,787,908 | (48,132,416) | 3,138,094 | (77,731,211) |
| **கொடுப்பனவு செய்யப்பட்ட தேறிய கோரிக்கைகள்** | (310,680,079) | (242,242,577) | (892,550,842) | (3,516,480,600) | (692,925,527) | (5,399,484,130) | (981,719,904) | (12,036,083,659) |
| நிலுவைக் கோரிக்கைகளில் மீள்காப்புறுதி பங்கின் மாற்றம் | | | | (43,234,155) | | | | (43,234,155) |
| **உறற்றப்பட்ட தேறிய கோரிக்கைகள் (ஈ)** | (310,680,079) | (242,242,577) | (892,550,842) | (3,559,714,755) | (692,925,527) | (5,399,484,130) | (981,719,904) | (12,079,317,814) |
| **பொறுப்பேற்றல் பெறுபேறு (அ+ஆ+இ+ஈ)** | 76,516,462 | 6,526,547 | (596,126,185) | (762,890,449) | 3,617,679,001 | (540,760,579) | 516,510,666 | 2,317,455,464 |
| நிர்வாகச் செலவு (உ)) | (75,583,525) | (20,995,424) | (41,990,847) | (41,990,847) | (153,839,250) | (230,949,660) | (8,398,169) | (573,747,723) |
| **மொத்தச் செலவுகள் (இ+ஈ+உ)** | (386,321,071) | (268,894,178) | (934,541,690) | (4,393,549,021) | (2,104,899,562) | (5,630,433,791) | (990,118,073) | (14,708,757,386) |
| | 932,937 | (14,468,876) | (638,117,032) | (804,881,296) | 3,463,839,751 | (771,710,239) | 508,112,497 | 1,743,707,741 |
| வருடத்திற்கான முதலீடுகள் மற்றும் ஏனைய வருமானம் | 18,534,139 | 579,183 | 80 | 142,479,029 | 1,071,567,944 | 3,406,417 | 28,211,533 | 1,264,778,325 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **19,467,076** | **(13,889,693)** | **(638,116,952)** | **(662,402,267)** | **4,535,407,695** | **(768,303,822)** | **536,324,029** | **3,008,486,066** |
| வருமான வரிச் செலவு | - | 8,681,727 | - | - | 96,918,935 | - | - | 105,600,661 |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **19,467,076** | **(5,207,966)** | **(638,116,952)** | **(662,402,267)** | **4,632,326,630** | **(768,303,822)** | **536,324,029** | **3,114,086,727** |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

4 **வருமானம்**

5 **மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**

கணக்கீட்டுக் கொள்கை - காப்புறுதியின் பண்ட வகை மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள், காப்புறுதி இடர் பரிமாற்ற மட்டக் காப்புறுதியாளரினால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், காப்புறுதி இடர் பரிமாற்ற அளவைப் பொறுத்து "காப்புறுதி ஒப்பந்தங்கள்" அல்லது "முதலீட்டு ஒப்பந்தங்கள்" என வகைப்படுத்தப்பட வேண்டும்.

காப்புறுதி ஒப்பந்தங்கள் என்பது சபையினால் (காப்புறுதியாளர்) ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு (காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு) காப்புறுதிப் பூட்கையாளர்களை மோசமாகப் பாதித்தால், காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஒப்புக்கொள்வதன் மூலம் மற்றொரு தரப்பினரிடமிருந்து (காப்புறுதிப் பூட்கையாளர்கள்) குறிப்பிடத்தக்க காப்புறுதி இடரை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்கள் ஆகும்.

ஒரு பொது வழிகாட்டியாகக், காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு நடக்கவில்லை என்றால், செலுத்த வேண்டிய நன்மைகளுடன் ஒப்பிடுவதன் மூலம், அது குறிப்பிடத்தக்க காப்புறுதி இடரைக் கொண்டிருக்கின்றதா எனச் சபை தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்களால் நிதி இடரை மாற்றவும் முடியும்.

முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பது குறிப்பிடத்தக்க நிதி இடரை இடமாற்றும் மற்றும் குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர் இடமாற்றம் அல்லாத ஒப்பந்தங்கள் ஆகும். நிதி இடர் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எதிர்கால மாற்றத்திற்கான இடர் ஆகும், நிதியியல் கருவி விலை, நுகர்வுப் பண்டத்தின் விலை, வெளிநாட்டு நாணய வீதம், விலைச் சுட்டெண் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கடன் சுட்டெண் அல்லது ஏனைய மாறிலிகள் ஆகியவற்றில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடமாற்ற இடர் ஆகும். ஒரு நிதியல்லாத மாறிகள், அந்த ஒப்பந்தத்திற்கு அந்தத்தரப்பினருக்கு குறித்துரைக்கப்படவில்லை.

ஒரு காப்புறுதி ஒப்பந்தம் ஒரு காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டவுடன், இந்தக் காலகட்டத்தில் அனைத்து உரிமைகளும் கடமைகளும் முடிவடையாமல் அல்லது காலாவதியாகும் வரை, காப்புறுதி இடர் குறிப்பிட்டளவு குறைக்கப்பட்டாலும், அதன் வாழ்நாள் முழுவதுமான ஒப்பந்தமாக இருக்கும். இருப்பினும், காப்புறுதி இடர் குறிப்பிடத்தக்கதாக இருந்தால், முதலீட்டு ஒப்பந்தங்களை ஆரம்பித்ததன் பின்னர் காப்புறுதி ஒப்பந்தங்களாக மீள வகைப்படுத்தப்படலாம்.

சபையினால் விற்கப்படும் அனைத்துத் தயாரிப்புகளும் காப்பீட்டு ஒப்பந்தங்கள், எனவே SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் காப்பீட்டு ஒப்பந்தங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு, சபை அதன் தயாரிப்பு வெட்டுமுகத்தினுள் எந்த முதலீட்டு ஒப்பந்தங்களையும் அறிக்கையிடல் திகதியில் கொண்டிருக்கவில்லை.

கணக்கியல் கொள்கை - மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை அங்கீகரிப்பது அபாயங்களைக் குறைப்பதற்காக சபை வசூலிக்கும் தவணைக் கட்டணத்தைக் குறிக்கின்றது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது.

ஆயுள் அல்லாத காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அந்தக் கணக்கீட்டு காலப்பகுதியினுள் ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தத்தினுள் வரும்போது மொத்தத் தவணைக் கட்டணம் கிடைக்கப்பெற்ற/கிடைக்க வேண்டியவற்றை உள்ளடக்கியுள்ளது. தவணைக் கட்டண விகிதத்தின் ஒரு பகுதியை உருவாக்கும் தள்ளுபடிகள், அதாவது கோரிக்கை தள்ளுபடிகள் இல்லை, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் இருந்து கழிக்கப்படுகின்றன, வணிகத்தின் முக்கிய வகுப்புகளின் ஆண்டிற்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் பின்வருமாறு.

| | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| **மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்கள்** | | |
| வருடத்திற்கான தவணைக் கட்டண வருமானம் பிரதான வியாபார வகைகளாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | | |
| உள்முக மீள்காப்புறுதி | **4,173,714,909** | 4,056,395,150 |
| SRCC & Tr தவணைக் கட்டணம் | **6,307,350,365** | 4,581,640,544 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | **390,150,125** | 422,117,039 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | **301,979,246** | 103,722,015 |
| தேசிய இயற்கை அனர்த்தத் திட்டம (NNDIS) | **1,500,000,000** | 500,000,000 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான மருத்துவத் திட்டம் | **20,000,000** | 20,000,000 |
| | **12,693,194,645** | 9,683,874,748 |
| **அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு சேகரிக்கப்பட்டது** | | |
| அங்கத்தவர்களிடமிருந்தான பங்களிப்பு | **3,617,114,527** | 2,959,518,379 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | **767,970,000** | 750,000,000 |
| ஓய்வூதியதாரர்களின் காப்புறுதித் திட்டம் | **142,321,400** | 101,282,200 |
| அரச சார் துறையினருக்கான திட்டம் | **311,317,625** | 206,620,325 |
| | **4,838,723,551** | 4,017,420,904 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 6 உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம்

கணக்கீட்டுக் கொள்கை - உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கு மாற்றம் என்பது உழைக்கப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு வருடத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பகுதியைக் குறிக்கின்றது, ஆனால் காலாவதியான காலாவதி காலத்துடன் தொடர்புடையது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி கைத்தொழில் நடைமுறைகளுக்கு ஏற்ப மோட்டார் காப்புறுதி மற்றும் மோட்டார் அல்லாத காப்புறுதி மற்றும் அக்ரஹார உடல்நலத் திட்டம், எஸ்ஆர்சீசீக்கு 1/24ஆவது அடிப்படை மற்றும் 35% மீள்காப்புறுதிக்கான மொத்தத் தவணைக் கட்டண அடிப்படையில் 365ஆவது அடிப்படையில் கணக்கிடப்படாத தவணைக் கட்டணங்கள் கணக்கிடப்படுகின்றன. காப்புறுதியல்லாத காப்பீட்டு பிரிமியத்திற்கான ஒதுக்கு மாற்றமானது, காப்புறுதிப்பூட்கைகளின் காலாவதியான காலத்தை ஈடுசெய்யும் ஆண்டின் போது பெறப்படாத தவணைக் கட்டண ஒதுக்குக்கு மாற்றப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் நிகரப் பகுதியைக் குறிக்கின்றது.

## 7 மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம்

கணக்கியல் கொள்கை - மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம் எழுதப்பட்ட ஆயுள் அல்லாத மொத்த மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் ஒப்பந்தத்திற்கு வந்த காலத்தின் முழுக்காலத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்தத் தவணைக்கட்டணத்தை உள்ளடக்கியுள்ளதை அடையாளம் காணுதல் மற்றும் பூட்கை ஆரம்பிக்கப்பட்ட திகதி மீது அடையாளம் காணுதல் கணக்கீட்டுக் காலங்களுக்கு முன்னராக ஆரம்பிக்கப்பட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பாக எழும் ஏதேனும் சீராக்கங்களையும் தவணைக் கட்டணம் உள்ளடக்கியுள்ளது.

## 8 உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம்

கணக்கியல் கொள்கை - உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடர் காலத்துடன் தொடர்புடைய வருடத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் விகிதாசாரமாக உழைக்கப்படா மீள்காப்புறுதித் தவணைக்கட்டணம் இருக்கும். உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணம் நேரடிக் காப்புறுதிப் பூட்கைகளின் அடிப்படை நியதிகளின் மீது பிற்போடப்படும் பூட்கைகளின் எதிர்பாரத காலத்தினைக் காப்பீடு செய்வதற்கு அந்த வருடத்தின் உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான தவணைக் கட்டணத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட தேறிய மீள்காப்புறுதியின் தேறிய பங்கினை உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கீட்டு மாற்றம் பிரதிபலிக்கின்றது.

## 9 தேறிய கோரிக்கைகள்

கணக்கீட்டுக் கொள்கை - அறிக்கையிடப்பட்டதோ அல்லது அறிக்கையிடப்படவில்லையோ, வெளிவாரிக் கோரிக்கைகள் தொடர்பான செயன்முறைப்படுத்துவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஏதேனும் கையாளுகை ஆகுசெலவு மற்றும் கோரிக்கைகளின் தீர்ப்பனவு, காப்பின் பெறுமதிக்கான ஒரு குறைப்பு மற்றும் ஏனைய மீட்புகள் மற்றும் முன்னைய வருடங்களில் இருந்து வரும் கோரிக்கை நிலுவைகளுக்கு ஏதேனும் சீராக்கங்கள் என அந்த வருடத்தினுள் நிகழும் அனைத்துக் கோரிக்கைகளை உள்ளடக்கி ஆயுள் அல்லாத காப்புறுதிக்கான மொத்தக் கோரிக்கைகளை அடையாளம் காணுதல் தனிப்பட்ட கோரிக்கைக் கோப்பினை மீளாய்வு செய்வதன் ஊடாக மற்றும் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உண்மையில் செலவாகும் செலவு என்பவற்றை மதிப்பீடு செய்து கோரிக்கை நிலுவைகள் மதிப்பீடு செய்யப்படும்.

கோரிக்கைச் செலவு மற்றும் பொறுப்புகளுக்கான கோரிக்கை நிலுவைகள் நேரடிக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக அடையாளம் காணப்படுகின்றன. பொறுப்பு பூட்கைக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கான உறற்றப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்க்கும் நேரடி மற்றும் நேரடியல்லாத ஆகுசெலவுகள் அறிக்கையிடப்பட்டது, ஆனால் இந்தக் கோரிக்கைகள் இன்னும் கொடுப்பனவு செய்யப்படவில்லை. உற்றப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரிக்கைளுக்கான ஏற்பாடு, கடந்த கால அனுபவம் மற்றும் போக்கினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலப் பொறுப்பினை யதார்த்தமாக மதிப்பீடு செய்வதற்கு நடைமுறையில் காலாண்டு அடிப்படையில் பெறுமதி கணிப்பீடு செய்யப்படுகின்றது.

அதேவேளையில் பணிப்பாளர்கள் கோரிக்கைக்கான ஏற்பாடுகள் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் நியாயமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்கின்றனர், அடுத்தடுத்த தகவல்கள் மற்றும் நிகழ்வுகளின் விளைவாக உண்மையான பொறுப்பு மாறுபடும். இதன் பெறுபேறாக வழங்கப்பட்ட தொகைக்கு சீராக்கங்கள் காணப்படும். அந்தத் தொகைகள் அந்தக் காலத்திற்கான நிதிக்கூற்றுகளில் பிரதிபலிக்கின்றன. மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கை - மீள்காப்புறுதிக் கோரிக்கைகளை அடையாளம் காணுதல் - உரிய ஒப்பந்தங்களின் நியதிகளுக்கு அமைவாகத் தொடர்புடைய மொத்தக் காப்புறுதிக் கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்ட போது மீள்காப்புறுதிக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கருதப்பட்ட மீள்காப்புறுதி மீதான கோரிக்கைகள், மீள்காப்புறுதியானது நேரடி வியாபாரம் எனக் கருதப்பட்டால் வருமானம் அல்லது செலவாக மீள்காப்புறுதி பண்ட வகைப்படுத்தல் கணக்கில் சேர்க்கப்பட்டு அதேவகையில் அடையாளம் காணப்படுகின்றன.

## 10 பொறுப்பேற்றல் மற்றும் கைக்கொள்ளல் கிரயங்கள்

கணக்கீட்டுக் கொள்கை - பொற்றுப்பேற்றல் மற்றும் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயங்களை அடையாளம் காணல். கைக்கொள்ளல் செலவுகள், தரகுகளை வெளிப்படுத்தல் என்பன வியாபாரச் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புடையதுடன் மாறுபடுவன, எந்தக் காலத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணம் உழைக்கப்பட்டதோ அதனுடன் தொடர்புடைய காலத்திற்குப் பிற்போடப்படுவதுடன் கடன்கரைப்பு செய்யப்படுகின்றது.

மீள்காப்புறுதித் தரகும் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்திற்குள் அதேவகையில் நடத்தப்படுகின்றது.

## 11 ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்

கணக்கீட்டுக் கொள்கை - ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகளை அடையாளம் காணல். ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக்கூற்றில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தைப் பாராமரித்தல் தொடர்பாக உற்றப்பட்ட ஏனைய செலவுகள் அனைத்தும் அறவிடப்படுகின்றன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

**ஊழியர் செலவுகள்**

கணக்கீட்டுக் கொள்கை - குறுகிய கால ஊழியர் நன்மைகள். குறுகிய கால ஊழியர் நன்மைக் கடப்பாடுகள் கழிப்பனவல்லாத அடிப்படையில் அளவிடப்படுவதுடன், வழங்கப்பட்ட சேவையுடன் தொடர்புடையதாகச் செலவிடப்படுகின்றது. ஊழியரின் கடந்த கால சேவையின் விளைவாக இந்தத் தொகையை செலுத்துவதற்குச் சபையானது சட்ட ரீதியாக அல்லது ஆக்கபூர்வமான கடமையைக் கொண்டுள்ளதாக வெளிப்படுத்தினால் மற்றும் அந்தக் கடப்பாடானது மெய்யாக மதிப்பிடக்கூடியதாக இருந்தால், பொறுப்பாக குறுகிய கால காசு மிகைக்கொடுப்பனவு அல்லது இலாப பங்கீட்டுத் திட்டங்களின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை அடையாளம் காணப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கை - வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள். வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த ஏனைய பின்னைய ஊழியர் நன்மைத் திட்டமாகும். இலாப அல்லது நட்டக் கூற்றில் ஊழியர் செலவுகளின் கீழ் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளில் மாற்றங்கள் உள்ளது என சபையால் அடையாளம் காணப்பட்டவை.

மேலதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளுக்கான குறிப்பு 34ஐப் பார்க்கவும்.

**(அ) தற்போதைய சேவை ஆகுசெலவு**

**(ஆ) வட்டி ஆகுசெலவு**

கணக்கீட்டுக் கொள்கை - வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் என்பது ஒரு நிறுவனம் வேறொரு நிறுவனத்திற்குச் செய்யும் நிலையான பங்களிப்பாகும் மற்றும் இவை மேலும் தொகையைச் செலுத்துவதற்கான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு எதுவும் இல்லாதவையுமாகும். இலாப அல்லது நட்டக் கூற்றில், அவை நிலுவையாக உள்ள போது, ஊழியர் நன்மைச் செலவாக அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி அடையாளம் காணப்பட்ட ஊழியர் நன்மைச் செலவாக அடையாளம் காணப்பட்ட 1958ஆம் ஆண்டு 15ஆம் இலக்கத் திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 1980ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் கீழான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளும் பங்களிப்புகளுக்கான தேவைப்பாடுகள்.

## 12 கட்டண வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை - பூட்கை நிர்வாகச் செலவுகள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கட்டணங்களுக்காக அறவிடப்பட்டவைகள் பூட்கையாளர்களுக்கான கட்டணமாக அடையாளம் காணுதல். இந்தக் கட்டணங்கள் கிடைக்கப் பெற்றால் அல்லது நிலுவையாக இருந்தால் வருமானமாக அடையாளம் காணப்படும்..

## 13 தேறிய மெய்ப் பெறுமதி ஈட்டுகைகள்

மெய்ப் பெறுமதி ஈட்டுகைகள் மற்றும் இழப்புகளை அடையாளம் காணல். முதலீடுகளின் மீது இலாப மற்றும் நட்டக் கூற்றில் தேறிய மெய்ப் பெறுமதியாகப் பதிவுசெய்யப்பட்டவைகளினுள் நிதியியல் சொத்துக்களின் மீதான ஈட்டுகைகள் மற்றும் இழப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலீடுகளின் விற்பனையின் மீதான ஈட்டுகைகள் மற்றும் இழப்புகள் தேறிய சொத்து விற்பனை வருமானம் மற்றும் அசல் அல்லது கடன்கரைப்புக் கிரயத்திற்கு இடையிலான வேறுபாடு கணிப்பீடு செய்யப்படுவதுடன் விற்பனைக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழும் போது பதிவுசெய்யப்படுகின்றன.

## 14 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அழிவு மீட்பு, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான அகற்றல் ஈட்டுகைகள்/(நட்டங்கள்) மற்றும் நானாவித வருமானத்தை உள்ளடக்குகின்றன. அந்தக் காலப்பகுதியில் ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்படும் மற்றும் விற்பனை நிகழ்கின்றது என அடையாளம் காணப்படும் ஆதனம், பொறி மற்றும் உபரகணங்கள் மீதான இலாபம் அல்லது நட்டம்.

## 15 வரிக்கு முன்னரான இலாபம்

கீழ்வரும் செலவுகள் அறவிட்டதன் பின்னர் அந்த வருடத்திற்கான வரிக்கு முன்னரான இலாபம் குறிப்பிடப்படும்.

## 16 வருமான வரிச் செலவுகள்

வருமான வரிச் செலவாக அடையாளம் காணுதல். தற்போதைய வருமான வரி வருமான வரிச் செலவாக அடையாளம் காணப்படுகின்றது. தற்போதைய வருமான வரிகள் அடையாளம் காணப்படுகின்றன.

வருமான வரித் திருப்புதல்கள் /(செலவுகள்)

31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டுகான வருமான வரியின் பிரதான ஆக்கக்கூறுகள் பின்வருமாறு:

31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரி இலாப நட்டத்தில் அடையாளம் காணப்படுகின்றது.

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| தற்போதைய வருமான வரி | - | - |
| நடைமுறை வருட இலாபத்தின் மீதான வருமான வரி | - | 105,600,662 |
| முன்னைய வருடங்கள் தொடர்பான நடைமுறை வரிகளுக்கான மிகை/பற்றாக்குறை ஏற்பாடுகள் | **(105,600,662)** | - |
| மொத்த வருமான வரி (திருப்புதல்)/ செலவு | **(105,600,662)** | 105,600,662 |

## 17 அருவச் சொத்துகள்

சபையின் அருவச் சொத்துகள் கைக்கொள்ளப்பட்ட கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்கியுள்ளது.

அருவச் சொத்தினை அடையாளம் காண்பதற்கான அடிப்படையாகச் சொத்துக் காரணமான அதனுடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்குக் கிடைக்கக்கூடியதாகவும், சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடவும் வாய்ப்புள்ளது எனில், அது அருவச் சொத்தாக அங்கீகரிக்கப்படும்.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாகக் குறிப்பிடப்படுகின்றது.

தொடர்ச்சியான கிரயம், ஆரம்ப அடையாளம் காணலைத் தொடர்ந்து அருவச் சொத்தின் பெறுமதி திரட்டிய கடன்கரைத்தல் மற்றும் திரண்ட குறைவு நட்டங்களைக் கழித்த கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றது.

சபையின் அருவச் சொத்துகள் கைக்கொள்ளப்பட்ட கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்கியுள்ளது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

அங்கீகரிக்கப்படுவதற்கான அடிப்படையானது, சொத்துக்குக் காரணமான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் சபைக்குக் கிடைப்பதுடன், சொத்தின் விலையை நம்பகத்தன்மையுடன் அளவிடவும் வாய்ப்புள்ளது எனில் ஒரு அருவமான சொத்து அங்கீகரிக்கப்படும்.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு

நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாக குறிப்பிடப்படுகின்றது.

அடுத்தடுத்த செலவினங்கள் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு, அருவமான சொத்து குறைந்த செலவில் கரைக்கப்பட்ட கடன் மற்றும் திரட்டப்பட்ட குறைப்புக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

மென்பொருள் சொத்துக்களுக்கான அடுத்தடுத்த செலவுகள் அது தொடர்புடைய குறிப்பிட்ட சொத்தில் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரிக்கும் போது மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவுகளும் உறற்றப்பட்டதாக செலவழிக்கப்படுகின்றன.

கடன்கரைப்பு அருவச் சொத்துக்கள் நான்கு வருடங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையில் கடன்கரைப்புச் செய்யப்படுகின்றது. இலாப அல்லது நட்டக் கூற்றில் கடன்கரைப்பு பதிவுசெய்யப்படுகின்றது.

பயனுள்ள பொருளாதார ஆயுளின் மீது வரையறுக்கப்பட்ட ஆயுளுடன் அருவச் சொத்துக்கள் கடன்கரைப்பு செய்யப்படுகின்றன. ஒரு பயனுள்ள வரையறுக்கப்பட்ட ஆயுள் கொண்ட ஒரு அருவச் சொத்துக்கான கடன்கரைப்புக் காலம் மற்றும் கடன்கரைப்பு முறை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு எதிர்பார்க்கப்படும் முறை, தகுந்தபடி, கடன்கரைப்புக் காலம் அல்லது கடன்கரைப்பு முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுகின்றன, மேலும் அவை கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அருவச் சொத்துகளின் செயற்பாட்டுடன் ஒத்துப்போகும் செலவு வகையில் இலாப அல்லது நட்டக் கூற்றில் வரையக்கப்பட்ட ஆயுளைக் கொண்ட அருவச் சொத்துகள் மீதான கடன்கரைப்புச் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

பின்வருவனவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளில் அவற்றின் மீதமுள்ள மதிப்புகளுக்கு அசையாச் சொத்துக்களின் விலையை எழுதுவதற்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி கடன் கரைப்பு கணக்கிடப்படுகின்றது.

அருவச் சொத்துக்களை ஐந்தொகையில் இருந்து அகற்றுதல். ஒரு அருவச் சொத்து அகற்றப்படும் போது அல்லது எதிர்கால நன்மைகளை எதிர்பார்க்காத போது, அது ஐந்தொகையில் இருந்து அகற்றப்படுகின்றது. அந்த அருவச் சொத்தை ஐந்தொகையில் இருந்து அகற்றுவதன் ஊடாக எழும் ஈட்டுகை அல்லது இலாபம், அது ஐந்தொகையில் இருந்து அகற்றப்படும் போது இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கை - அருவச் சொத்தின் குறைப்பு. குறைப்புக்கான அறிகுறி இருக்கும் போதெல்லாம் குறைப்பு மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. எப்போது கொண்டு செல்லும் பெறுமதியை விட மீட்சி பெறக்கூடிய தொகை குறைவாக இருக்கும் போது, இலாப அல்லது நட்டக் கூற்றில் குறைப்பு நட்டம் அடையாளம் காணப்படுகின்றது. மேலும், ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்குமான கடுமையான ஒப்பந்த ஏற்பாடுகளை நிறுவும் போது சேவைக்கான உரிமைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**17.1** முழுமையாக கடன்கரைப்பு செய்யப்பட்ட பயன்பாட்டிலுள்ள சொத்துகளின் பெறுமதி ரூ.பா 6,542,073. அறிக்கையிடல் திகதியில் முழுமையாக கடன்கரைப்பு பயன்பாட்டில் உள்ள அல்லது பயனற்ற அருவச் சொத்துகள். (2018 - 6,542,073).

**17.2** அருவச் சொத்துக்களின் உரிமைக் கட்டுப்பாடு. அருவச் சொத்துக்களின் உரிமையில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை மற்றும் பொறுப்புகளுக்கான பத்திரங்கள் என உறுதியளிக்கப்படவில்லை.

**17.3** 2019ஆம் ஆண்டு கைக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்களின் கைக்கொள்ளல் பெறுமதி ரூ. 6,433,851 (2018 - 1,702,201).

**17.4** அருவச் சொத்துக்களின் குறைப்பு மதிப்பீடு. பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2018 அன்று அருவச் சொத்துக்களின் காட்டிகளின் உத்தேசக் குறைப்பினை மதிப்பீடு செய்தது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், எந்தவொரு குறைப்புக் காட்டிகளும் அடையாளம் காணப்படவில்லை மற்றும் அதனால் அறிக்கையிடும் திகதியில் உரிய அருவச் சொத்துகளுடன் நிதியியல் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு குறைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

## 18 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கட்புலனாகும் சொத்துகளாகும், இவை சேவைக்காக அல்லது நிர்வாக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுவதுடன், இவற்றினை ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றம் உபரகணங்கள் அலுவலக உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்திகள், நானாவித சொத்துக்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அங்கீகரித்தலின் அடிப்படைச். சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு சாத்தியமாயின் மற்றும் அந்தச் சொத்தின் கிரயத்தை மதிப்பிட முடியுமாயின் அது அங்கீகரிக்கப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அங்கீகரிப்பதற்கு ஆரம்பத்தில் அந்தச் சொத்து அதன் கிரயத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இந்தக் கிரயம் அந்தச் சொத்தைக் கொள்வனவு செய்வதற்கு நேரடியாக பங்களிப்பு செய்த மற்றும் அதன் ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு மாற்றுவதற்கான செலவு பின்னர் சுய நிரிமாணித்த சொத்தக்களின் விலை பொருட்கள், நேரடி உழைப்பு ஆகியவை அடங்கும் மற்றும் பொருட்களை அகற்றுதல் மற்றும் அவை அமைந்துள்ள தளத்தில் மீட்டமைத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள், அந்த உபகரணத்துடன் செயற்பாட்டுடன் தொடர்புடைய பகுதியாகக் கருதப்பட்டு மூலதனமாக்கப்பட்டுள்ளது.

பொறி மற்றும் உபகரணங்களுக்குக் கிரய மாதிரியை சபை பிரயோகிக்கின்றதுடன் பதிவுகள் கொள்வனவு அல்லது கட்டுமானம் மற்றும் அதனுடனிணைந்த ஏதேனும் நிகழ்வுச் செலவுகளின் கிரயத்திலிருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டிய குறைவு நட்டங்களைக் கழித்த தொகையைப் பதிவுசெய்கின்றது.

திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகள் உறற்றப்பட்ட நிதியியல் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அறவிடப்படுகின்றது. அந்தச் சபைக்கு மிஞ்சியிருக்கும் சொத்துக்களின் நியமங்களை மிக அண்மையில் மதிப்பீடு செய்யும் போது எதிர்காலப் பொருளாதார நன்மைகள் மிகையாகவிருந்து கிடைக்குமாயின் அந்த சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகையையும் அந்த சொத்தின் அடையாளம் காணப்பட்ட பகுதியை புதிப்பித்தல் பதிலீடு செய்யுமாயின் அதனையும் பாரிய புதிப்பித்தல் கிரயங்கள் உள்ளடக்கியுள்ளது. பாரிய புதுப்பித்தல்கள், அந்த சொத்துத் தொடர்பான எஞ்சியிருக்கும் பயனுள்ள ஆயுள் தேய்மானம் செய்யப்படும்.

| | |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 10 வருடத்திற்கு மேல் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணங்கள் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| பெயர்ப் பலகை | கட்டத்தின் குத்தகைக் காலத்திற்கு மேல் |

ஆதனம்,

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

**ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை நீக்குதல்**

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் கொண்டு செல்லும் தொகை அகற்றலின் போது அல்லது எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உட்பாயாது என எதிர்பார்க்கும் போது நீக்கப்படும். ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் நீக்கலில் இருந்து எழும் ஈட்டுகை அல்லது நட்டங்கள், அந்த உருப்படி நீக்கப்பட்டால் இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் கொண்டு செல்லும் தொகையாவன: பதிலீட்டுக் கிரயம் இனங்காணப்பட்டால், பதிலீட்டுப் பகுதியின் எஞ்சியிருக்கும் கொண்டு செல்லும் தொகை நீக்கப்படும். ஒவ்வொரு மூதலீட்டாக்கலின் போதும், பரீட்சித்தல் ஆகுசெலவின் முன்னைய கிரயத்தின் எஞ்சியிருக்கும் கொண்டு செல்லும் தொகை நீக்கப்படும்.

18.1 வழமையான வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் பயன்படுத்தப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களைக் கொண்டிருக்கும். அறிக்கையிடல் திகதியில் இன்னும் பயன்பாட்டில் இருக்கும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்பக் கிரயம் கீழ்வருமாறு:

18.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது உரிமைக் கட்டுப்பாடு. அறிக்கையிடல் திகதியில் சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உரிமையில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை மற்றும் பொறுப்புகளுக்கான பத்திரங்கள் என உறுதியளிக்கப்படவில்லை.

18.3 இந்த நிதியில் ஆண்டில் கைக்கொள்ளப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், சபையினால் கைக்கொள்ளப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூ.27,468,606 (2018 - ரூ. 4,836,560). ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 27,468,606 (2018 - ரூ. 4,836,560) காசுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

18.4 பொறுப்புக்குப் பிணையாக உறுதியளிக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள். எந்தவொரு ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் 31 டிசம்பர் 2019 அன்று பொறுப்புக்குப் பிணையாக உறுதியளிக்கப்படவில்லை. (2018 - எதுவுமில்லை)

18.5 தற்காலிகமாக செயலற்றுப்போன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள். 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று தற்காலிகமாகச் செயலற்றுப்போன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எதுவுமில்லை. (2018 - எதுவுமில்லை)

18.6 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்புக் குறைப்பு மதிப்பீடு. பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2018 அன்று ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் காட்டிகளின் உத்தேச மதிப்புக் குறைப்பினை மதிப்பீடு செய்தது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், எந்தவொரு மதிப்புக் குறைப்புக் காட்டிகளும் அடையாளம் காணப்படவில்லை மற்றும் அதனால் அறிக்கையிடும் திகதியில் உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் நிதியியல் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு மதிப்புக் குறைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

18.7 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கைக்கொள்ளலுக்கான ஒப்பந்த ஈடுபாட்டுத் தொகை. அறிக்கையிடும் திகதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கைக்கொள்ளலுக்கான ஒப்பந்த ஈடுபாட்டுத் தொகை ஏதுமில்லை.

18.8 **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிற்கால மதிப்பீடு**

தொழில்சார் முறையில் தகைமைபெற்ற மதிப்பீட்டாளர்களினால் திறந்த சந்தைப் பெறுமதியில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. சொத்துக்கள் காலத்திற்குக் காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2018 இல் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மீள்மதிப்பீட்டு மிகை சொத்தின் தேறிய கொண்டு செல்லும் தொகை மீது இனங்காணப்பட்டுள்ளதுடன் சொத்துகளின் மீள்பெறுமதித் தொகையை மீளக் குறிப்பிட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்குக்கு மாற்றப்பட்டது. மீள் மதிப்பீட்டு ஒதுக்கு நீங்கள் புள்ளியின் போது தக்கவைத்த உழைப்புகளுக்கு இடமாற்றம் செய்யப்படும்.

19 **நிதியியல் முதலீடுகள்**

கணக்கீட்டுக் கொள்கை - நிதியியல் முதலீடுகளை வகைப்படுத்தல். கடன்களும் வருமதிகளும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே சபையானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாப அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் சாட்டப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது விடயம் ஒன்றுக்காக நிதிச் சொத்தானது அதன் கொள்ளல் அல்லது வழங்கலுடன் நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

முதலீட்டுச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான நோக்கம் மற்றும் இயலுமை மீது தங்கியிருக்கின்றது, சபை வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துக்களைப் பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.:

- இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதீ (FVTPL);
- கடன்களும் வருமதிகளும (L & R);
- விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) நிதிச் சொத்துக்கள் மற்றும்
- பொருத்தமுடையதாக முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)

எனினும், சபையானது அறிக்கையிடல் திகதியில் முதிர்ச்சி முதலீடுகளாக வைத்துக்கொள்வதற்கு எந்தவொரு முதலீட்டையும் வகைப்படுத்தவில்லை மற்றும் முதலீடு நியாயப் பெறுமதியில் இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடாக முதலீடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. (2017 - எதுவுமில்லை)

கணக்கீட்டுக் கொள்கை - நிதிச் சொத்துக்களை நீக்கல். நிதிச் சொத்துக்களில் இருந்து வரும் காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்துக்களின் உரிமையின் கணிசமானளவு அனைத்து வெகுமதிகளும் இடர்களும் மாற்றப்பட்ட நிதிச் சொத்து இடமாற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் நிதிச் சொத்தின் மீதான காசுப் பாய்ச்சல்களுக்கு ஒப்பந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை மாற்றப்பட்டால் அவ்வாறன நிதிச் சொத்துக்களை சபை நீக்குகின்றது. மாற்றம் செய்யப்பட்ட நிதிச் சொத்தின் ஏதேனும் வட்டி, சபையினால் உருவாக்கப்பட்டால் அல்லது தக்கவைக்கப்பட்டால், அது வேறான சொத்து அல்லது பொறுப்பாக இனம்காணப்படும்.

கணக்கீட்டுக் கொள்கை - நிதிக் கருவிகளை ஈடாக்குதல். நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடாக்கப்பட்டு அத்துடன் இனங்காணப்பட்ட தொகையினை ஈடாக்குவதற்கு தற்போது வலுவிலுள்ள சட்ட உரிமை உள்ளதாயின் அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்ப்பதற்கான அல்லது சொத்துக்களை பணமாக்கி ஒரே நேரத்தில் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான உள்நோக்கம் ஒன்றும் காணப்பட்டால் மாத்திரமே நிதி நிலமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

சபையின் ஏற்கனவேயுள்ள நிதிச் சொத்துக்களின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடு என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **வகுதி** | **நிதிச் சொத்துக்கள்** |
|---|---|
| இலாப அல்லது நட்டத்தின் ஊடான முகப்பெறுமதி | இல்லை |
| விற்பனைக்காக கிடைக்கக் கூடியன | திறைசேரி முறிகள்<br>திறைசேரி உண்டியல்கள் |
| கடன்களும் வருமதிகளும் | REPO,<br>மீள்எழுதப்பட் REPO |
| முதிர்ச்சிக்காக நிறுத்திவைக்கப்பட்டது | வெளிநாட்டு நாணயம்<br>அபிவிருத்திப் பிணையங்கள்<br>திறைசேரிப் பிணைங்கள் |

கீழ்வரும் அட்டவணை நிதியியல் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதிகளுடன் நியாயப் பெறுமதிகளை உள்ளடக்கியுள்ளது.

இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடான மற்றும் விற்பனைக்குக் கிடைக்கப் பெறும் முதலீடுகளின் ஊடான நியாயப் பெறுமதிகள் என்பன நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடன்கள் மற்றும் முதலீட்டு வருமதிகள் என்பன கடன்கரைப்புக் கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குணாம்சங்கள் மீதான நிதியியல் முதலீடுகளின் பகுப்பாய்வு. கீழ்வரும் குறிப்புகள் ஒவ்வொரு வகுப்புக் கருவிகளினதும் குணாம்சங்கள் மீதான நிதியியல் முதலீடுகளின் அடிப்படையிலான வெளிப்படுத்தல்களை வழங்குகின்றது.

**19.1** இலாப அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி கணக்கீட்டுக் கொள்கை - இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடான நியாயப் பெறுமதியை அடையாளம் காணல். வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்டவற்றையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்பதற்கான உள்நோக்கத்துடன் எடுத்துக்காட்டாக வாங்கப்பட்ட முதலீடுகளானவை வியாபாரத்திற்காக வைக்கப்பட்டவையாகக் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயங்கள் இலாப அல்லது நட்டக் கூற்றுகளில் உறற்றப்பட்டவையாக இனங்காணப்படும். இந்த முதலீடுகள் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, அவை நியாயப் பெறுமதியில் மீள்மதிப்பிடப்படுகின்றன.

உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களானவை இலாப அல்லது நட்டக் கூற்றில் "உண்மைப் பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களில்" பதிவு செய்யப்படுகின்றன. சபையானது அதன் நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான உள்நோக்கம் இன்னமும் பொருத்தமானதாகவிருப்பின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் (வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட) மதிப்பிடுகின்றது.

**19.2** கடன்கள் மற்றும் வருமதிகள். கடன்கள் மற்றும் முதலீட்டு வருமதிகளை இனங்காணல் மற்றும் கிடைப்பனவுகள் செயலுக்காகச் சந்தையில் பட்டியலிடப்படாத, நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான நிதிச் சொத்துக்களைச் சேர்ந்தவையாகும். இம் முதலீடுகளானவை முதலீட்டுக் கொள்ளலுக்காகச் செலுத்தப்பட்ட கருத்திற்கொண்ட உண்மைப் பெறுமதியாக இருக்கும் கிரயத்தில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இக் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த சகல கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் முதலீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைதலுக்கான படியினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப் (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் வருமதிகளும் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பில் ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் ஏதேனும் இருப்பின் அதனைக் கவனத்திற் கொண்டு கடன்கரைப்புக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது.

இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ள செலவு மதிப்புக் குறைப்பினில் இருந்து எழுவதாக இனங்காணப்பட்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடன்கரைப்பானது இலாப அல்லது நட்டக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடன்கரைப்பு செய்முறைக்கூடாக இலாப அல்லது நட்டக் கூற்றில் ஈட்டுகைகளும் நட்டங்களும் இனங்காணப்படும். கடன்கள் மற்றும் வருமதிகள் முதலீட்டில் மீள்கொள்வனவு ஒப்பந்தங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

**19.2.1** மீள்கொள்வனவு உடன்படிக்கைகள். சபை இலக்கங்களுடனான அரசாங்க பிணையங்களுக்குச் சாட்டப்பட்டதற்கு எதிரான முழுமையான பாதுகாப்பைக் கொண்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி, என்எஸ்பி பன்ட் மனேஜ்மன்ட் (பிறைவட்) லிமிட்ட் நிறுவனங்களுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளைத் திருப்பியது. நிலுவை மீதிக்கான ரிப்போ வீதங்கள் 7% - 9.25% வீத வீச்சினுள் காணப்படும், இது வேறுபட்ட முதிர்ச்சி மீது தங்கியிருக்கும்.

## 19.3 விற்பனைக்கு கிடைக்கப் பெறும்

கணக்கீட்டுக் கொள்கை – விற்பனைக்கு கிடைக்கப்பெறும் முதலீட்டை இனங்காணல். விற்பனைக்கு கிடைக்கப்பெறும் முதலீடுகள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகளை உள்ளடக்கக்கூடும்.

ஆரம்ப அளவீட்டுக்குப் பின்னர், கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் அதைத் தொடர்ந்து நியாயப் பெறுமதியில் தேறப்படாத ஏனைய விரிவாக்கத்தில் விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்கின் கீழ் இனங்காணப்பட்ட ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள் அளவிடப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் வேளை ஈட்டிய வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானமாக அறிக்கையிடப்படும். கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது, விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் போதான கடனழிவு செய்யப்பட்ட தவணைக் கட்டணங்கள் அத்துடன்/அல்லது கழிவுகள் ‘முதலீட்டு இலாப அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும். சொத்தானது இனங்காணலில் இரததுச் செய்யப்படும் போது முதலீட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும். சொத்தினைக் குறைப்பதற்கு வரையறுக்கப்பட்டதால் ‘முதலீட்டு வருமானத்தில்’ இலாப அல்லது நட்டக் கூற்றில் திரண்ட நட்டமானது இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து நீக்கப்படும்.

சபையானது அதன் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பன இன்னமும் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை வரையறுப்பதற்காக மதிப்பீடு செய்யும். செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உத்தேசம் குறிப்பிடத்தக்களவு மாறுதல் போன்ற காரணங்களினால் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கு சபையினால் இயலாது போகும் பட்டசத்தில் அரிதான சந்தர்ப்பங்களில் இந் நிதிச் சொத்துகளை மீள வழங்கப்படுத்தலை சபையானது தேர்வு செய்யலாம்.

நிதிச் சொத்தானது கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தைப் பூர்த்தி செய்யும் போதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை இந் நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினை முகாமையானது கொண்டுள்ள போதும் கடன்கள்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

மற்றும் வருமதிகளது மீளவகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசத்தினை நிறுவனமானது கொண்டுள்ள போது மட்டுமே முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதற்கான மீள் வகைப்படுத்தல் அனுமதியளிக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கக்கூடிய வகுதியில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்தொன்றாக, உரிமை முதலில் இனங்காணப்பட்டுள்ள இச் சொத்தின் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட் காலத்திற்கு கடனழிவு செய்யப்படுகின்றது. அச் சொத்தானது பின்னர் குறைவாக இருக்குமென வரையறுக்கப்படின் அதன் பின்னர் உரிமை முதலில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படும்.

புதிய கடன்கரைப்பு கிரயத்திற்கும் முதிர்ச்சி தொகைக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் மீதமுள்ள ஆயுளும் கடன்கரைப்பு செய்யப்படும். சொத்தானது அடுத்து மதிப்புக் குறைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டால், அத்தொகை உரிமைப்பங்கில் இலாப அல்லது நட்டக் கூற்றுக்கு மீள்வகைப்படுத்தப்படும்.

**19.3.1** விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதியியல் முதலீடுகளின் மதிப்புக் குறைப்பு. அறிக்கையிடும் திகதியில் எந்தவொரு நிதியில் முதலீடுகளும் காலம் கடந்ததாக அல்லது மதிப்புக் குறைக்கப்பட்டதாக இல்லாததனால் விற்பனைக்கு கிடைக்கப்பெறவில்லை.

## 20 மீள்காப்புறுதி வருமதிகள்

கணக்கீட்டுக் கொள்கை – மீள்காப்புறுதி வருமதிகள். சபையானது அதன் சகல வியாபாரத்திற்குமான சாதாரண வியாபார நடவடிக்கையில் காப்புறுதி ஆபத்தினை ஒப்பளிப்புச் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி செய்பவர்களிடமிருந்து மீளப்பெறக்கூடிய தொகைகளானவை மீள்காப்புறுதி செய்பவரின் கொள்கைகளுடன் இணைந்த நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டுக்கு அல்லது தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இணக்கமாகவும் உள்ளன.

ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மீள்காப்புறுதி ஒழுங்குகளானவை சபையினை ஆவணதாரிகளுக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை.

மீள்காப்புறுதி வருமதிகள் இழப்பீட்டின் முகப்பெறுமதியில் கிடைத்தல் அல்லது கிடைக்க வேண்டியிருந்தால் இனங்காணப்பட்டன. மீள்காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

ஒப்பந்த உரிமைகளானவை காலாவதியாகி செல்லுபடியற்ற தாக்கப்படும் போது அல்லது ஒப்பந்தமானது இன்னொரு தரப்புக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

அறிக்கையிடும் வருடத்தின் போது குறைவுக் குறிகாட்டி ஒன்று எழும் போது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது கூடுதலாக அநேக தடவைகளில் மீள்காப்புறுதிச் சொத்துக்களானவை குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சபையானது ஒப்பந்த நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல இனங்காணலின் பின் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றினதும், சபையானது மீள்காப்புறுதி செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகள் மீது நம்பகரமாக அளவிடக்கூடிய தாக்கம் ஒன்றினைக் கொண்டுள்ள நிகழ்வினதும் விளைவாக அடிப்படையான சான்று இருக்கும் போது குறைவு நிகழ்கின்றது. இலாப அல்லது நட்டக் கூற்றில் மதிப்பு குறைப்பு நட்டம் பதிவுசெய்யப்படுகின்றது.

## 21 காப்புறுதி வருமதிகள்

காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிச் சபை வெளியிட்டுள்ள தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாத பணிப்புரையின் படி, அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளும் தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு உட்பட்டவை மற்றும் 60 நாட்களில் காலாவதி முடிந்தால் முடிக்கப்படாவிட்டலோ இரத்து செய்யப்படும்.

எனினும், அரச நிறுவனங்கள் மற்றும் மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சீசீ போன்ற கட்டாயக் காப்புறுதித்திட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தவணைக்கட்டணங்கள் 60 நாட்களைக் கடந்து கிடைக்கப்பெற்றால் இரத்து செய்யப்படமாட்டாது.

அரச நிறுவனங்கள் மற்றும் மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சீசீ போன்ற கட்டாயக் காப்புறுதித்திட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தவணைக்கட்டணங்கள் தவிர தவணைக் கட்டணவு கொடுப்பனவை சபை ஏற்றுக்கொண்டதால், நீண்ட கால நிலுவைத் தொகை தவணைக் கட்டணங்கள் பெறத்தக்கதாக இல்லை. எனினும், மேலதிக கீழே பொதுக் காப்புறுதி மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாதவைக்கான வழங்கப்பட்ட தொகைகள் தவிர்த்து மதிப்புக் குறைப்பு நட்ட ஏற்பாடுகளுக்கான தேவையில்லை.

50% வீதம் வழங்கப்படும் - > 60 நாட்கள் < 90 நாட்கள்
100% வீதம் வழங்கப்படும - > 90 நாட்கள்

**மீள் காப்புறுதி**

| வயது | 2019 | 2018 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 72,195,682 | 85,026,751 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 172,692,828 | 47,240,166 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 409,991,631 | 342,703,595 |
| 365 நாட்களுக்கு மேல் | 302,332,943 | 183,846,231 |
| | 957,213,084 | 658,816,744 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

**மோட்டார்**

| வயது | 2019 | 2018 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 9,700,788 | 17,447,602 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 9,064,058 | 7,683,775 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 16,321,752 | 4,772,167 |
| 365 நாட்களுக்கு மேல் | 1,121,030 | 444 |
| | 36,207,628 | 29,906,005 |

**மோட்டார் அல்லாத**

| வயது | 2019 | 2018 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 49,136,967 | 53,467,717 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 2,227,274 | 5,449,558 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 7,278,411 | 6,457,186 |
| 365 நாட்களுக்கு மேல் | 3,563,364 | 6,109,706 |
| | 62,206,015 | 71,484,167 |

## 22 பிற்போடப்பட்ட செலவுகள்

கைக்கொள்ளல் ஆகுசெலவுகள், புதிய வணிகங்களை வாங்குவதற்கான செலவுகள், தரகு, பொறுப்பேற்றல், சந்தைப்படுத்தல் மற்றும் பூட்கை காப்புறுதி செலவுகள், புதிய வணிகங்களின் உற்பத்தியுடன் மாறுபடும் மற்றும் நேரடியாக தொடர்புடையவை. இந்த செலவுகள் எதிர்கால தவணைக் கட்டணங்களில் இருந்து திரும்பிப் பெறுமளவுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு எதிர்பார்க்கப்படும் முறை ஆகியவை கடன்கரைப்புக் காலத்தை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றமாகக் கருதப்படுகின்றன.

அதனுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் காலாவதியானால் அல்லது இரத்துசெய்யப்பட்டால் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயம் அகற்றப்படும்.

பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்தின் மதிப்பு குறைப்பு ஒவ்வொரு திகதியிலும் அல்லது அடிக்கடி குறைப்பு அறிகுறி எழும்போது செய்யப்படுகின்றது. மீட்கக்கூடிய தொகை, சுமந்து செல்லும் மதிப்பை விடக் குறைவாக இருக்கும் போது, நட்ட அல்லது நட்ட அறிக்கையில் குறைப்பு நட்டம் இனங்காணப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்கும் போதுமான சோதகையில் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயம் கருதப்படுகின்றது.

மீள்காப்புறுதி தரகு. வெளிவாரி மீள்காப்புறுதி ஒப்பந்தங்களின் மீதான கிடைக்க வேண்டிய தரகுகள் பிற்போடப்படுவதுடன் கொடுப்பனவு செய்ய வேண்டிய தவணைக் கட்டணத் தொகை நேர்கோட்டு அடிப்படையில் கடன்கரைப்பு செய்யப்படுகின்றது.

## 23 ஏனைய சொத்துகள்

ஏனைய சொத்துக்களை அங்கீகரித்தல். நிதியல்லா சொத்துக்களை உள்ளடக்கிய ஏனைய சொத்துகள் ஏதேனும் மதிப்புக் குறைப்பு நட்டத்தில் இனங்காணப்பட்டது..

**ஊழியர் கடன்கள்**

இது சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்கிய இடர் கடன்கள் மற்றும் விழா முற்பணம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எந்தவொரு கடனோ அல்லது முற்பணமோ சபையின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

**மென் கடன்கள்**

இந்தக் கடன்கள் எஸ்ஆர்சிசி அன்ட் டி நிதியத்தில் இருந்து இலங்கை வங்கியினால் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான நிறுவனங்கள்/ஹொட்டல்களுக்கு வழங்கப்பட்டது

வரி மீட்புகள் - சபையின் வரி மீட்புகள் நிறுத்திவைத்தல் வரிக் கிடைப்பனவுகள் மற்றும் பொருளாதார சேவைக் கட்டண கிடைப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

பொருளாதார கிடைப்பனவுகள். 2006ஆம் ஆண்டு 13ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணதின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பொருளாதார சேவைக் கட்டணக் கொடுப்பனவு மீது குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் பொறுப்புடைய புரள்வு மீதான கொடுப்பனவு ஆகும் வருமான வரிப் பொறுப்புகளில் இருந்து பொருளாதார சேவைக் கட்டணத்தை கழிக்க முடியும். சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, எந்தவொரு கோரப்படாத கிடைக்கப்பெறவேண்டிய பொருளாதார சேவைக் கட்டணத்தை முன்கொண்டு செல்ல முடிவதுடன் அதனை செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக தீர்த்துக்கொள்ள முடியும்.

கையிருப்புகளை இனங்காணல் - கையிருப்புகள் குறைந்த ஆகுசெலவில் மற்றும் தேறிய மெய்ப் பெறுமதியில் குறிப்பிடப்படும் அனைத்து நுகரக்கூடிய உருப்படிகளையும் உள்ளடக்கியிருக்கும்.

## 24 காசு மற்றும் வங்கி மீதிகள்

காசு மற்றும் வங்கி மீதிகள் - நிதியியல் நிலைமைக் கூற்றில் உள்ள மாற்றப்படும்போது குறிப்பிடத்தக்க இடரலற்ற காசு மற்றும் வங்கி மீதிகள் வங்கி மற்றும் கையிலுள்ள மீதிகளை உள்ளடக்கியிருக்கும

**காசு மற்றும் காசுக்கு சமனானவை**

காசு முகாமைத்துவம் மற்றும் சேமிப்புகணக்குகளின் ஒருங்கிணைந்த பகுதியாகிய வங்கி மேலதிகப்பற்றுகள் காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமனானவைகளை உள்ளடக்கியிருக்கும். நிதி நிலைமைக் கூற்றில், வங்கி மேலதிகப்பற்று பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும். சபை எந்தவொரு வங்கியிடமிருந்தும் மேலதிகப்பற்றினைப் பெற்றிருக்கவில்லை. எனினும் புத்தகத்தின் மேலதிகப்பற்று ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது.

## 25 தக்கவைத்த உழைப்புகள்

## 26 கிடைக்கப்பெறும் விற்பனைக்கான ஒதுக்குகள்

விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்குகள். விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்குகள் விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் திரட்டிய தேறிய மாற்றத்தை உள்ளடக்கியிருக்கும் மற்றும் அந்த குறிப்பிட்ட சொத்துகள் நீக்க அல்லது மதிப்பு குறைப்பு செய்யும் வரை முன் கொண்டு செல்லப்படும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 27 ஒதுக்குகளின் மீள்மதிப்பீடு

ஏனைய ஒதுக்குகள் LKAS 19 இன் (ஊழியர் நன்மைகள்) ஊடாக கோரப்படும் பணிக்கொடை பொறுப்பின மதிப்பிலிருந்து எழும் உண்மை ஈட்டுகைகளை/ (நட்டங்களை) உள்ளடக்கியிருக்கும்.

## 28 காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள்

கணக்கீட்டு கொள்கை – தேறிய உழைக்கப்படாத தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடுகள். உழைக்கப்படாத தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடுகள், இதுவரை காலாவதியான இடர்களுக்காக கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும். பொதுவாக, ஒதுக்கானது ஒப்பந்தம் காலப்பகுதியில் வெளியிடப்படுகின்றதுடன் தவணைக் கட்டண வருமானமாக இனங்காணப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், சபை உழைக்கப்படாத தவணைக்கட்டணத்தின் மீது பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் செலவு மற்றும் எதிர்பாராத கோரிக்கைகளின் ஏதேனும் மொத்த மிகையினைத் தீர்மானிப்பதற்கு அதனுடைய காலாவதியாகத இடர் மற்றும் பொறுப்பு போதுமைப் பரீட்சையை செயற்படுத்துகின்றது. ஆயுள் அல்லாத காப்புறுதி தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்குரிய தொடர்புடைய சொத்துகளின் மீது எதிர்பார்க்கும் முதலீட்டு பெறுபேற்றினைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் எதிர்கால ஒப்பந்த காசுப்பாச்சல்களின் தற்போதைய மதிப்பீடுகளை கணிப்பீடு பயன்படுத்தும். இந்த மதிப்பீடானது, உழைக்கப்படாத தவணைக்கட்டணங்கள் கொண்டு செல்லும் தொகை போதாவில்லையெனக் காட்டினால், பொறுப்பு போதுமானதாக இருப்பதற்கான ஏற்பாட்டை அமைப்பதன் மூலம் இலாபம் அல்லது இழப்பு அறிக்கையில் குறைபாடு அங்கீகரிக்கப்படுகின்றது

SLFRS 4 இன் தேவைக்கேற்ப காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு ஏற்ப, சபையினால் வெளிவாரி செயற்பாடொன்றின் துணையுடன் ஆயுள் அல்லாத கடன் ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, சபையின் பொறுப்பு தொடர்பிலான போதுமானளவு பரீட்சிப்பு (LAT) இனால் மேற்கொள்ளப்படுகிறது.

கணக்கியல் கொள்கை - மொத்த நிலுவையில் உள்ள உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு ஒப்பந்தங்களுக்கு முற்படும் போது மற்றும் தவணைக் கட்டணங்களை அறவிடும் போது ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த பொறுப்புகள் நிலுவையில் உள்ள உரிமைகோரல் ஏற்பாடுகள் என அறியப்படுகின்றதோடு, அவை அறிக்கையிடப்பட்டுள்ள அல்லது அறிக்கையிடப்படாதவை என்ற அடிப்படையில் இருந்தாலும், குறிப்பிடப்பட்ட உரிமைகோரல்களை கையாளும் செலவுகள் மற்றும் மீட்பில் எதிர்பார்க்கப்படும் பெறுமதியைக் குறைத்தல் மற்றும் பிற மீட்டெடுப்புகள் அறிக்கையிடப்படும் திகதிக்கு தீர்க்கப்படாத சகல உரிமைகோரல்களினதும் மதிப்பிடப்பட்ட இறுதி செலவை அடிப்படையாகக் கொண்டு காணப்படும்.

பணத்தின் நேரப் பெறுமதிக்கான பொறுப்பு தள்ளுபடி செய்யப்படவில்லை. சமநிலைத்தன்மை அல்லது பேரிடர் இருப்புக்கான எந்தவொரு ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தம் காலாவதியாகும் போது, விடுவிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்படும் போது பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

கணக்கியல் கொள்கை - மொத்தமாக இடம்பெற்றுள்ள ஆனால் அறிக்கையிடப்படாத உரிமைகோரல்களுக்கான ஏற்பாடுகள் ஒருசில வகையான உரிமைகோரல்களை அறிவித்தல் மற்றும் தீர்க்கப்படும் போது ஏற்படும் தாமதங்களை அனுபவிக்க முடியும், எனவே இவற்றின் இறுதி செலவை அறிக்கையிடும் திகதியில் உறுதியாக அறிந்து கொள்ள முடியாதுள்ளது. அனுபவத் தரவுகள் மற்றும் பாதகமான விலகலுக்கன விளிம்பை உள்ளடக்கிய தற்போதைய அனுமானங்களின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு உரிமைகோரல் இயல்பான உரிமைகோரல் திட்ட நுட்பங்களைப் பயன்படுத்தி அறிக்கை திகதியில் பொறுப்பு கணக்கிடப்படுகிறது.

ஆயுள் அல்லாத காப்புறுதி ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, அறிக்கையிடல் திகதியில் அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்படும் இறுதி உரிமைகோரல் செலவு மற்றும் அறிக்கையிடல் திகதியில் அறிக்கையிடப்படாத (IBNR) உரிமைகோரல்களின் எதிர்பார்க்கப்படும் இறுதி செலவு ஆகிய இரண்டினையும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இறுதி உரிமைகோரல் செலவு உறுதியுடன் நிறுவப்படுவதற்கு முன்னர் அதற்கு சில காலம் அவகாசம் எடுக்கும் என்பதோடு ஏதேனும் ஒரு விதத்திலான கொள்கைக்காக, IBNR உரிமைகோரல்கள் நிதி நிலை அறிக்கையில் பெரும்பான்மையான பொறுப்புக்களை ஏற்படுத்துகின்றன.

சங்கிலித் தொடர் ஏணி முறை, போர்ன்ஹீட்டர் - பெர்குசன் முறை மற்றும் அதிர்வெண் / தீவிரத்தன்மை முறை போன்ற நிலையான இயல்பான உரிமைகோரல் திட்ட நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலுவையில் உள்ள உரிமைகோரல்களின் இறுதிச் செலவு மதிப்பிடப்படுகிறது.

இந்த முறைமைகளுக்கு கீழ் உள்ள முக்கிய அனுமானம் என்னவென்றால், ஒரு நிறுவனத்தின் கடந்தகால உரிமைகோரல் விருத்தி அனுபவம் எதிர்கால உரிமைகோரல் விருத்தியை திட்டமிட்டு பயன்படுத்தப்படலாம், எனவே இறுதி உரிமைகோரல்கள் செலவுகளாகும். எனவே, இந்த முறை மூலம் செலுத்தப்பட்ட பணம் மற்றும் ஏற்பட்ட நட்டங்கள், உரிமைகோரலுக்கான சாதாரண செலவுகள் மற்றும் உரிமைகோரல் எண்களின் அடிப்படையில், முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுள்ள அபிவிருத்திகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. வரலாற்று உரிமைகோரல் விருத்தி முக்கியமாக பகுப்பாய்வு செய்யப்படுவது திடீர் விபத்துக்கள் நடைபெற்ற வருடங்களுக்கிடையே, புவியியல் பிரதேசங்களைப் போன்றே குறிப்பிடத்தக்க வணிக கோடுகள் மற்றும் உரிமைகோரல் வகைகள் மூலம் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்யப்பட முடியும். பேரிய உரிமைகோரல்கள் வழக்கமாக தனித்தனியாக அழைக்கப்படுகின்றதோடு, அவை நட்டங்களை சீராக்கம் செய்யும் மதிப்பீடுகளில் முகப்பெறுமதியை வேறுபடுத்துவதன் மூலமாகவோ அல்லது அவற்றின் எதிர்கால வளர்ச்சியை மறுபரிசீலனை செய்வதற்காக வெவ்வேறாக திட்டமிடப்படுள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், உரிமைகோரல்கள் அல்லது நட்ட விகிதங்களில் எதிர்கால உரிமைகோரல்கள் குறித்து வெளிப்படையான அனுமானங்கள் எதுவும் செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் அனுமானங்கள் கணிப்பதனை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று உரிமைகோரல் விருத்தித் தரவுகளில் பொதிந்துள்ளது.

எதிர்கால போக்குகள் குறித்து எதிர்காலத்தில் எந்த அளவுக்கு பொருந்தாது என்பதை மதிப்பிடுவதற்காக மேலதிக தரமான தீர்ப்பு பயன்படுத்தப்படுகிறது, (உதாரணமாக, ஒரு தடவையில் நிகழ்வுகளை மீள கவனம் செலுத்துதல், உரிமைகோரலுக்கு பொது மக்களின் மனப்பாங்கு, பொருளாதார நிலைமைகள், உரிமைகோரலுக்கு மட்டம் போன்ற வெளிவார் அல்லது சந்தைக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள், நீதிமன்றத் தீர்ப்புக்கள் மற்றும் சட்டத் தொகுப்புக்களைப் போன்றே இலாக்கா கலவை, கொள்கை சார்ந்த அம்சங்கள் மற்றும் உரிமைகோரல்களைக் கையாளும் நடைமுறைகள் போன்ற உள்ளக காரணிகள்) மதிப்பிடப்பட்ட இறுதி உரிமைகோரல் செலவுகளை அடைவதற்காக, ஏற்பட முடியுமான விளைவுகளின் வரம்பிலிருந்து சாத்தியமான விளைவுகளை முன்வைக்கும் உரிமைகோரல்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளாகும்.

கண்டுபிடிக்கப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகளில் போதுமான மதிப்பீட்டில் இதே போன்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

காப்புறுதி ஒப்பந்தக் கடன்கள் தொடர்பான உரிமைகோரல் விருத்தி அட்டவணைகள் மற்றும் உணர்திறன் பகுப்பாய்வுகள் என்பன அனர்த்த முகாமைத்துவக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**28.1 காப்புறுதி ஒப்பந்தக் கடன்கள்**

**28.2 தேறிய ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஏற்பாடு**

**28.3 மோத்த நிலுவை உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு**

**28.4 மொத்த ஐடீசே க்கான உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு**

**28.5 காப்புறுதி வழங்கல் மற்றும் தொழில்நுட்ப இருப்புக்களுக்கு இடையிலான நல்லிணக்கம்**

**28.6 பொறுப்புக்கள் போதுமானளவு பரிசோதனை**

2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு SLFRS 4 – காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு அமைய தொழில்துறை நடவடிக்கைகளுக்குரிய நிறுவனமான NMG நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் பொறுப்புக்கள் போதுமானளவு பரிசோதனை (LAT) இனால் மேற்கொள்ளப்பட்டுள்ளது, கொண்டு செல்லும் போதுமானளவு மதிப்பிடுவதற்காக காப்புறுதி ஒப்பந்தத்தில் தெளிவுபடுத்தப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகளாகும். மதிப்பீடு செய்யும் நடவடிக்கை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு முறையின் அடிப்படையில் அமைந்துள்ளதோடு, அது காலாண்டு அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றது. ஜேஎு நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, சபையினால் முன்வைத்தத பொறுப்பு போதுமானதாக இருந்தது. எனவே, 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான கட்டுப்பணத்தைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை (2018 - இல்லை). 28.7 IBNR மற்றும் IBNER இனால் மதிப்பீடு 2019 திசெம்பர் மாதம் 31.

**28.7** IBNR மற்றும் IBNER இனால் மதிப்பீடு 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் NMG நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் அறிக்கையிடப்படாத உரிமைகோரல் இருப்புக்களின் செயற்பாட்டு ரீதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

**28.8** அனுமானங்களில் மாற்றங்கள் ஏற்படல் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய நிலவரப்படி நிலுவைக்கான முன்னைய மதிப்பீட்டிலிருந்து பொருள் மதிப்பீட்டு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**29 ஊழியர் வரையறுக்கப்பட்ட நலன்களுக்கான உரிமைகள**

வரையறுக்கப்பட்ட நலன்களுக்கான திட்டம் என பிந்தைய வேலைவாய்ப்பில் ஈடுபடுகின்ற ஒரு திட்டமாகக் காணப்படுவதோடு, பங்களிப்பு அல்லாத திட்டத்தைச் சாராத மற்றொரு திட்டமாகும். திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் நிதி அறிக்கைகளில் அடையாளங் காணப்பட்டுள்ள பொறுப்புக்காக அறிக்கையிடப்படும் திகதிக்கு ஏற்ப பொறுப்புக்களின் தற்போதைய பெறுமதியாகும். LKAS 19 – ஊழியர் நலன்கள் திட்டமிடப்பட்ட அலகுக் கடன் (PUC) முறையைப் பயன்படுத்தி, அறிக்கையிடப்படும் திகதிக்கு ஏற்ப, பொறுப்புக்களின் பெறுமதி உசிதமான சட்டமொன்றின் மூலம் கணக்கிடப்படுகின்றன. ஒரு நடைமுறை மதிப்பீட்டில் விலைக்கழிவு வீதம், சம்பள உயர்வு வீதம் மற்றும் ஊழியர்களின் இருப்பு சேவைக் காலம் பற்றிய அனுமானங்களைச் செய்வதும் அடங்குகின்றன. திட்டங்களின் நீண்டகாலத் தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கும் உட்பட்டவையாகும்.

செயற்பாட்டு அனுகூலங்கள் மற்றும் நட்டங்களை உள்ளடக்கிய தேறிய கடன்களை மீள கணக்கிடுதல், அவை எழும் காலப் பகுதியினுள் விரிவான வருமான அறிக்கையில் விதிக்கப்படுகிறது அல்லது வரவு வைக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் படி, ஒரு ஊழியருக்கு பணிக்கொடை செலுத்துவதற்கான பொறுப்பு, ஊழியர் சபையுடன் இணைந்து 5 வருடங்கள் தொடர்ச்சியான சேவையை முழுமையாக நிறைவேற்றியதன் பின்னரே எழுகின்றது.

சபையின் நிதி ஒதுக்கீட்டுக்குப் புறம்பாக நிதி வழங்கும் நடவடிக்கை இடம்பெறுவதில்லை.

**பிரதான கணிப்பீட்டு அனுமானங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.**

| **கணிப்பீட்டுத் தகவல்கள்** | **2019** | **2018** |
|---|---|---|
| அ. கழிவு வீதம் | 10.77% | 12.39% |
| ஆ. சம்பள உயர்வு | 9.80% | 12.00% |
| இ. இறப்பு விகிதங்கள் | நிரந்தர உத்தரவாதம், ஆண்கள், ஒருங்கிணைந்த – ஏ1967 -70 | |
| ஈ. அங்கவீன வீதம் | அங்கவீன வீதங்கள் எதனையும் நாங்கள் கருதவில்லை. | |
| உ. மீள்பெறுகை வீதம் | | |
| வயது வீச்சு | | |
| 0 – 20 | 0.0% | 0.0% |
| 20 – 25 | 0.0% | 2.5% |
| 25 – 30 | 1.6% | 3.2% |
| 30 – 35 | 1.8% | 2.5% |
| 35 – 40 | 1.4% | 2.1% |
| 40 – 45 | 0.0% | 1.5% |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

| ஊழியர் தகவல்கள் | 2019 | 2018 |
|---|---|---|
| 45 - 50 | 0.0% | 0.5% |
| 50 - 55 | 0.0% | 0.0% |
| 55 - 100 | 0.0% | 0.0% |

| ஊழியர் தகவல்கள் | | |
|---|---|---|
| அ. சராசரி வயது | 34.3 | 34.9 |
| ஆ. சராசரி சேவைக் காலம் (வருடங்கள்) | 6.5 | 7.1 |
| இ. எதிர்பார்கக்கும் எதிர்கால ஆயுட்காலம் (வருடங்கள்) | 15.99 | 16.63 |
| ஈ. ஊழியர்களின் எண்ணிக்கை | 239 | 185 |

## 30 பிற நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்புகளை அடையாளங் காண்பது சபையின் கடன்கள் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவைகள் மற்றும் கடன் பத்திரங்கள் அவை வெளியிடப்பட்ட திகதி முதல் அடையாளப்படுத்தப்படுகின்றன. உபகரணங்களின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு நிறுவனம் தரப்பினராக நியமிக்கப்படும் போது ஏனைய சகல நிதிப் பொறுப்புக்களும் சந்தைத் திகதியில் அடையாளப்படுத்தப்படுகின்றது. பிற தோற்றுவாய்கள் அற்ற நிதிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் அளவிடப்படும் என்பதோடு நேரடி பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கல்களின் செலவுகள் குறைவான பெறுமதியே காட்டும். ஆரம்ப அடையாளப்படுத்துகைக்குப் பின்னர், இந்த பொறுப்புகள் இலாபகரமான வட்டி முறையைப் பயன்படுத்தி கடன் தீர்ப்புச் செலவின் கீழ் அளவிடப்படுகின்றது.

பிற நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய தரப்பினர்கள், ஊதியங்கள் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை உள்ளிட்ட விலைக் கழிவுத் தொகைகளில் உள்ளடக்கப்படுகின்றது.

பிற நிதிக் கடன்களை இரத்துச் செய்வதன் கீழுள்ள பொறுப்புகளில் இருந்து விடுதலை பெறும் போது அல்லது இரத்துச் செய்யும் போது அல்லது காலாவதியாகும் போது நிதிப் பொறுப்புக்கள் இனங்காணப்படுகின்றன. ஏற்கனவே உள்ள நிதிப் பொறுப்பு, ஒரே கடனளிப்பவரிடமிருந்து கணிசமான அளவு வேறுபட்ட நிபந்தனைகள் மாற்றப்பட்டால் அல்லது நிலவுகின்ற பொறுப்பின் விதிகளை கவனத்திற் கொள்ளத்தக்க வகையில் மாற்றியமைக்கப்படும் போது, அவ்வாறான பரிமாற்றம் அல்லது வடிவமைப்பின் ஆரம்பப் பொறுப்பை அடையாளங் காணப்பட்டதாக கருதப்படுவதோடு, புதிய பொறுப்பு மற்றும் தொடர்புடைய கொண்டு செல்லும் அளவில் உள்ள வேறுபாடு இலாப மற்றும் நட்ட அறிக்கையில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

## 31 ஏனைய பொறுப்புகள்

கணக்கியல் கொள்கை – பிற பொறுப்புகளில் வருமான வரியைத் தவிர செலுத்தப்பட வேண்டிய வேறு அரசாங்க வரிகளும் ஏனைய கடன்களும் இப்பொறுப்பினுள் LKAS 39 இற்கமைய நிதிப் பொறுப்பாக அமையாது – நிதி உபகரணங்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடாக உள்ளது. இப்பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதிக்கு செலுத்தப்பட வேண்டியவை என எதிர்பார்க்கபடும் அளவு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 32 மீள்காப்புறுதி செலுத்துகைகள்

கணக்கியல் கொள்கை – மீள்காப்புறுதி செலுத்துகைகளை இனங்காணல் மற்றும் அளவிடுதல் மீள்காப்புறுதி பொறுப்புகள் காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஒப்பந்த உரிமைகள் நீக்கப்படும் போது அல்லது காலாவதியாகும் போது அல்லது ஒப்பந்தம் வேறொரு தரப்பினருக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

## 33 வருமான வரி செலுத்தத்தக்கது

கணக்கியல் கொள்கை – செலுத்தப்பட வேண்டிய வருமான வரி நடப்பு காலப் பகுதிக்காக நிலவும் வருமான வரிக் கடன்கள் அளவிடப்படுவது வரிவிதிப்பு அதிகாரிகளுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையிலாகும். வரிக் கணக்கெடுப்பு மற்றும் வரியை கணக்கிடுவதற்காக பயன்படுத்தப்படும் வரிச் சட்டங்கள் என்பன சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வரி அறவிடப்பட முடியுமான வருமானங்களை ஈட்டும் நாடுகளின் அறிக்கையிடும் திகதியின் போதே வலுவிலிருக்கும் அல்லது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய வகையில் வலுவிலிருப்பவையாகும்.

பங்குகள் அல்லது பிற விரிவான வருமானத்தில் நேரடியாக கண்டறியப்பட்டுள்ள பொருட்களுக்கு உரித்தான தற்போதைய வருமான வரிப் பங்குகள் மற்றும் பிற விரிவான வருமானத்தில் அறியப்பட்டுள்ளதுடன், அவை இலாபம் அல்லது நட்ட அறிக்கையில் காணப்படுவதில்லை. குறித்த வரி விதிமுறைகளின் விளக்கத்திற்கு உட்பட்ட சந்தர்ப்பங்களில் தொடர்புடைய வரி வருமானத்தில் எடுக்கப்பட்ட நிலைகளை நிர்வாகம் அவ்வப்போது முகாமைத்துவம் செய்து மதிப்பீடு செய்யப்படுவதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஏற்பாடுகளும் நிறுவப்படுகின்றது.

## 34 வங்கி மிகைபற்றுகள்

பண முகாமை மற்றும் சேமிப்புக் கணக்குகளின் கட்டாயமான ஒரு பிரிவாகக் காணப்படும் வங்கி மிகைபற்றுகள், காசுப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கங்களுக்காக காசும் காசையொத்தவைகளும் அதன் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையில், வங்கி மிகைபற்றுகள் பொறுப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வங்கி மிகைபற்றுகள் எதுவும சபையிடம் காணப்படுவதில்லை. இருப்பினும் புத்தக மிகைபற்று நிலுவைகள் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 35 அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்

கணக்கியல் கொள்கை - அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள் அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு ஏற்படும் நிகழ்வுகள், சாதகமான அல்லது பாதகமான நிகழ்வுகளுக்கிடையே அவை அறிக்கையிடும் திகதி மற்றும் நிதி அறிக்கைகள் வெளியிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்படும் திகதிக்கிடையே நடைபெறுகின்றது.

அனைத்து பொருள்களும் பின்னர் அறிக்கையிடும் திகதியில் ஏற்படும் நிகழ்வுகளை கவனத்திற் கொண்டுள்ளதோடு, உசிதமான சந்தர்ப்பங்களில் நிதி அறிக்கைகளுக்காக குறித்த பதிவுகளில் மாற்றங்கள் மற்றும் வெளிப்பாடுகளை மேற்கொள்ளல் இடம்பெற்றுள்ளது.

உரிமைகோரல்களுக்கான நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளும் மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையான சந்தர்ப்பங்களில் நிதி அறிக்கையில் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 36 குத்தகைகள் - SLFRS 16

ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னர் அல்லது ஏதேனும் குத்தகைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சீராக்கம் செய்யப்பட்ட குத்தகைப் பொறுப்புத் தொகையில் ஆரம்பத் தொகையையும், ஏதேனும் ஆரம்ப நேரடி கிரயங்கள் உறற்றப்பட்டதாயின் அவற்றை உள்ளடக்கியுள்ள சொத்துக்களைப் பயன்படுத்தவதற்கான உரிமை ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படும். சொத்தின் பயன்படுத்தும் உரிமையானது நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி ஆரம்பித்த தினத்தில் இருந்து சொத்தினைப் பயன்படுத்தும் உரிமையின் பயனுள்ள ஆயுள் முடிவடையும் தினம் அல்லது குத்தகை தவணைக் கட்டணங்கள் முடிவடையும் தினம் அதில் எது முன்னர் வருகின்றதோ அதுவரை தேய்மானம் செய்யப்படும்.

குத்தகை பொறுப்பானது முதலில் அது ஆரம்பிக்கும் திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் ெ காடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில், குத்தகையின் மறைமுகமான வட்டி வீதத்தைப் பயன்படுத்தி தள்ளுபடி செய்யப்படுகின்றது, அல்லது அந்த விகிதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாவிட்டால், அதிகரிக்கும் கடன் வீதத்தில் அளவிடப்படும்,

குத்தகைதாரராக நிதியம் எஸ்எல்எப்ஆர்எஸ் 16ஐப் பிரயோகிக்கும் - 01 ஜனவரி 2019 இருந்து பயனுறுதிபெறும் குத்தகைகள் பின்னோ்கிய அணுகுமுறையைப் பயன்படுத்தி திருத்தப்பட்டதுடன், அதனால் ஒப்பீட்டுத் தகவல்கள் வழங்கப்படவில்லை.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2019 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 1 மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்கள்

**1.1** வருடத்திற்கான தவணைக் கட்டண வருமானம் பிரதான வியாபார வகைகளாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| உள்முக மீள்காப்புறுதி | **4,173,714,909** | 4,056,395,150 |
| SRCC & Tr தவணைக் கட்டணம் | **6,307,350,365** | 4,581,640,544 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | **390,150,125** | 422,117,039 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | **301,979,246** | 103,722,015 |
| தேசிய இயற்கை அனர்த்தத் திட்டம (NNDIS) | **1,500,000,000** | 500,000,000 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான மருத்துவத் திட்டம் | **20,000,000** | 20,000,000 |
| | **12,693,194,645** | 9,683,874,748 |

**1.2 அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு சேகரிக்கப்பட்டது**

| | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
